www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

செப்.13–19,1998

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 274

## குறிவைக்கும் நகர்வுகள்!

## சர்வதேசப் புதைகுழி!



## அந்நியர்?





## டெண்டுல்கர் நடிகராவாரா?

## வினிதா ஏமாற்றம்

## மாங்குளச் சமர்

www.padippakam.com

# முரசம்

## அவலப் பரவலாக்கல்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

வன்னி நிலவரம்
கவலைக்கிடமாக மாறியுள்ளது!
நிவாரண நிறுத்தம்
என்ற பெயரில்
பொருளாதார முற்றுகை
மேற்கொள்ளப்பட்டுள்ளது!
வன்னிமக்கள் சிலர்
தங்கள் கைகளில்
எடுத்துச் சென்ற
எரிபொருட்களைக்கூட
தடை அரணில் வைத்து
படையினர் தடுத்துள்ளனர்!
வீட்டுப் பாவனைக்கு
தேவையானளவு
மண்ணெண்ணெய் போன்றவற்றை
கொண்டுசெல்லவும்
தடையெனில்; இது
யாருக்கு எதிரானது?
தமிழ் மக்கள்மீதான
கட்டுப்பாட்டு விதிகளை
யார் வேண்டுமானாலும்
விதிக்க முடிகிறது!
தடை முகாமில் உள்ள
சிப்பாய்கூட
சட்டம் இயற்றலாம்!
தன் இஷ்டப்படி
விதிமுறை வகுக்கலாம்!
இதற்கிடையே
பாதுகாப்பு அமைச்சு
விடுத்துள்ள அறிக்கை
விபரீதமாக இருக்கிறது!
'வன்னிக்கு
நிவாரண நிறுத்தம் நடந்தும்
யாரும் சாகவில்லை;
ஆகவே பாதிப்பில்லை!'
என்று கூறியுள்ளது
பாதுகாப்பமைச்சு!
கடல் விழிப்பாக
இருக்கிறதா என்று அறிய
கொள்ளிக்கட்டை வைத்துப்
பார்த்த கதைபோல
இருக்கிறது அறிக்கை!
பட்டினிச்சாவு
இல்லையென்றால்
போதிய உணவு கிடைப்பதாக
அர்த்தமாம்!
மிக வக்கிரமான
ஒரு விளக்கம் இது!
'பூனைக்கு விளையாட்டு
சுண்டெலிக்கு
சீவன் போகுது!'
என்பார்களே அதுதான்!
"போர் என்றால் போர்
சமாதானம் என்றால்
சமாதானம்!" என்றவர்
ஜே. ஆர். ஜயவர்த்தனே!
அக் கூற்றை எதிர்த்து
கூட்டணி உட்பட
சகல இயக்கங்களும்
கிளர்ந்தெழுந்தன அன்று!
இன்று அதையெல்லாம்
தூக்கிச் சாப்பிடும் அளவுக்கு
வார்த்தைப் பிரயோகங்களும்
அணுகுமுறைகளும்
மேலோங்கி வருகின்றன!
கூட்டணியும், அதன் வழி
இன்று நடக்கும்
தமிழ்க் கட்சிகளும்
காதில் விழாததுபோல
கண்டும் காணாதது போல
காட்சி தருகின்றன!
எந்த மழை பெய்தாலும்
நகராது எருமை மாடுகள்!
தமிழ்க் கட்சிகளுக்கு
அவற்றை உதாரணம்
கூறுவதாக அர்த்தமில்லை!
அப்படி மக்கள் கூறும்
நிலை வந்துவிட்டதே
என்றுதான் வருத்தம்!
அவலங்கள் பரவலாகிக்
கொண்டிருக்கின்றன!
தமிழ்க் கட்சிகள்
நீதியமைச்சரிடம்
அதிகாரப் பரவலாக்கல்
கதை கேட்டு இன்புறுகின்றன!
அதிகாரம் எப்போதோ
பரவலாகிவிட்டது.
தடை அரணில் உள்ள
சிப்பாய்கூட
புது விதிகள் போடுமளவுக்கு-
உலகில் வேறெங்கு
அதிகாரம் பரவலாகியுள்ளது?!
அரசாங்கம்
தமிழ்மக்களுக்கு
அறிமுகப்படுத்தியுள்ள
அதிகாரப் பரவலாக்கல்
இவைதான்!

-★-

மறைந்தும் மறையாத
மனிதகுல மாணிக்கம்
அன்னை தெரேசா!
தூய தொண்டுள்ளத்தின்
சொந்தக்காரி!
துவளாத பணி செய்த
தூண்டாமணி விளக்கு!
தன்னை உருக்கி
பொது ஒளி தந்த
மெழுகுவர்த்தி!
முரசு வாசக நெஞ்சங்கள் சார்பாக
ஓராண்டு நினைவு
இதய அஞ்சலி!
வாழ்கிறாய் தாயே!
வாழ்வாய் தாயே!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்



# ஆன்மீகம்

## பலன் தரும் நல்வினைப் பயன்

'தர்மம்' என்பது என்ன? பலன் கருதாத உதவி.

'கருமம்' என்பது பலன் கருதாத கடமை. எந்தப் பலனும் கருதக்கூடாது.

"மகாராஜன் நல்லா இருக்கணும்" என்று வாழ்த்துவார்கள்; பெற்றுக் கொண்டவர்கள். அந்தப் பலனையும் எதிர்பார்க்கக் கூடாது.

சிலர் பெற்றுக்கொண்டே திட்டுவார்கள். அதைப் பற்றியும் கவலைப் படக்கூடாது.'அடப்பாவி நான் எவ்வளவு உதவி செய்திருக்கிறேன். என்னைப் போய்த் திட்டுகிறானே?' என்று சொல்லக்கூடாது. உண்மையில் அதுவும் ஒருவகை யோகம்தான்.

நன்றியை எதிர்பாராதே. நன்றி கெட்டவனை மன்னித்து விடு. எந்தச் சூழ்நிலையிலும் நமது கடமையைச் செய்து விட்டோம் என்று திருப்தியடையுங்கள். இதுவே யோகம்.

லௌகீக வாழ்வில் ஒரு மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய தர்மம் இது. ஓர் இந்து தங்கள் வீடு அகதிகளும், அதிதிகளும் ஆபத்தில் தங்குவதற்காக என்று கருதவேண்டும். தன்னுணவு பங்கிட்டுச் சாப்பிடவே என்று எண்ண வேண்டும்.

செல்வம் செல்லக்கூடியது. தங்கம் தங்காதது. தங்கக் கூடியது நல்வினைப் பயன் ஒன்று மட்டுமே!

தொகுப்பு: அ. அரசரெத்தினம், சேனையூர்-06.



## நபியவர்களின் நடைமுறைகள்

ஒரு நாள் ஹஸரத் அலி (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் 'உங்கள் நடைமுறைகள் எவை' யெனக் கேட்டபோது அதற்கு நபிகளார் அவர்கள் இப்படித்தான் பதிலுரைத்தார்கள்.
அவைகள்தான் இவைகள்...

வழிபாடு என் விருப்பம்
கல்வி என் ஆயுதம்
ஞானம் என் மூலதனம்!

கவலை என் நண்பன்
பொறுமை என் போர்வை
தியாகம் என் பண்பு
இயலாமை என் பெருமை
தொழுகை என் கண்குளிர்ச்சி

இறைக்காதல் என் வாகனம்
இறைஉறுதி என் புதையல்
இறைநம்பிக்கை என் உணவு
இறைநேசம் என் அடிப்படை
இறைப்பொருத்தம்
என் வெற்றிப்பொருள்!

உண்மை என் பரிந்துரை
பகுத்தறிவு என் தீனின் வேர்
திக்ரு செய்தல் என் நிம்மதி!

ஆதாரத்தோடு- மு.ப்லிஹா இசார்தீன், அட்டாளைச்சேனை-10.

## கவிதைப் போட்டி இல.271

### பரிசுக்குரிய கவிதை

#### நாம்....!

நாம் வாலில்லாத
குரங்குகளல்ல;
வாழ்விடம்
இழந்துபோன
வன்னிக் குழந்தைகள்...!

சகோ. சி.கி. டானியல்-
பிலிமத்தலாவ.



### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

#### துணிவு

கூடிழந்த குருவிகளும்
வீடிழந்த குழந்தைகளும்
பாதுகாப்பு இழந்தும்
பயமின்றி வாழும்!

செ. ஞானராசா-
சின்னப்பண்டிவிரிச்சான், மடு.

#### ஒத்திகை

அகதியாய் ஓடும்போது
அலை கடலில் போராட
ஓடையிலே ஓர்
ஒத்திகை!

அக்கரைச் சந்திரன்- மல்வத்தை.

#### எங்கே? எப்போது??

அந்த மரத்திலென்பார்
இந்தக் குளத்திலென்பார்-முடிவில்
அகதிகள் இவர்களுக்கு
ஆண்டவனே துணையென்பார்!

டி. ஜோர்ஜ்-லபுகலை.

#### மும் மணிகளின்...?

தரையில் மண்ணுள்
கடலில் அலையில்
என்றிருக்க....
மரத்திலுமா.....?

சுபா வரன்- கொழும்பு.

#### ஆடும் சுகம் தொடருமா?

வீரமுடன் மார்தட்டி
புறப்பட்ட மைந்தரெல்லாம்
அல்லல் பட்டு மக்கள்
நிர்க்கதியாகும் போதும்
கொழு கொம்பு பற்றி
வாழும் சுகம் கண்டனரோ?
மரம் கை நழுவிப் போக
மீளும் வழி எண்ணு வரோ?

ம. திருவரசுராசா- வவுனியா.

#### குளிர்ச்சிக்காக...!

போர் மேகம் தீயுமிழும்
இந்தத் திரு நாட்டில்
பிள்ளைகள் காட்டாற்றில்
பெற்றோ ரெல்லாம் நட்டாற்றில்!

அ. சந்தியாகோ- அசோகா
வித்தியாலயம், கண்டி.

#### தேர்தல்

தொங்கும் ஐவரில்
சிறந்தவர் யாரோ?
நன்றாகப் பார்த்து
போடுங்கம்மா வோட்டு!

சி.மணிமாறன்-
கொழும்பு-06.

#### யதார்த்தம்

மேலே பட்டமரம்...
கீழே நட்டாறு...
நடுவே தவிக்கிறோம்!

ந. ஜீவராஜ்- சுழிபுரம்.

#### அங்கே என்ன சத்தம்?

ஆலம் விழுது பற்றி
ஆலோலம் பாடுகிறீர்!
ஓலம்....கேட்கிறது..
ஊர் நடுவே...?
ஓடுங்கள்! ஓடுங்கள்!

கயல் வண்ணன்-வவுனியா.

#### வேண்டாம்

காணி நிலம் வேண்டாம்- பராசக்தி
காணி நிலம் வேண்டாம்!
பாதகர் யாருமிலா விடத்து-ஓர்
மரக்கொப்பது
க(ர)ட்டித் தந்தால் போதும்!

நாவலம்பதி செல்வ உமா.

#### முயற்சி

மண்ணெங்கும்
புதை குழிகள் கண்டு!
மரத்தில் வாழும்
முயற்சியா?

ம.குலசேகரன்-இறக்குவானை.

## கவிதைப் போட்டி இல.274



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 19.09.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.274
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

முரசே!

உன்னில் எதனைப் பாராட்டாமல் விடுவது? அத்தனையும் பாராட்டத் தகுந்ததே 'இலக்கிய நயம்' தரும் ரசிகன் யார் என்று இன்னுமே புலப்பட வில்லை. வாசகர்களின் சுவை அறிந்து சுஜாதாவின் 'மேற்கே ஒரு குற்றம்', ராஜேஸ்குமாரின் 'முள் நிலவு' தொடர்கள் தந்து எம்மை அடுத்த முரசு நாளையே கிடைக்காதா? என ஏங்க வைக்கிறாய்! என்றென்றும் வாழ்க உன் எழில்!

மாபோலை-
என்.ஷர்மிளா.

முரசே..!

நீ சுமந்து வரும் 'முள் நிலவு' தொடரில் 'நிலா'வின் வாழ்க்கையில் என்ன நடக்கப் போகின்றதோ! கவலையாக இருக்கின்றது. ஒவ்வொரு வாரமும் எதிர்பார்க்க தூண்டுகிறது. மற்றும் 'இடி அமீ'னின் தொடரும் இடியாகத்தான் இருக்கின்றது. 'மேற்கே ஒரு குற்றம்', 'சிந்தியா கேள்வி-பதில்' ஆகியவை சூப்பர்.

ஐ.எஸ். ஜெலீலா, நிந்தவூர்-03.




## சகலதும் துறந்தவர்கள்!

முரசே!

வன்னிக்கு நிவாரணம் நிறுத்தம் என்பதை அரசாங்கமே, ஏன் ஜனாதிபதியே ஒப்புக் கொண்டாயிற்று. அப்படி இருந்தும் சகலதும் துறந்து, பதவி ஆசை மட்டும் சுமந்து திரியும் தமிழ்க் கட்சிகளுக்கு சொரணை வரவில்லையே! இவர்களை வெறுக்கும் மக்கள், இவர்களுக்காக அனுதாபப்படக்கூட மாட்டார்கள். சொந்தமக்கள் பட்டினி போடப்படும்போது பார்த்திருக்கும் இவர்கள் ஜனநாயகவாதிகள் என தம்மைத் தாமே அழைப்பதும், மக்களிடம் புலம்பி அனுதாபம் தேட முற்படுவதும் இனியும் நடக்காது.

திருமதி வி. சரஸ்வதி, முல்லைத்தீவு.

## பாரதூரமான இடமாற்றம்

அன்புள்ள முரசுக்கு;

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளை அரசாங்கம் இடமாற்றம் செய்துள்ளது. மிகப் பாரதூரமான இந்த விடயம் தொடர்பாக தமிழ்க் கட்சிகள் வாயே திறக்கவில்லை. இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு சிறுபோராட்டம் நடத்தியிருக்கலாம். அதனால் இடமாற்றம் இரத்தாகுமா? என்று கேட்கக்கூடும். இடமாற்றத்தை இரத்துச் செய்வது அல்ல முக்கியம். அரசாங்கத்தின் தவறான நடவடிக்கையையும், புதைகுழி விவகாரத்தில் ஓரளவு நேர்மையாக நடக்க முற்பட்ட அதிகாரிகள் தூக்கிவீசப்பட்டதையும் ஊர் அறிய, உலகு அறியச் செய்திருக்கலாம். இன்று உலக அனுதாபத்தை திரட்டுவது முக்கியமல்லவா.

ஆர். பேரின்பநாதன், திருக்கோணமலை.

## பந்தாடப்பட்ட அதிகாரிகள்

முரசே!

மனித உரிமை ஆணைக்குழு தொடர்பான உனது கணிப்பை வெகு துரிதமாக அரசு உண்மையாக்கி விட்டது. யாழ்ப்பாண செம்மணி புதைகுழி தொடர்பாக நியாயமாகப் பேசியது குற்றம் என்று, இங்குள்ள அந்த ஆணைக்குழு அதிகாரிகளை பந்தாடிவிட்டது அரசாங்கம். எல்லாமே வெறும் வேஷம்.

சே. கோபிநாத், உரும்பிராய்.

## தூக்கி எறிவதில் வேகம்

செம்மணிப் புதைகுழியை தோண்டுவதற்கு அனுமதி கொடுக்க அரசுக்கு எத்தனை நாள் தேவைப்படுகிறது? ஆனால் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளை இடமாற்றம் செய்ய வேகத்தைப் பார்த்தீர்களா? புதைகுழி பற்றிப் பேசினால் தூக்கியெறியும் அரசிடமோ தமிழ்க் கட்சிகள் விசாரணை கேட்டு நிற்கின்றன? வேலிக்கு ஓணான் சாட்சியாகாது என்று தெரியாதா?

என். விமலராஜன்,
யாழ்ப்பாணம்.

## அவர் நம்புவாரா?

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவின் புகழைப் பரப்புவதில் சில தமிழ்க் கட்சிகள் இடையே போட்டி இருப்பது போலத் தெரிகிறது. ஆனால் அவர் இவர்களுடன், முரசு சொல்வதுபோல, 'நம்ப நட, நம்பி நடவாதே' என்னும் அணுகுமுறை வழியேதான் நடந்துகொள்வார். எத்தனை வாக்குறுதி கொடுத்தார். எப்போதாவது அரிதாக ஒன்றிரண்டு அதுவும் அரசுக்கு நலன் இருந்தால் மட்டும் நிறைவேறும். ஏனையவற்றுக்கு-காணாமல் போனோர் ஆணைக்குழு பற்றிய வாக்குறுதியின் கதிதான்.

தே. சிற்றம்பலம், கொழும்பு-12.

## உணவு வலை!

'வன்னி மக்களுக்கு உணவில்லை, யாழ் மக்களுக்கு தருகிறோம் என்று வலைவீசப்பட்டிருக்கிறது. வலை என்று தெரியாமல் சில பத்திரிகைகள் எந்தெந்த கட்சிகள் கேட்டதால் நிவாரணம் தரப்படுகிறது என்று பட்டியல் போட்டன. ஆனால் முரசு அவ்வாறு செய்யாமல், பிரித்தாளும் கலையை விளக்கியதற்கு நன்றி. யாழ் மக்களின் புத்திர, புத்திரிகள் கிடக்கும் புதைகுழிகளை தோண்ட வேண்டுமென்றே இழுத்தடிப்பவர்களுக்கு யாழ் மக்களில் என்ன கரிசனை? தமிழ்க் கட்சிகளும் சேர்ந்து ஏமாற்ற முனைந்தாலும் நாம் ஏமாற மாட்டோம்.

கே. சுதாகரன், யாழ்ப்பாணம்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# பேச்சுக்களுக்கான சூழ்நிலை இல்லை!

## போரைத் தொடர்வதில் அரசு தீவிரம்!

(அலுவலக நிருபர்)

பேச்சுக்கள் மூலம் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தாம் தயாராக இருப்பதாக புலிகள் கூறியுள்ளனர். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசியல் பேச்சுக்களை ஆரம்பிக்க புலிகள் தயாராக இருப்பதாகக் கூறி வருகின்றனர்.

கொழும்பு பத்திரிகையாளர்களுக்கு தமிழ்ச்செல்வன், அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் அளித்த பேட்டியிலும் மேற்கண்ட நிலைப்பாட்டையே வலியுறுத்தி இருந்தனர்.

இதனையடுத்தே இலங்கை அரசும், புலிகளும் பேச்சு நடத்துவதற்கான வாய்ப்பு உருவாகுமா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

அரசும், புலிகளும் பேச்சை ஆரம்பிக்கும் அறிகுறிகள் தோன்றி வருவதாக பி.பி.சி. வானொலி விமர்சகரும் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆனால், முரசின் கணிப்பின்படி அரசு புலிகளுடன் பேச்சு நடத்த தற்போதைக்கு முன்வரமாட்டாது என்பது தெளிவாகத் தெரிகிறது.

குறிப்பாக இந்த வருட இறுதிவரை யுத்தத்தில் ஒரு கைபார்க்கவே அரசு பிடிவாதமாக இருக்கும்.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கை அரசும், படைகளும் சம்பந்தப்பட்ட நடவடிக்கையாக மட்டுமல்லாமல், பௌத்த மதபீடங்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகவும் மாறியுள்ளது.

இந்நிலையில் தப்பித்தவறி அரசே விரும்பினால்கூட 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை நிறுத்த முடியாது.

### அனுமதி தேவை

"புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு இனிமேல் பௌத்த பீட அனுமதியும் அரசுக்குத் தேவை. தேர்தலை ஒத்திவைத்து போரை நடத்த பௌத்த பீடத் தலைவர்களது ஆதரவை நாடியது அரசாங்கம். இனி போரை நிறுத்துவதற்கும் அவர்களுடன் கலந்து ஆலோசிக்க வேண்டியது தவிர்க்க முடியாதது!" என்று பொதுவான அரசியல் நோக்கர்களும் கூறியுள்ளனர்.

### முடிவு இல்லை

"புலிகளை வெற்றிகொள்வதற்காக என்று தேர்தலை பின்போட்ட அரசு, புலிகளுடன் கைகுலுக்கினால் பேரினவாதிகளின் கடும் கோபத்துக்கு உள்ளாகும். எனவே 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையும் தற்போதைக்கு முடிவடையாது; பேச்சுவார்த்தையும் நடக்காது!" என்று அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

பேரினவாத சக்திகளிடம் உள்ள பயத்தினால்தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை அரசு நிராகரித்து வருகிறது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வருமானால் தற்போதைய பொதி போதுமானதல்ல. இன்றைய பொதியைக்கூட எதிர்க்கும் பேரினவாதிகள் இதற்கு மேம்பட்ட ஒன்றுக்கு ஆதரவளிக்கமாட்டார்கள். என்பதே அரசுக்குள்ள பயம் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

## இடமாற்றமும் சமாளிப்பும்

அரசின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் மாவட்ட பிரதிநிதிகள் இடம் மாற்றப்பட்டமை தெரிந்ததே.

செம்மணி புதைகுழி விடயத்தில் கூடுதல் ஆர்வம் காட்டியதே அவர்களது திடீர் இடமாற்றத்துக்குக் காரணம்.

இப்போது யாழ் மாவட்ட பிரதிநிதிகளாக தமிழர்கள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர். முன்பிருந்த மூவரும் சிங்கள இனத்தவர்களாவர்.

அவர்கள் சிங்கள இனத்தவர் என்பதால்தான் படையினரின் அதிருப்திக்கும், புலிகளுக்கு ஆதரவாளர்களோ என்ற சந்தேகத்திற்கும் பயப்படாமலும், உட்படாமலும் பிரச்சனை கிளப்பினர்.

திடீரென்று அவர்களை இடம்மாற்றியதால் சந்தேகங்கள் ஏற்பட்டன. தமிழர்களை நியமிக்கத்தான் அவர்களை இடம்மாற்றியதாக காண்பிக்கவே இப்போது தமிழர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது என்று கருதப்படுகிறது.

ஆனால் வடபகுதி புனரமைப்பு சபை உட்பட சகல பொறுப்புகளிலும் சிங்கள இனத்தவர்களே உள்ளனர். மனித உரிமை ஆணைக்குழு விடயத்தில் மட்டும் திடீர் இடமாற்றங்களும், தமிழர் நியமனமும் ஏன்? என்று கேள்வி எழுப்பப்படுகிறது. ■

## பெண் புலிகள் தாக்குதல்

யாழ் குடாநாட்டில் சோதனை அரணில் நின்ற படையினர் பெண் புலிகளின் பிஸ்டல் தாக்குதலுக்கு இலக்காகினர்.

29.08.98 அன்று பிற்பகல் இச்சம்பவம் நடைபெற்றது.

இரண்டு பெண்கள் வருவதை சோதனை அரணிலிருந்த படையினர் அவதானித்தனர். ஒரு பெண் கர்ப்பிணிப்பெண் போலக் காணப்பட்டார்.

அவர்களைச் சோதனையிட படையினர் அழைத்ததாகத் தெரிகிறது. சோதனைக்காக வருவதுபோல படையினரை நெருங்கிய பெண் புலிகள் திடீரென்று தமது பிஸ்டலை உருவி வெடிவைத்தனர்.

பின்னர் அருகிலுள்ள பனை வடலிகள் ஊடாக தப்பிச்சென்றுவிட்டனர். இத்தாக்குதல் பற்றி தகவல் கூறியுள்ள யாழ் படைத்தரப்பு, தம் தரப்பு சேதம் பற்றி எதுவும் கூறவில்லை.

இதேவேளை 29.08.98 அன்று யாழ் நெல்லியடியில் குண்டுத்தாக்குதல் ஒன்றில் இருபடையினர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது. ●

## "இந்தப் போர் முடிவுறாது!"

### அமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவிப்பு

நாட்டில் நடைபெற்று வரும் யுத்தத்துக்கு, வருடமொன்றுக்கு 5000 கோடி ரூபாவை அரசாங்கம் செலவிட்டு வருகிறது, போர் முடிந்துவிடுமானால் அத்தனை கோடி ரூபாவும் நாட்டின் அபிவிருத்திக்குச் செலவிடப்படலாம். ஆனால் இந்த யுத்தம் அத்தனை சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாதிருக்கிறது.

வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தித் துறை பிரதி அமைச்சர் மகிந்த விஜயசேகர இவ்வாறு கூறி விசனப்பட்டார். கண்டி கல்கந்தவத்தையில் வீடமைப்புத்திட்டம் ஒன்றினைத் தொடக்கி வைத்து உரையாற்றுகையில் இக்கருத்தை அவர் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

"பாரிய துயர விளைவுகளை ஏற்படுத்தும் இப்போரினை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம்– தங்கள் உரிமைகளுக்காகப் போரிடுவதாகக் கூறிக்கொள்பவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம். ஆனால் இந்நாட்டின் பெரும்பான்மை இனத்தின் உரிமைகளைப் புறக்கணித்துவிட்டு எவ்வித தீர்வினையும் ஏற்படுத்தலாகாது. பெரும்பான்மை இனத்தின் நலனுக்குக் குந்தகம் ஏற்படாதவகையில் எவற்றைக் கொடுக்க முடியுமோ அவற்றையே கொடுக்கலாம். இல்லையேல் நல்ல முடிவு கிடைக்கும் வரை யுத்தம் தொடர வேண்டியதுதான்!" என்றார். ■

## கருத்துக் கணிப்புக்கு வாய்ப்பில்லை!

### அரசின் அக்கறையும் அதுவல்ல!

விரைவில் தேர்தல் நடக்கும் என்று அரசாங்கம் கூறுவது மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிரான பிரசாரங்களை முறியடிப்பதற்கே என்று அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலா? மாகாணசபைத் தேர்தலா? முதலில் எதனை நடத்துவது என்பதை யுத்த நிலவரத்தை பொறுத்தே அரசு முடிவு செய்யும்.

இத் தேர்தல்களுக்கு முன்பாக தீர்வுப் பொதி தொடர்பான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்போவதாகக் கூறுவது சாத்தியமே இல்லாத ஒன்றாகும்.

தனது அதிகாரத்தை தொடர்ந்து தக்கவைக்கும் தேர்தல்களை நடத்துவதே அரசின் நோக்கம். அதற்கு முன்பாக தீர்வுப் பொதியை முன்வைத்து தேர்தல் நடத்தும் விஷப் பரீட்சையில் அரசு இறங்கவே மாட்டாது என்று திட்டவட்டமாகத் தெரிகிறது.

"ஐ.தே.கட்சியை மிரட்டவும், உலக சமூகத்திற்கு எட்டவுமாக கூறப்பட்டுவரும் விடயமே கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு. அது நடைபெறுவதற்கான வாய்ப்பு இல்லவே இல்லை" என்று அரசியல் விமர்சகர்கள் உறுதிபடக் கூறியுள்ளனர்.

## அமைச்சர் கூறியது நடக்கவில்லை!

### புதைகுழிகளுக்கு பாதுகாப்பு இல்லை!

செம்மணிப் புதைகுழிகள் உள்ள பகுதிக்கு பாதுகாப்பு வழங்க் உத்தரவிடப்பட்டுள்ளதாக பல வாரங்களுக்கு முன்னர் அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருந்தார். அச் செய்திகள் பெரிதாக வெளியாகி இருந்தன.

ஆனால் இதுவரை பொலிஸ் பாதுகாப்பு எதுவும் அப்பகுதிக்கு வழங்கப்படவில்லை. 08.08.98 அன்று யாழ்ப்பாண பத்திரிகைச் செய்தியில், இனிமேல்தான் பாதுகாப்பு வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணியில் தடயங்கள் அகற்றப்படுவதாக சந்தேகிக்கப்படுவதை அடுத்தே பாதுகாப்பு வழங்கப்பட உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் மங்கள சமரவீர கூறியது போல பாதுகாப்பு எதுவும் வழங்கப்படவில்லை என்பது இதன்மூலம் உறுதியாகியுள்ளது.

"புதைகுழி விடயத்தில் பாதுகாப்புத் தரப்பு சம்பந்தப்பட்டுள்ளதால், பொலிசாரின் பாதுகாப்பு சந்தேகங்களைப் போக்க மாட்டாது. அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புக்களது கண்காணிப்புக்குழு ஒன்றையே அப்பகுதிக்கு அனுப்பி இருக்க வேண்டும்!" என்று காணாமல் போனோரின் உறவினர் கள் கூறியுள்ளனர். ●

## ஆலயத்தில் வன்முறை! யுவதி பலி!

### திருவிழா இடை நிறுத்தம்!

மட்டக்களப்பு-வாழைச்சேனைப் பகுதி பலப்பரீட்சை நடத்தும் இடமாக மாறி பல அப்பாவி உயிர்களைக் காவு கொண்டு பலரைக் காயமுண்டாக்கி வாழ்க்கையை முடக்கியுள்ளது. இவ்வாறான பலப்பரீட்சை கடந்த வாரமும் இடைவிடாது தொடர்ந்தது.

வாழைச்சேனை-கொண்டையன்கேணி ஸ்ரீபால முருகன் தேவஸ்தான வழிபாட்டில் கலந்துவிட்டு ஆலயவளவில் வந்தமர்ந்திருந்த க. அஞ்சலாதேவி (22) எனும் யுவதியின் தலையில் துப்பாக்கிச் சூடு பட்டதும் துடிதுடித்து மரணமானார். ஆண்டவனின் ஆலயத்திலும் ஆயுத வன்முறையின் அட்டூழியம் அனைவரையும் கண்கலங்க வைத்தது.

பக்கத்திலிருந்த பொலிஸ் நிலையத்திலிருந்தே துப்பாக்கிச் சூடும், ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டிருப்பதாக பா.உ. துரைராஜசிங்கம் ஜனாதிபதிக்குப் புகார் தெரிவித்துள்ளார்.

எஸ். சந்திரகுமார் எனும் எட்டு வயதுச் சிறுவனையும் துப்பாக்கிச் சூடு பதம் பார்த்துக் காயமேற்படுத்தியிருக்கிறது. பொதுமக்கள் ஏழு பேரின் வீடுகள் ஷெல் தாக்குதலினால் சேதமடைந்துள்ளன.

கோயிலில் நடந்த இந்தக் கொடூர சம்பவத்தினைத் தொடர்ந்து திருவிழாவும், தீர்த்தோற்சவமும் நடைபெறாது எனத் தீர்மானிக்கப்பட்டது. இறைசந்நிதானத்தில் நிகழும் இத்தகைய கொடூர சம்பவங்களை அங்கு கூடியிருந்த பக்தர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள். இச்சம்பவம் 03.09.98 அன்றிரவு 9.30 அளவில் இடம்பெற்றது.

அதே தினம் பகல் வாழைச்சேனை-கறுவாக்கேணியில் வீதிப் பாதுகாப்புக்குச் சென்ற பொலிஸார் இருவர், புலிகளால் வைக்கப்பட்ட கிளைமோர் கண்ணிவெடியில் சிக்கிக் காயமடைந்தனர். இவர்கள் பொலன்னறுவை மருத்துவமனைக்கு விரையப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பதிலடித் துப்பாக்கிப் பிரயோகத்தில் ந. விமலராணி (17) எனும் யுவதி காயமடைந்தார். கண்ணி வெடி வெடித்த பகுதியைச் சூழவுள்ள பகுதியிலிருந்த ஏ.சாமித்தம்பி (65), ரி. அழகேசன் (20), எம். ரவீந்திரன் (25), என். ஞானராஜா (21) ஆகியோர் வாழைச்சேனைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை ஏறாவூரிலிருந்து மன்னம்பிட்டிக்கு வயல்வேலைக்காகச் சென்ற ஈ.அப்துல் றஷாக், வீ.மீரா முஹைதீன் ஆகிய இருவரும் 30.08.98 அரலஹங்வில எனுமிடத்தில் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ●

## மற்றொரு வதைமுகாம்

### இன்னொரு இளைஞர் விலங்குடன்!

(நமது நிருபர்)

வவுனியா கோமில்குளம் பகுதியில் வதை முகாம் ஒன்றில் காலில் விலங்குடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் பொலிசாரால் மீட்கப்பட்டார்.

இம் முகாமில் ஆயுதங்களுடன் பாதுகாப்புக்காக இருந்த இயக்க உறுப்பினர்கள் பொலிசாரைக் கண்டதும் ஆயுதங்களையும் கைவிட்டு தப்பியோடிவிட்டனர்.

28 வயதான கிருஷ்ணகுமார் என்பவரே கடந்த ஜூலை மாதம் 3ம் திகதி முதல் இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டிருந்தார். தன்னுடன் மேலும் எட்டுப்பேர் தடுத்துவைக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார். அண்மையில் அவர்களை வேறு முகாமுக்குக் கொண்டு சென்றுவிட்டனராம்.

தலைகீழாக் கட்டித் தொங்கவிட்டு மண் நிரப்பிய பைப்புகளால் மிக மோசமாக தாக்கப்பட்டிருக்கிறார். குறிப்பிட்ட வீடு எந்த இயக்கத்தால் பாவிக்கப்பட்டது என்பதை பொலிசாரும் வெளியே தெரிவிக்காமல் உள்ளனர். கோவிற்குளம் பகுதியில் புளொட் அமைப்பு தவிர்ந்த வேறெந்த தமிழ்க்கட்சியும் இருப்பதில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் 31.08.98ல் இறைம்பைக் குளத்தில் புளொட்டின் லக்கிமுகாமில் இருந்து தப்பிய இளைஞரும் காலில் விலங்குடன் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. ■

## பதுங்கியிருந்து தாக்குதல்

யாழ் குடாநாட்டில் தென்மராட்சியில் இருந்து கோப்பாய்ப் பகுதிக்குச் சென்று கொண்டிருந்த புலிகளின் அணி ஒன்று படையினரின் தாக்குதலுக்கு இலக்கானது.

28.08.98 இரவு 8 மணியளவில் புலிகளின் அணியொன்று சென்று கொண்டிருந்த பாதையில் படையினர் பதுங்கி இருந்தனர்.

படையினர் பதுங்கி இருப்பது தெரியாத புலிகள், படையினர் தாக்கத் தொடங்கியதும் திருப்பித்தாக்கியபடி தப்பிச் செல்ல முற்பட்டனர். படையினரின் துப்பாக்கிச் சூட்டில் மூன்று புலிகள் பலியானார்கள். பலியான புலிகளில் ஒருவர் கப்டன். ●

## கைவிடப்பட்ட மீனவர்கள்

திருமலை மாவட்டம் சல்லிக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழ் மீனவர் இருவரின் படகில் கடற்படை படகு மோதியது. அதன்போது மீனவர் படகு இரண்டாக உடைந்து கடலில் மூழ்கியது.

படகில் பெட்ரோமாக்ஸ் விளக்கு கொளுத்திவைத்திருந்தனர். அப்படியிருந்தும் கடற்படைப் படகு வந்து மோதியுள்ளது. மோதியவர்கள் கடலில் தத்தளித்த மீனவர்களையும் கைவிட்டு சென்றுவிட்டனர். 27.08.98 அன்று இரவு 11½ மணிக்கு இச்சம்பவம் நடந்துள்ளது.

கடலில் தத்தளித்த மீனவர்கள் இருவரையும் கண்ட வேறு படகொன்றில் இருந்த மீனவர்கள் காப்பாற்றினார்கள். தங்கவேலாயுதம் காந்தரூபன் (22), நவரத்தினம் சசிகரன் (24) ஆகியோரே படகை இழந்து பரிதவித்து காப்பாற்றப்பட்ட மீனவர்களாவர்.

## நகரம் திடீர் சுற்றிவளைப்பு!

### தடுத்து வைத்து விசாரணை

(மன்னார் நிருபர்)

மன்னார் நகரம் நீண்ட நாட்களுக்குப் பின் கடந்த 05.09.98 அன்று பாதுகாப்புப் படையினரினால் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு புலித்தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றது.

அன்றைய தினம் நகரில் பொலிஸாரும் இராணுவத்தினரும் கவசவாகனங்கள் சகிதம் குவிக்கப்பட்டிருந்தனர். காலை 10 மணிக்கு நகரம் சுற்றிவளைக்கப்பட்டு அப்பகுதிகளில் நின்ற அனைவரும் புதிய பஸ் நிலையப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பெண்கள், மாணவர்கள், வயோதிபர்கள் என்ற பாகுபாடின்றி அங்கு நின்றிருந்த சகலருமே அழைத்து வரப்பட்டு துருவித் துருவி விசாரிக்கப்பட்டனர். பொலிஸ் பதிவு, குடும்ப அட்டை, அடையாள அட்டை என்பன மிக நுணுக்கமாகப் பரிசோதிக்கப்பட்டன.

நகருக்குள் புலிகளின் பிஸ்டல் குழு ஒன்று ஊடுருவி இருப்பதாகக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்தே இச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் பொதுமக்களுடன் சேர்ந்து பாதுகாப்புத் தரப்பினரின் புலனாய்வு அதிகாரிகளும் சிவில் உடையில் நின்றதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அரச ஊழியர்கள், சமாதான நீதவான்கள்கூட சுற்றிவளைப்புக்குள்ளானதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

சுமார் 3 மணி நேரம் மன்னார் நகரம் ஸ்தம்பித நிலையை அடைந்தது. பஸ் போக்குவரத்தும் இடம்பெறவில்லை. வெளியிலிருந்து உள்ளே வரவோ, உள்ளேயிருந்து வெளியே செல்லவோ எவரும் அனுமதிக்கப்படவில்லை.

வெளியிடங்களில் இருந்து வந்த சிலர் சுற்றிவளைப்பு இடம்பெறுவதாகக் கேள்விப்பட்டு நகருக்குள் வருவதைத் தவிர்த்துக் கொண்ட போதிலும் சுமார் ஆயிரம் பேர் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

சனிக்கிழமை விடுமுறை தினமாகையால் அதிகமான மக்கள்கூட்டம் நகரில் காணப்பட்டது. சிலர் படையினரைக் கண்டதும் நைசாக நழுவினர். இச்சுற்றிவளைப்பின் போது எவரும் கைது செய்யப்படவில்லை.

## புளொட் பிடித்த இளைஞர்

### புலி என்று ஒப்படைப்பு

வவுனியா மாவட்ட புளொட் பொறுப்பாளர் சின்னதாஸ் கிளைமோர் தாக்குதலில் பலியானது தெரிந்ததே. அதன்பின்னர் புலிகள் இயக்க உறுப்பினர் என்ற சந்தேகத்தில் இ.பிரகாஷ் என்பவர் புளொட் இயக்கத்தினரால் பிடிக்கப்பட்டார்.

பிரகாஷின் தந்தை மகாஇறம்பைக் குளத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் அதிபராக இருக்கிறார். பிரகாஷை விசாரித்த புளொட், அவரை சி.ஐ.டியிடம் ஒப்படைத்தது.

கண்டியில் இருந்து வந்த சி.ஐ.டியினரே அவரைப் பொறுப்பேற்றதாகத் தெரிகிறது. பிரகாஷின் காலில் அப்போது காயம் இருந்ததாம். பிரகாஷின் தந்தையிடம் சி.ஐ.டியினர் 'உங்கள் ஆட்கள்தான் இப்படிச் செய்தனர்' என்று கூறினார்களாம்.

பிரகாஷ் சி.ஐ.டியினரால் விசாரிக்கப்பட்டதையடுத்து புகைப்படப்பிடிப்பாளரான விக்கிரமன் என்பவரும் வவுனியாவில் வைத்து சி.ஐ.டியினரால் கைதாகி கண்டிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

வவுனியாவில் தொடர்ந்தும் கைதுச் சம்பவங்கள் பல நடந்துள்ளன. ■

## முறையிட்டும் பயனில்லை!

### காரணமின்றி தடுத்துவைப்பு

தமிழ்ப் பத்திரிகையாளர்களான ஸ்ரீகஜன், தெய்வநாயகம்பிள்ளை, மதுசூதனன் ஆகியோரின் அடாத்தான கைதுகள் தொடர்பாக தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு முறையிட்டும் பயன்கிட்டவில்லை.

கைதானவர்கள் தொடர்பாகவும், ஏன் கைதானார்கள் என்றும் 24 மணி நேரத்திற்குள் தெரியப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி உத்தரவிட்டதாக செய்திகள் வெளியாகின.

தொல்லை தவிர்ப்புக் குழுவில் அமைச்சர்கள் இருந்தும்கூட மதுசூதனன் கைதுக்கான காரணத்தை இரு வாரங்களாகியும் அறியமுடியவில்லை.

புலிகளுடன் தொடர்பு என்றும், பாதாள உலக கோஷ்டியுடன் தொடர்பு என்றும் வெவ்வேறு விதமான காரணங்கள் கூறப்பட்டனவாம்.

பத்திரிகையாளரும் இந்து காலாசார திணைக்கள உதவிப் பணிப்பாளருமான தெய்வநாயகம்பிள்ளையை விடுதலை செய்யுமாறும், அவர் இல்லாமல் தமது பணிகள் தேக்கமடைவதாகவும் இந்து கலாசார திணைக்களம் கோரியுள்ளது. எவ்வித ஆதாரமும் இன்றியே அவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். ஆதாரங்களை உருவாக்கும் முயற்சிகளுக்காக இழுத்தடிப்பு நடக்கிறதோ என்று அவரது நண்பர்கள் கவலை தெரிவிக்கின்றனர். ■

## யாழ் செல்ல அனுமதி!

### ஒரு மாத தாமதம்

யாழ் பயணிகளின் போக்குவரத்து கஷ்டத்தை தீர்ப்பதற்கு இரா.சம்பந்தன் எம்.பி. தொல்லை தவிர்ப்புக் குழுவில் முறையீடு செய்தார். ஞாயிற்றுக்கிழமைகளிலும் பாஸ் வழங்க அலுவலகம் திறந்திருக்கும் என்று பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது என்று செய்திகள் வெளியாகி இருந்தன.

ஆனால் யாழ் செல்வதற்கு 'கிளியரன்ஸ்' கேட்டு பாதுகாப்பு அமைச்சிடம் விண்ணபித்த பலர் ஒரு மாதகாலம் கடந்தும் காத்திருக்கின்றனர்.

"எம்.பி.கள் பேசி தொல்லைகள் தீர்வதாக பத்திரிகைகளில்தான் பார்க்கிறோம். அனுபவத்தில் காணவில்லை. ஏட்டுச் சுரைக்காய்கள்தான் அந்தச் செய்திகள்!" என்று காத்திருக்கும் பயணி ஒருவர் தெரிவித்தார். ■



படிப்பகம்

www.padippakam.com

# சொகுசு நாடும் டாக்டர்கள்

## புலிகள்மீது பழிபோடுகின்றனராம்!

மூதூர் மாவட்ட வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை தொடர்ந்து நிலவுவதற்கு அங்கு கடமைபுரிய மறுக்கும் டாக்டர்களே காரணம் என முரசுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

பணத்தாசை, சொகுசு வாழ்க்கையில் விருப்பம் என்பவை காரணமாக அங்கு சென்று கடமைபுரிய மறுக்கும் இவர்கள் 'புலிகளால் தங்களுக்கு ஆபத்து நேரலாம்' என்று பொய்யான தகவல்களை நிர்வாகத்துக்குக் கொடுத்து வருவதாக அறியக் கூடியதாக இருக்கிறது.

அரசாங்க வைத்திய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் திருக்கோணமலைக் கிளையும் தங்கள் உறுப்பினர்களை பதிற் கடமைக்காகக் கூட மூதூருக்கு அனுப்புவதை விரும்பாதிருக்கிறது என்பதை அவர்களால் 22 ஜூலை 98 தேதியிடப்பட்டு வடக்கு-கிழக்கு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம் உறுதி செய்கிறது.

டாக்டர் கே.ஜி.டி.பி. சில்வா, டாக்டர் எம். சுகுணதேவன் ஆகியோரை மாகாணச் சுகாதார நிர்வாகம் மூதூர் வைத்தியசாலைக்குப் பதிற்கடமைக்கு அனுப்ப முனைந்தபோது பாதுகாப்புப் பிரச்சனையைக் காரணம் காட்டி டாக்டர் தம்பதிகளாக திரு. திருமதி. சுக்கிர் மாற்றம் பெற்று வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் இவர்களை அங்கே அனுப்புவதால் அதே பாதுகாப்புப் பிரச்சனையை இவர்களும் எதிர்கொள்ள வேண்டிவரும் என அக்கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் இதே சங்க உத்தியோகத்தர்கள் எவ்வித பயமுமின்றி வாரந்தோறும் மூதூரில் தனியார் மருத்துவ நிலையமொன்றில் கொழுத்த பணம் பெற்று நோயாளர்களை 'சனல்' செய்து வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனியார் வைத்திய நிலையத்தில் பணிபுரியலாம் என்றால் அரச வைத்தியசாலையில் ஏன் இவர்களால் பணிபுரிய முடிவதில்லை என்று மூதூர் பொதுமக்கள் கேட்கிறார்கள்.

### செயலாளர் பதில்

வைத்திய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் கடிதத்துக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யூ.ஏ. திசேரா, 28.07.98 திகதியிட்டு பதிற் கடிதமொன்று அனுப்பி வைத்திருக்கிறார்.

அக்கடிதத்தில், தற்போது ஒரு சிங்கள டாக்டரும் இரண்டு தமிழ் டாக்டர்களும் கடமைபுரிந்து வரும் மூதூர் வைத்தியசாலையில் இனரீதியான தொந்தரவு என்பது சுத்தப் பொய் எனச் சாடியிருப்பதோடு, டாக்டர்களை இடம் மாற்றும் அதிகாரம் தனக்கு இல்லையென்றும், சுக்கிர் தம்பதியினர் பொய்யான தகவல்களை கொழும்பு அமைச்சுக்குச் சமர்ப்பித்து தனது கடுமையான எதிர்ப்பும் கவனிக்கப்படாத நிலையில் கௌரவ ஆளுநர், பிரதியமைச்சர் திருமதி பவித்திரா வன்னியாராய்ச்சி ஆகியோரின் உதவியுடன் இடம்மாற்றப் பெற்றனர், என்றும் கூறியிருக்கிறார்.

# —சேவை நீக்கமும்— மீண்டும் எழுதுநர் நியமனமும்!

(மட்டக்களப்பு நிருபர்)

வடக்கு கிழக்கு-மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் அமைய அடிப்படையில் எழுதுநர் சேவைக்காக நியமிக்கப்பட்டிருந்த ஊழியர்கள் அனைவரும் 01.08.98 தொடக்கம் சேவையிலிருந்து நீக்கப்படுவதாக கடிதமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இவர்களனைவரும் ஆளுநரின் அனுமதிக்கமைய 05.08.98 தொடக்கம் மேலும் ஆறுமாத காலத்திற்கு அமைய அடிப்படையில் எழுதுநர்களாகக் கடமையாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்று வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இந்நியமனம் ஏதாவது பதவிக்கு நிரந்தர நியமனம் பெறவோ, அல்லது விசேட உரிமைகள் கோரவோ தகுதிபெறச் செய்யாது என்றும் எவ்வித முன்னறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படலாமென்றும் அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஊழியர்கள் நிரந்தர நியமனப் போராட்டத்தில் இறங்கக் கூடும் என்பதாலேயே ஆறுமாதங்களுக்கொருமுறை சிலதினங்கள் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் நியமனம் வழங்கப்படுவதாக அதிகாரியொருவர் சொன்னார்.

# "வயிற்றில் நெருப்பைக் கொட்டாதே!"



வன்னிக்கு மேற்கொள்ளப்பட்ட நிவாரண நிறுத்தம் அரசு எதிர்பார்ப்பதற்கு மாறான விளைவுகளையே உருவாக்கி வருகிறது.

'நிவாரண வெட்டை நிறுத்தாதே! வயிற்றில் நெருப்பைக் கொட்டாதே!' என்ற கோஷங்களுடன் பரவலான போராட்டங்கள் நடந்துள்ளன.

முல்லை, கிளிநொச்சி அரச அலுவலகங்கள் ஸ்தம்பிக்கும் அளவுக்கு தொடர் போராட்டங்கள் நடந்துள்ளன. இப்போராட்டங்கள் ஆயுதம் ஏந்திய போராட்டங்கள் அல்ல; இவற்றை அரசு அலட்சியம் செய்வது ஆயுதங்கள் மீதான நம்பிக்கையை ஏற்படுத்துவதாக மாறிவிடும்.

தங்களை அந்நியராகத் தனிமைப்படுத்தி வைத்திருப்பதாக வன்னி மக்கள் எண்ணுவது நியாயம்தான்!

## "உணவை வழங்குக!"

அரசாங்கம், வட-கிழக்கில் இடம்பெயர்ந்தவர்களுக்கு உணவுப் பங்கீட்டுக்காக ஒதுக்கப்படும் நிதியைக் குறைக்கிறது என்ற அறிக்கைகள் தொடர்பாக அண்மையில் நடந்த ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கத்தின் செயற்குழுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு கடுமையான விசனத்தை ஏற்படுத்தும் இந்த அறிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த முக்கிய மனிதநேய விவகாரத்தை அவசரமாகவும், அனுதாபத்துடனும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும், என்று ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்கான இயக்கம் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது.




மலையாள மாந்திரிகம்

மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



மனோதத்துவ வைத்தியம்
வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! உங்கள் அடிமனதில் ஆழப்பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம்மாற்றி வெற்றிப் பாதையில் வீறுநடை போட பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். இளம்சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை போன்ற தன்னம்பிக்கை இழக்கக் காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி புத்துயிர் பெற்று நீங்களே உங்களை வெல்லுங்கள்.

SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்கு விஷேட ஏற்பாடுகள்

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை தீர்க்க வழியின்றி தவிக்கத் தேவையில்லை. வெட்கத்தை விட்டு முழுவிபரங்களையும் கடிதமூலம் விளக்கி எழுதவும். எமது கேள்விகளுக்கு பதில் தெரிந்தபின் பதிவு நாடாமூலம் தாழ்வு மனப்பான்மை நீங்க மனோதத்துவ சிகிச்சையும், உடல் குறைபாடுகளுக்கு மருந்தும் அளித்து பூரண சுகமடையலாம். பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஆச்சரியப்படும்வகையில் சுகமாகியுள்ளனர். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்

மனநிலை பதிப்புக்கள், மனநோய்கள், 'ஹிஸ்டீரியா'- ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. பலர் நீரிழிவு நோயில் இருந்து முற்றாகக் குணம் அடைந்துள்ளனர். விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கொழும்பில் செப்டம்பர் 20 முதல் 28 வரை

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
BEAUTY LODGE, 67A, WOLFENDHAL STREET, COLOMBO-13
T.P. 338165, 338166 (5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

வவுனியாவில் செப்டம்பர் 12,13 திகதிகளில்

வவுனியாவில் (2ஆம் குறுக்குத் தெரு) ஞான வைரவர் கோவில் ஒழுங்கை Vanni Inn இல் சந்திக்கலாம். T.P.024-22074 இல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

கல்முனையில் அக்டோபர் 3,4 திகதிகளில்

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 065- 28329

மற்றைய நாட்களில்
DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.33. Tissa Weerasingam sq.,
Boundary Road, Batticaloa
RESIDENT T.P.- 065-24019





கலை அலங்கார வகுப்புக்கள்
* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* 4 மாத கற்கைநெறி

ஆரம்பம்: 27-09-98

FASNAZ BEAUTY SALON
142, டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை.
கொழும்பு-06.
தொலைபேசி: 589457



மிகப் பெரிய அளவிலான
ஜேர்மன்-தமிழ்
அகராதி

50 ஆயிரத்திற்கும் அதிகமான ஜேர்மன் மொழிச் சொற்களுக்கான தமிழ் மொழிச் சொற்களுடன் இலக்கண விளக்கம் மற்றும் புதிய அணுகு முறையிலான சரியான உச்சரிப்பு விளக்கம்.

உங்கள் தேவைக்கு இன்றே பதிவு செய்யுங்கள்.

தொடர்பு கொள்ளவும்.
K.Chandrasegaran
(Swiss) 01/461 57 49
V.Sivanesarajah
(Swiss) 01/492 02 61



காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.
T.P. 586218



A/L மாணவர்க்கான Computer பாடநெறிகள்
APPROVED CENTRE BY ACP - ENGLAND
CERTIFICATE IN MICROSOFT OFFICE '97
DIPLOMA IN COMPUTER STUDIES
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
HIGHER DIPOLOMA IN INFO. TECHNOLOGY
FREE STUDY PACK FOR ALL COURSES
UNLIMITED PRACTICAL HOURS
A/L மாணவர்க்கு 10% விசேட பாடக்கட்டணக் கழிவு
இச்சலுகை 20-9-98 வரை. மேலதிக விபரங்களுக்கு
25 YEARS OF TEACHING EXCELLENCE
oxonia
COMPUTER DIVISION
# 07, Rajaguru Sri Subothi Mawatha,
off Galle Road, (Near Dehiwala Bridge)
Wellawatte. Tel : 503625, 588080



COMPUTER DIPLOMA & CERTIFICATE COURSES
AFTER A/L WHAT NEXT ?

கணனிக்கல்விச் சேவையில் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டி A/L மாணவர்க்கு அனைத்து பாடநெறிகளிலும் 20% கட்டணக் கழிவு வழங்குகின்றோம்.

Diploma in Microsoft Office '97
(Through Windows 98) காலம் 3 மாதம்
Diploma in Desktop Publishing
(Through Windows 95) காலம் 3 மாதம்
Dip. in Computer Programming
காலம் 4 மாதம்
Adv.Dip.in Information Technology
(Through Windows 98) காலம் 5 மாதம்
Visual Basic Programming
(Through Windows 98) காலம் 3 மாதம்
Diploma in Computer Studies

FREE STUDY PACK FOR ALL COURSES
6 YEAR OF DEDICATED COACHING
APPROVED CENTRE BY IMIS ENGLAND

ASIAN COMPUTER SYSTEMS
250 First Floor, George R. De. Silva Mw, Colombo 13. Tel : 075-338726
HARROW No : 11, Rajasinghe Rd, Colombo 6. Tel : 077-315271



ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 250/=,150/=
தங்க பஸ்பம் கலந்தது 1125/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 1025=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398




படிப்பகம்

www.padippakam.com



# மீண்டும் பொதி தோண்டும் குழி

நாரதர்

வவுனியா, யாழ் தரைப் பாதையை திறப்பதற்கு காலவரையறை விதிக்க முடியாது என்று மேஜர் ஜெனரல் நீல் டயஸ் கூறியுள்ளார். களமுனை படைத் தளபதிக்கு நிலவரம் புரிகிறது.

'ஜயசிக்குறுய்' படையினர் கிளி நொச்சி முனையால் நகர மேற்கொண்ட சமீபத்திய முயற்சியும் எதிர்பார்த்த பலனை கொடுக்கவில்லை.

சகல முனைகளிலும் புலிகள் தயார் நிலையில் உள்ளனர். தவிர்க்க முடியாமல் படையினர் கொடுக்கும் கால அவகாசத்தில் புலிகளது அணிகள் அடுத்த கட்ட சண்டைக்கு தம்மை புனரமைத்துக்கொள்கின்றன.

'ஜயசிக்குறுய்' படைகளின் ஒருமுனை மாங்குளம். இன்னொருமுனை கிளிநொச்சி.

இருமுனைகளிலும் அடிக்கடி மோதல்கள் நடந்துள்ளன. சமீபத்திலும் பாரிய மோதல்கள் நடந்துள்ளன. தணிக்கை காரணமாக தகவல்கள் வடிகட்டப்பட்டே வெளியாவதால் சண்டைகளது உக்கிரம் வெளியே தெரியவில்லை.

கிளிநொச்சியில் புலிகளது நிலைகளை நோக்கி படையினர் முன்னேறுவதும், மோதல் மூளுவதும் அடிக்கடி நடக்கிறது.

அதேசமயம் 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை தொடர்பாக படைத்தரப்பு வெளியிடும் ஸ்கோர்களின் கூட்டுத்தொகையை வாரமுடிவில் எண்ணிப்பார்த்தால் புலிகள் எங்கிருந்து உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறார்களோ என்ற வியப்பு ஏற்படுவதையும் தவிர்க்க முடியாதிருக்கும்.

படையினர் ஒய்வுபெற்று தமது நிலைகளை பலப்படுத்த இடமளிக்காமல் அடிக்கடி ஷெல் மழை பொழிகின்றனர் புலிகள். முன்னரங்க நிலைகள் புலிகளின் ஷெல்களுக்கு இலக்காகின்றன.

தமது சொந்தப் பட்டறையில் மோட்டார் ஷெல்களை உற்பத்தி செய்கிறார்களா? அல்லது வெளியில் இருந்து விநியோகம் வந்துகொண்டிருக்கிறதா? என்ற சந்தேகம் படையினருக்கு இருக்கிறது.

தமது கப்பலை கொண்டுவந்து சர்வதேச கடற்பிராந்தியத்தில் வைத்துக் கொண்டு படகுகள் மூலம் ஷெல்கள், மற்றும் உபகரணங்களை கப்பலில் இருந்து கொண்டு வந்து சேர்க்கிறார்களா? என்று சந்தேகம்.

ஏனெனில் கடந்த ஒன்றேகால் வருடமாக ஷெல்லடி நடத்திக்கொண்டே இருக்கின்றனர். அதுவும் பலரகமான மோட்டார் ஷெல்களும் பாவிக்கப்படுகின்றன. விநியோகம் அல்லது உற்பத்தி இல்லாமல் அது சாத்தியமில்லை.

புலிகளின் ஆட்டிலெறி தாக்குதல் வரையறுக்கப்பட்ட அளவில்தான் நடத்தப்படுகிறது. ஏனெனில் அதன் ஒவ்வொரு ஷெல்லும் ஏக விலை. தவிர சொந்தமாக உற்பத்தி செய்வதும் கடினம்.

ஆட்டிலெறிகள், மோட்டார்கள் போன்ற கனரக ஆயுதங்களை கொண்ட புலிகளின் பீரங்கிப் படைப்பிரிவு 'ஜயசிக் குறுய்' படைகளுக்கு பெரும் சவாலாக உருவாகியுள்ளது.

ஜயசிக்குறுய் முறியடிப்பு சமருக்காக புலிகள் பலப்படுத்தியுள்ள படைப்பிரிவுகள் பின்வருமாறு:

1. சிறுத்தைப் புலிகள் அணி.
2. பீரங்கிப் படைப்பிரிவு.
3. விமான எதிர்ப்பு படையணி.
4. டாங்கி எதிர்ப்பு அணி.

இவற்றில் சிறுத்தைப் புலிகள் அணி ஊடறுப்புச் சமர்கள், மற்றும் முற்றுகை தகர்ப்பு தாக்குதல் போன்றவற்றில் பங்குகொள்ளும். பிரபாகரனின் நேரடிக் கட்டுப்பாட்டில் இந்த அணி செயற்பட்டு வருகிறது.

டாங்கி எதிர்ப்பு அணியினர் படையினர் முன்னேறும்போது டாங்கிகளை நெருங்கிச் சென்று தாக்கியழிப்பர். ஆர்.பி.ஜி, மற்றும் கிரனேட் லோஞ்சர் போன்ற ஆயுதங்களை இவர்கள் பயன்படுத்துகின்றனர்.

டாங்கிப் படையணியை 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு பெரிதும் நம்பியிருந்தனர் படையினர். அந்த நம்பிக்கைக்கு அடிகொடுக்க புலிகள் உருவாகியதே டாங்கி எதிர்ப்புப் படையணி.

தலைநகரில் உள்ள அரசியல்வாதிகள், போலில்லாமல், களமுனை தளபதிகளுக்கு எதிரியின் பலம், தம் பலம் பலவீனம் எல்லாம் தெரியும்.

'காலவரையறை வகுக்க முடியாது' என்று மேஜர் ஜெனரல் நீல் டயஸ் கூறியிருப்பது, தமது எதிரியைப் பற்றி அவர் புரிந்துகொண்டிருப்பதின் அடையாளம்தான்.

—★—

**பு**லிகளோடு பேசத் தயார் என்று கூறியுள்ள நீதியமைச்சர் பீரிஸ் அவர்கள், அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் கருத்தொருமிப்பு அவசியம் என்கிறார்.

புலிகளோடு பேசுவது என்றால் காத்திரமான அரசியல் யோசனைகளுடன் செல்ல வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அப்படியானால் இப்போது காத்திரமான யோசனை எதுவும் இல்லையென்றுதானே அர்த்தம். உண்மைகள் சில சமயங்களில் தாமாகவே வந்து விழுந்துவிடும்.

'புலிகள் தீர்வுக்கு தயாராக இல்லை, அதனால்தான் சண்டை போடுகிறோம்' என்று அரசு முன்னர் கூறிய வியாக்கியானமும் பெரிய பொய் என்றாகிறது.

தம்மிடம் காத்திரமான யோசனையே இல்லாதபோது, மறுதரப்புத்தான் தயாராக இல்லை என்று கூறமுடியாதுதானே.

தென்னிலங்கையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால் ஆளும் அணியுடன் மோத வேண்டி இருக்கும். அதனால் தீர்வு விடயத்தில் ஒத்துழைக்க முடியாமல் போகும். எனவே அத் தேர்தலை பின்போட கோருங்கள் என்று ரணில் தமிழ்க் கட்சிகளிடம் கூறினார்.

தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியுடன் நடத்திய சந்திப்பில் அக் கோரிக்கையை கூட்டணித் தலைவர் சிவா முன்வைத்தார்.

அதற்கு ஜனாதிபதி: "ஐ.தே.கட்சி ஒரு போதும் ஒத்துழைக்கப் போவதில்லை. அவர்கள் ஒத்துழைக்காவிட்டாலும் தீர்வுப்பொதியை நிறைவேற்ற திட்டம் ஒன்று வைத்திருக்கிறேன். எனவே உள்ளூராட்சித் தேர்தல் நடந்தேதீரும்" என்று நடத்தியும் முடித்தார்.

அப்படியானால் இப்போது ஏன், "ஐ.தே.கட்சி ஒத்துழைக்காமல் எதுவும் செய்யமுடியாதுள்ளது!" என்று நீதியமைச்சர் கூறுகிறார். ஜனாதிபதியின் திட்டம் என்னவாகியது?

முதறிஞர் சிவா ஐ.தே.கட்சியை சாடுகிறாரே தவிர, 'அவர்கள் கிடக்கட்டும், முன்னர் எம்மிடம் உறுதியளித்தபடி நீங்கள் உங்கள் திட்டத்தை எடுத்துவிடுங்கள்' என்று ஜனாதிபதியிடம் கேட்கவில்லை.

ஐ.தே.கட்சியும் ஏமாற்றுகிறது. ஆளும் அணியும் ஏமாற்றுகிறது. பாம்பின் கால் பாம்பறியும். தமது மறுதரப்பின் எல்லை எதுவென்று தெரிந்துகொண்டு சவால்கள் தொடுக்கின்றனர். பழிபோடுகின்றனர். நல்ல பிள்ளைகளாக நடிக்கின்றனர்.

தமது திட்டத்தை ஐ.தே.கட்சி ஒருநாளும் ஏற்காது என்பது ஆளும் அணிக்கு தெரியும். அதனால்தான் துணிந்து அவர்கள்மீது பழி போடுகின்றனர். தமிழ்க் கட்சிகளை ரணிலிடம் தூதுவிட்டு எதிர்க் கட்சிமீது தாம்போடும் பழிக்கு சாட்சிகளாக மாற்றுகின்றனர்.

யுத்த வெற்றியை மலையாக நம்பியிருக்கும் அரசு புலிகளுடன் தற்போது பேச முன்வரவே மாட்டாது. சூரியன் திசைமாறி உதித்தாலும் உதிக்கலாமே தவிர, தற்போதைக்கு புலிகளுடன் அரசு பேசுவது மட்டும் நடக்காது என்பது ரணிலுக்கு தெரியும்.

அதனால்தான் 'புலிகளுடன் பேசுங்கள்' என்று கோரிக்கை ஒன்றை தூக்கிப் போட்டுவிட்டு கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டிருக்கிறார்.

உடனே நீதியமைச்சர் பீரிஸ் அவர்களும், "புலிகளுடன் பேசுவதற்கு முன்னர் ஐ.தே.கட்சியுடன் கருத்தொற்றுமை ஏற்படவேண்டும்!" என்று கூறிவிட்டு நமட்டுச் சிரிப்புடன் அமர்ந்திருக்கிறார்.

ஒவ்வொரு தரப்பும் மறுதரப்பால் எது சாத்தியமில்லை என்று தெரிகிறதோ அதனை அத்தரப்பு நோக்கிய சவாலாக விடுகின்றனர். இத்தகைய சவால்களுக்கு நீண்டகால உத்தரவாதம் உள்ளன. அவ்வப்போது எடுத்து விட்டுக் கொண்டே இருக்கலாம்.

இந்த அப்பட்டமான ஏமாற்று நாடகத்தில் தமிழ்க் கட்சிகள் சில ஆளும்கட்சியின் துணைப் பாத்திரங்களாக மாறி நின்று ஐ.தே.கட்சியை தும்புபறக்க வசைபாடிக் கொண்டிருப்பது வீரத்தின், விவேகத்தின் உச்சகட்டம்.

ஐ.தே.கட்சியின் 17 வருடகால ஆட்சியிலும் இன ஒடுக்குமுறை தலைவிரித்தாடியது.

**ஆனால் அந்த** 17 வருடத்தில் அனுபவித்த **அவலங்களை விட** அதிகமான அவலத்தை கடந்த நான்கு வருடத்தில் தமிழ் மக்கள் சந்தித்துள்ளனர் என்பதே உண்மை.

அப்படியிருந்தும் இன்றைய அரசுக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளுக்கு ஐ.தே.கட்சி ஆட்சிக்காலம் பற்றி குறைகூறும் யோக்கியதை இருக்கிறதா?

இலங்கை சுதந்திரமடைந்த 50 ஆண்டு வரலாற்றில் அதிக தமிழ்க் கட்சிகளால் ஆதரிக்கப்படும் ஆட்சியில்தான், வரலாற்றில் இல்லாதளவுக்கு அவலங்கள் உருவாகியுள்ளன. இது எத்தனை முரண்பாடான விஷயம்!

இந்த வரலாறு எதிர்காலத்தில் எழுதப்படுகையில் இந்த தமிழ்க் கட்சிகள் பற்றி எப்படிக் குறிப்பு எழுதப்படும் என்பது இப்போதே தெரிந்ததுதான்.

இந்த தமிழ்க் கட்சிகளின் உதவியோடு என்னதான் நாடகத்தை அரங்கேற்றினாலும் சர்வதேச அரங்கில் இன்றைய அரசு குறித்த அதிருப்திகளும் சந்தேகப் பார்வைகளும் தோன்றிவிட்டன.

யாழில் காணாமல் போனோர் விடயத்தில் அரசின் அலட்சியம், செம்மணிப் புதைகுழிகள் விடயத்தில் திட்டமிட்ட இழுத்தடிப்பு, களுத்துறை சிறைப்படுகொலைக்கு நடவடிக்கை எடுக்காமை, நாடெங்கும் அவசரகால சட்டம் போன்ற பல நடவடிக்கைகள் சர்வதேச அரங்கின் முன் அம்பலமாகியுள்ளன.

பெண் ஒருவர் ஜனாதிபதியாக இருப்பதால் மனித உரிமை மீறல்கள் இருக்காது என்று கருதிய காலம் மலையேறி வருகிறது.

இதனை அறிந்துள்ள அரசாங்கமும் உஷாராகியுள்ளது.

மனித உரிமை ஆணைக்குழு, தொல்லை தவிர்ப்புக் குழு என்றெல்லாம் ஒரே காரியத்தை செய்ய பல குழுக்கள் நிறுவி ஆரவாரப்படுத்துகின்றனர்.

அரசால் மனித உரிமை ஆணைக்குழு நியமிக்கப்பட்டதே தொல்லைகளைத் தவிர்க்கத்தான். பின்னர் ஏன் புதிதாக தொல்லை தவிர்ப்புக் குழு?

புதிய மனித உரிமை மீறல்கள் உலகின் கவனத்தை இழுக்கும்போதெல்லாம், அதனை திசைதிருப்பி புதிய பெயரில் ஒரு குழு போட்டு ஆரவாரம் செய்வதுதான் நோக்கம்.

சர்வதேச அரங்கில் தமிழ் பேசும் தரப்புக்கு ஏற்பட்டுவரும் அனுதாபத்துக்கு புதைகுழி வெட்டும் இத்தகைய காரியங்களுக்கு தமிழ்க் கட்சிகளும் ஒத்துழைக்கின்றன. குறிப்பாக இரா.சம்பந்தன் இதில் முன்னணிப் பாத்திரம் வகித்து வருகிறார்.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு நிகராக ஜனாதிபதிக்கு ஆதரவான முன்னணிப் பிரசாரகராக வெளிநாட்டு தூதரக சந்திப்புக்கள், இராஜதந்திரிகளுடனான சந்திப்புக்கள் போன்றவற்றில் பங்குகொண்டு தூள்கிளப்பி வருகிறார்.

நீண்டகாலமாக தேடுவாரில்லாமல் கிடந்த தீர்வுப் பொதியை மறுபடி கையில் எடுத்துள்ளார் நீதியமைச்சர் பீரிஸ்.

டிசம்பருக்குள் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை பூர்த்திசெய்துவிட்டு தேர்தல் நடத்துவதே அரசின் ஆசை.

அப்படியானால் உக்கிரப்போர் வன்னியில் மூளும். அந்த உக்கிரத்தை தணிக்க பொதிக்கதை தேவைப்படலாம்.

அரசியல் தீர்வு நாடகத்தை வெளியுலகம் பார்த்துக் கொண்டிருக்க, இராணுவத் தீர்வை மறுபக்கத்தால் முன்னெடுக்கத்தான் மறுபடி ஆஜராகியுள்ளது பொதி.

தமிழ் பேசும் தரப்பின்மீதான வெளியுலக அனுதாபம், தற்போதைய போரில் தமிழ் பேசும் தரப்பின் அவலங்கள் இரண்டையும் புதைகுழிக்கு அனுப்புவதுதான் நோக்கம்.



தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா, இந்தியப் பிரதமர் வாஜ்பேயி ஆகியோரிடமும் பொதியைப் பற்றியே ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

சர்வதேச அரங்கில் தமிழ் பேசும் தரப்புக்கு புதைகுழி வெட்டவும் பொதிதான் ஆயுதமாக பயன்படுத்தப்படுகிறது.

பொதிக்குள் இருப்பது பொறிதான் என்பதை உலகுக்கு கூறுவதைவிடுத்து, ஐ.தே.கட்சியை தமிழ்க் கட்சிகள் சாடிக்கொண்டிருப்பதும் அரசுக்கு சாதகமான விஷயம்தான்.

ஏதோ அரசு நியாயமாக நடப்பதாகவும் எதிர்க்கட்சிதான் குழப்புகிறது என்பதுபோலவும் உலகை நம்பவைப்பது ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாதகமான விடயமல்ல, தமிழ் பேசும் தரப்புக்கு பாதகமான விடயம்.

தமிழ் பேசும் மக்களின் உயிருடன், விளையாடுகின்ற நிவாரண வெட்டு போன்றவற்றைக் கண்டும் ஏற்படாத கோபம், ஐ.தே.கட்சிமீது மட்டும் தமிழ்க் கட்சிகளுக்கு ஏற்படுவதுதான் வேடிக்கை.

அரசிடம் நல்ல பெயர் எடுப்பதற்காக சர்வதேச அரங்கில் அரசுக்கு ஏற்படும் அவப்பெயர்களை அகற்றி, தமிழ் பேசும் தரப்புக்கு தாமும் முன்னின்று புதைகுழி வெட்டுகின்றன தமிழ்க் கட்சிகள்.

—★—

## ஒரு பேட்டியின் கதை

**கொ**ழும்பில் இருந்து வெளியாகும் சண்டே லீடர் பத்திரிகையில் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனின் பேட்டி வெளியாகியுள்ளது.

தினேஷ் என்ற பெயரில் யாழ் மாவட்ட புலிகளின் தளபதியாக இருந்தவர் தமிழ்ச் செல்வன். பின்னர் அவருக்கு காலில் ஏற்பட்ட காயத்தால், அரசியல் துறைப் பொறுப்பை கொடுத்தார் பிரபாகரன்.

சந்திரிக்கா அரசுடன் நடைபெற்ற பேச்சுக்களிலும் தமிழ்ச் செல்வன் பங்குகொண்டவர்.

தமிழ்ச் செல்வனின் பேட்டி 'சண்டே லீடரில்' வெளியானதுடன், சில செய்தி நிறுவனங்கள் ஊடாக சர்வதேச அளவுக்கும் சென்றுள்ளது.

இப்பேட்டியின் பின்னணியில் சுவாரசியமான கதை இருக்கிறது. சண்டே ரைம்ஸ், லங்காதீப பத்திரிகைகளில் பணியாற்றும் இரண்டு பத்திரிகையாளர்கள் சில வாரங்களுக்கு முன்னர் மடுக்கோவில் திருவிழாவுக்குச் சென்றனர்.

இருவரும் சிங்கள இனத்தவர்.

மடுக்கோவில் பகுதியில் இவர்களைக் கண்டவர்கள் அரச உளவாளிகள் என்று நினைத்து புலிகளுக்கு தகவல் கொடுத்தனர்.

உளவாளிகள் வந்துவிட்டனர் என்று தகவல்கள் வேகமாகப்பரவவும் தொடங்கிவிட்டன.

புலிகள் அவர்களைத் தேடிவந்தனர். உளவாளிகளா? என்று விசாரித்தனர். இவர்கள் அடையாள அட்டைகளைக் காண்பித்து தம்மை அறிமுகப்படுத்தினர்.

'உங்கள் தலைவர்கள் எவருடனாவது பேசமுடியுமா?' என்று கேட்டனர்.

தங்கள் மேலிடத்துடன் தொடர்பு கொண்ட புலிகளுக்கு அவர்களை அழைத்து வருமாறு உத்தரவு வந்தது.

உண்மையாகவே பத்திரிகையாளர்கள் தானா என்று உறுதிப்படுத்திய பின்னர் வன்னியில் தமது இரகசிய முகாம் ஒன்றில் வைத்து தமிழ்ச் செல்வனும், ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் பேட்டியளித்தனர்.

எதிர்பாராமல் கிடைத்த அதிஷ்டம்போல இரு பத்திரிகையாளர்களும் மகிழ்ந்து போயினர்.

இவர்கள் புலிகளிடம் வன்னியில் இருந்தபோதுதான், உயிலங்குளம் போக்குவரத்துப் பாதையூடான பயணம் புலிகளால் தடைப்பட்டிருந்தது. உளவாளிகள் உள்ளே புகுந்திருப்பதால்தான் தடை போட்டுள்ளனர் என்றும் கதைகள் பரவின.

இருவரையும் மடுகோவிலில் கொண்டு வந்து விட்டனர் புலிகள். படையினருக்கு தெரிந்தால் வம்பாகிவிடும் என்பதால், நைசாக இருவரும் கொழும்பு வந்துசேர்ந்தனர்.

தாம் பேட்டி எடுத்ததை பகிரங்கமாக கூறமுடியாத நிலை. நேராக சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு தங்கள் பேட்டியை கொண்டுபோய் கொடுத்தனர்.

என்ன காரணத்தினாலோ அவர்கள் பிரசுரிக்க முன்வரவில்லை. முன்னர் ஒரு முறை ஐலண்ட் பத்திரிகையில் பிரபாகரனின் பேட்டி வெளியானது. பேட்டியை அறிந்த பிரபாகரனுக்கு அதிர்ச்சி. ஏனென்றால் அவர் பேட்டியே கொடுக்கவில்லை.

ஒரு நிருபர் போலியாக தயாரித்து கொடுத்த பேட்டிதான் அது. அதற்காக பெரும் தொகையையும் அவர் பெற்றுக் கொண்டார்.

புலிகள் மறுப்பு விட உண்மை அம்பலமானது. அதுபோலவே இதுவும் இருக்குமோ என்று கருதித்தான் மறுத்தனரோ தெரியவில்லை. இக்பால் அத்தாஸ் விரும்பவில்லை என்றும் ஒரு கதை. எந்தளவுக்கு உண்மை என்று தெரியவில்லை.

குறிப்பிட்ட இரண்டு பத்திரிகையாளரில் ஒருவர் சுதந்திரப் பத்திரிகையாளர். எப்பத்திரிகைக்கும் செய்திகள் கொடுக்கும் உரித்துடையவர். அதனால் தனது பேட்டியை சண்டே லீடருக்கு காட்டினார்.

"அட்ரா சக்கை, கொடுங்கள் இங்கே!" என்று ஒரு தொகை கொடுத்து வாங்கிப் போட்டுக் கலக்கிவிட்டது லீடர்.

பேட்டியில் தமிழ்ச் செல்வனின் கருத்துக்களை பத்திரிகையாளர்கள் தமது மொழியில் எழுதும் போது சில தவறுகள் இடம்பெற்றுள்ளன என்று புலிகளின் வட்டாரம் கூறியுள்ளது. அது திட்டமிட்டு ஏற்பட்ட தவறுகளல்ல.

உதாரணமாக, 'ஈழம் எமது பிரதான கோரிக்கையல்ல!' என்று தமிழ்ச் செல்வன் கூறியதாக அர்த்தப்பட பேட்டியில் உள்ளது.

'நாம் எடுத்த எடுப்பில் ஈழம் கேட்கவில்லை. எமது முதல் கோரிக்கை ஈழமாக இருக்கவில்லை. எமது ஏனைய கோரிக்கைகள் மறுக்கப்பட்டதாலேயே ஈழக் கோரிக்கைக்கு தள்ளப்பட்டோம்!' என்றே கூறினாராம். நாம் என்று அவர் கூறியது தமிழ்த் தரப்பை. புலிகள் இயக்கத்தையல்ல.

"தமிழ் ஈழமே எமது கொள்கை, அதற்கு ஈடான மாற்றுத்திட்டம் இருந்தால் பரிசீலிக்கத் தயார், அதனை முன்வைக்க வேண்டியது அரசே அன்றி நாமல்ல!" என்றே புலிகள் கூறிவருகின்றனர்.

சிங்கள மக்களிடம் தமது பேட்டி சென்றடைவதை புலிகள் விரும்பினர். சிங்கள மக்களிடம் தம்மைப் பற்றிய பயங்கரமான, உண்மைக்கு மாறான சித்தரிப்பை தகர்ப்பதுதான் இப்பேட்டி கொடுக்கப்பட்டதின் நோக்கம் எனத் தெரிகிறது.

ஜனாதிபதியின் பிள்ளைகளுக்கு தம்மால் ஆபத்து என்பது வெறும்புரளி என்றும் தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார். ●

## அதிரடி அய்யாத்துரை



**வவுனியாவில் சட்டவிரோத** முகாம் இருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை கூறியதை கழகம் மறுத்துள்ளது. சேறு பூசும் முயற்சியாம்! இவைதானே தாங்களாக இரண்டுபேரை ஒப்படைச்சு பொல்லைக் கொடுத்து அடிவாங்கினவை! பிறகு சேறு பூச என்றால் என்ன அர்த்தம்? எல்லாம் இருக்க, கழக முகாமில் இருந்து தப்பியவர் பற்றி கழக உபதலைவர் பி.பி.சிக்கு கூறுகையில், "சாதாரண தோழர் மாதிரித்தான் வைத்திருந்தோம். பாய்ந்து சென்றுவிட்டார்" என்றார். அப்படியானால் கழகத் தோழர்கள் அனைவரும் காலில் விலங்கோடுதான் இருக்கினமோ?!

**மறுபடி பேச்சு வார்த்தை** வதந்தி பரவிக்கொண்டிருக்குது. காலம், நேரம் புரியாமல் ஊகம் கூறி சனத்தைக் குழப்புவது இது முதல் முறையல்ல. இந்த அய்யாத்துரை சொல்லுறன்-கேட்டுக்கொள்ளுங்கோ? எலக்சன் வெற்றிக்காக கத்தியை தீட்டுகினம். இந்த நேரத்தில் புத்தியை தீட்டுவினம் எண்டு நினைப்பது நடக்கக்கூடிய காரியமில்லைப்பாருங்கோ.

**நிறம் ஒன்றை** குறிக்கக்கூடிய பெயராம் அந்த வெகுஜனப் பிரதிநிதிக்கு. வவுனியாவில் தொலைபேசி இணைப்புகள் பெற்றுக் கொடுக்க அன்பளிப்பு வாங்கியுள்ளாராம். பணம் படைத்தவரான அவர் இப்படி ஏன் வாங்குகிறார்? என்று கேட்டபோது, 'வருவதை விடுவானேன்?' என்று சட்ட நுணுக்கத்தோடு சிந்திக்கிறாராம். இவருக்கு ஒரு செயலாளர் இருக்கிறாராம். அண்ணர் எட்டடி பாய்ந்தால் அவர் பதினாறடி பாய்கிறாராம்!

**இன்றைய கால கட்டத்தில்** பச்சை கட்சியின் பேச்சுக்கள்தான் அதிகாரதரப்பாரின் நாசூக்கான தந்திரங்களின் சாயத்தை வெளுக்க வைக்குது. "இல்லையென்றால் கூட்டாக நின்றல்லோ உலகத்துக்கு பூச்சாண்டி காட்டுவினம்!" என்று ரெண்டு எழுத்து தரப்பும் அபிப்பிராயப்படுகுதாம். "பச்சைக் கட்சியையும் மௌனமாக்கிப்போட்டு தமிழரின் கழுத்தை நெரிக்கத்தான் ஒற்றுமைப் பல்லவி பாடப்படுகுது. சில தமிழ் எடுபிடிகள் அதற்கு ஒத்துப்பாடுகினம். கவனிச்சுக் கொண்டுதான் இருக்கிறோம்" என்று கூறுகினமாம். சம்பத்தில் ரெண்டு எழுத்தாரை சந்தித்த ஒருவர் கூறியது அதுதான்.

**பொதி பொதி** என்று பொரியும் கிடைக்கவில்லை. நிவாரணப் பொதியையும் எடைகுறைச்சுப் போட்டினம். இதையெல்லாம் கண்டிக்க வக்கில்லாத வீரத்தமிழ் கட்சிகள் சில, பச்சைக் கட்சி மாநாட்டை கண்டிச்சு காட்டமாக அறிக்கை விட்டிருக்கினம். வேறையென்ன, அதிகாரம் அக் கட்சியிடம் இல்லையென்ற துணிச்சல்தான் காரணம்.

**வவுனியாவில் தமிழ்க்** கட்சி ஒன்று தன்னோடு போட்டியான கட்சியை ரெண்டு எழுத்தாருடன் தொடர்பு இருப்பதாக சீருடைத்தரப்பிடம் குச்சி கொளுத்திப் போடுகிறதாம். இத்தனைக்கும் அந்த இரண்டு கட்சிகளும் ஒரே கூட்டமைப்பிலும்(?) இருப்பதாக அடிக்கடி அறிக்கை விடுகின்றன. கூட இருந்து குழி வெட்டுவதைவிட கூடாமலேயே இருக்கலாமல்லோ.

**ரெண்டு எழுத்தாருடன்** பேசுவது எண்டால் பச்சை அணியுடன் உடன்பாடு வரவேணுமாம். நீதிக்குப் பொறுப்பானவர் கூறியுள்ளார். சண்டை பிடிக்க மட்டும் உடன்பாடு தேவையில்லையாக்கும்!

**வடக்கு-கிழக்கு மாகாண** முன்னாள் அதிகாரக் கட்சித் தலைவர் மிக்க குழப்பத்தில் உள்ளார் போலக்கிடக்கு. பிரார்த்தனை நடத்தியது ஏன் என்றால், மக்களைப் போராடப் பழக்குவதற்காம். ஹி.ஹி. மக்கள் அல்லோ இவையை போராடப் பழக்கினம்! மக்கள் போராட பின்னால் நின்று ஆதரவு அறிக்கைவிடும் இவையல்லோ மக்களிடம் பழகிக் கொண்டிருக்கினம். "ஆயுதம் தூக்கி ஒழுங்காக என்ன செய்து முடிச்சனியள்?" என்று கேட்டால், "புலிகள் விடேல்லை" என்று புலம்புவது. "அமைதி வழியில் ஏன் போராடாமல் இருக்கிறியள்?" என்று கேட்டால், "சனம் ரெடியில்லை" என்று கதை. 'முரசு' வன்முறைக்கு தூண்டுதாம். விஷமத்தனமாம். அப்படியென்றால் ஐ.பி.கே.எஃப். காலத்திலே கட்டாயப் படுத்தி நூற்றுக்கணக்கான ஆட்களைப்பிடிச்சுப் பயிற்சி கொடுத்து, பின்னர் தப்பியோடும்போது நடுக்கடலில் சாகவிட்டது எத்தனை மடங்கு பெரிய விஷமத்தனம்?

**தொல்லையைத் தவிர்க்கும்** குழுவில் சீருடையினரை அழைத்துக் கதைத்தவையாம். "இறுக்கத்தைத் தளர்த்த முடியாது. விளைவுகள் மோசமாகிவிடும். ஆகவே இப்படித்தான் செய்ய வேண்டியிருக்கும்!" என்றமாதிரி நேரடியாகவே சிலர் கூறிவிட்டனராம்.

**வவுனியா எரிபொருள்** விவகாரத்தில் தலையிட்ட மதகுருவை சீருடை அதிகாரி கூப்பிட்டு "இதில் எல்லாம் தலையிடவேண்டாம். உங்கள் வேலையைப் பாருங்கள்!" என்று கூறிவிட்டாராம்.

**கொழும்பில் காக்கி** சீருடையினரின் நலன்புரி நிலையக் கூட்டத்தில் பற்பல ஆதங்கக்குரல்கள் ஒலித்தன. "தண்ணியும் இல்லாமல் தெருவிலே, உச்சிவெய்யிலில் நிற்கிறோம். கவனிப்பார் இல்லை. பலர் வேலையை விட்டுப்போட்டுப் போய் ஒட்டோ ஓடிச் சீவிக்கினம். இதை விட அது பெட்டர்!" என்று விசனப்பட்டினமாம். பயிர்களுக்கு மட்டுமோ- வேலிகளுக்கும் பிரச்சனை உண்டுதான்!

**பாதுகாப்புக்கு** துணையான அதிகாரம் படைத்தவர் குதிரையில் ஏறிப்போய் அணிவகுப்பைப் பார்வையிட்டவர். அதற்காக இரண்டு நாள் பயிற்சி எடுத்தவராம். அணிவகுப்பின்போது 'பிளாஷ்' போடாமல் படமெடுக்குமாறு கமராக்காரர்கள் கேட்கப்பட்டவையாம். பிளாஷ் வெளிச்சத்திற்கு குதிரை மிரண்டால் பிசகாகப் போயிடுமல்லோ!

**இவ்வாரம் கடன்வாங்கிய பொன்மொழி**

"கோபத்தோடு
காலையில் எழுந்தால்
நஷ்டத்தோடு
இரவு படுக்கப் போவீர்கள்!" ■



படிப்பகம்

## அரசியல் தொடர்

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

198

# வன்னியில் முதல் கரும்புலித் தாக்குதல்

மன்னார் கொண்டைச்சி இராணுவ முகாம் 21.06.90 அன்று விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்கானது.

வன்னித் தளபதி பால்ராஜ், மன்னார் தளபதி தீபன் ஆகியோரது தலைமையில் பாரிய தாக்குதல் தொடுக்கப்பட்டது.

தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது என்பதை ஊகித்த படையினர் எதிர்ப்புக் காட்டுவதை கைவிட்டு பின்வாங்கினார்கள்.



முகாம் புலிகளின் கையில் வீழ்ந்தது. அங்கிருந்து பெரும்தொகையான ஆயுத தளபாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இம் முகாமில், இருந்து பவள் கவச வாகனம் ஒன்றும் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

கண்ணிவெடிக்கு தாக்குப் பிடிக்கக் கூடியது என்று இலங்கை அரசுக்கு அன்றைய தென்னாபிரிக்க நிறவெறி அரசு பவள் கவச வாகனத்தை கொடுத்திருந்தது.

பவள் கவசவாகனம் உட்பட கொண்டச்சி இராணுவ முகாமில் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்கள் யாழ்ப்பாணம் கோண்டாவிலில் 22.07.90ல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

1990 இறுதிவரை நடைபெற்ற சண்டைகளில் மொத்தம் 16 கவசவாகனங்கள்வரை புலிகளால் தாக்கியழிக்கப்பட்டிருந்தன.

கவசவாகனம் கைப்பற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

### வன்னித்தளம்

இந்தியப்படை திரும்பிச் சென்ற பின்னர் யாழ்.குடாநாடு மறுபடி புலிகளின் தளப்பிரதேசமாக மாறியிருந்தது.

புலிகளின் நிர்வாகமே நடந்து வந்தது. அரச நிர்வாகம் என்பது பெயரளவில் மட்டுமே.

யாழ் குடாநாடு தளப்பிரதேசமாக இருந்தும்கூட, நீண்டகால நோக்கில் புலிகளின் இராணுவ செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

வன்னிப் பிராந்தியத்தில் இலங்கை அரச படைகளின் முதுகெலும்பாக உள்ள முகாம்களை தாக்கியழிப்பது அவசியம் என்று தீர்மானித்தார் பிரபாகரன்.

வன்னித் தளபதியாக ஒருகாலத்தில் இருந்தவர் மாத்தையா. ஆனால் மாத்தையாவின் தலைமையில் நடைபெற்ற தாக்குதல்கள் பல தோல்வியிலேயே முடிந்தன.

புலிகளின் மக்கள் முன்னணித் தலைவராக மாத்தையாவை நியமித்த பிரபாகரன், வன்னித் தளபதியாக பால்ராஜை நியமித்தார்.

திறமை, விசுவாசம், கட்டுப்பாடு என்பவற்றின் அடிப்படையில் பொறுப்பாளர்களை தேர்வு செய்வதில் பிரபாகரன் தேர்ச்சியானவர். அதனால்தான் ஏனைய இயக்கங்களால் சாதிக்க முடியாத பல காரியங்களை செய்ய முடிந்தது என்பதையும் மறத்தலாகாது.

பால்ராஜை வன்னித் தளபதியாக பிரபா நியமித்த பின்னர்தான் அங்கு பல இராணுவ முகாம்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மன்னாரில் இருந்து வில்பத்து சரணாலயப் பக்கம் புலிகள் சென்று வருவதை தடுப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த முகாமே கொண்டைச்சி இராணுவ முகாம்.

மன்னார் நகரில் இருந்து தெற்காக 25 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது.

கொண்டைச்சி முகாமை புலிகள் கைப்பற்றிய பின்னர் அப்போக்குவரத்து புலிகளுக்கு சுலபமாகியது.

வன்னிப் பிராந்தியத்தில் கேந்திர நிலைகளில் இருக்கக்கூடிய முகாம்களை அவை பலமாக முன்னரே கைப்பற்றிவிட வேண்டும் என்பது பிரபாகரனின் திட்டம்.

'எதிரி பலமாக முன்னர் நாம் முந்திக் கொள்ள வேண்டும்' என்னும் பிரபாகரனின் கருத்துத்தான் இங்கும் கடைப்பிடிக்கப் பட்டது.

கொண்டைச்சி முகாமை கைப்பற்றிய புலிகள் அடுத்துக் குறிவைத்தது மாங்குளம் இராணுவ முகாமை.

### பெரும் முகாம்



புலிகள் கைப்பற்றிய பவள்

வன்னியில் அரச படையினரின் பாரிய முகாம்களில் ஒன்றாக இருந்தது மாங்குளம் முகாம்.

வன்னிப் பிராந்தியத்தை இரண்டாக பிரிக்கும் வியூகம் வகுக்கக்கூடிய தள முகாமாகவும் அது இருந்தது.

கொக்காவில் இராணுவ முகாம், கொண்டைச்சி இராணுவ முகாம் என்பவை தாக்கியழிக்கப்பட்ட பின்னர் மாங்குளம் இராணுவ முகாம் பலப்படுத்தப்பட்டது.

புலிகளின் தாக்குதலை அங்கு படையினர் எதிர்பார்த்தே இருந்தனர்.

22.11.90 அன்று மாங்குளம் இராணுவ முகாம் மீது பால்ராஜ் தலைமையில் புலிகள் அதிரடித் தாக்குதலை ஆரம்பித்தனர்.

காவலரணை நோக்கி ஆர்.பி.ஜி. தாக்குதல்களை நடத்தினர் புலிகள்.

காவலரண் மண் மூட்டைகள்மீதும் பதுங்குகுழிகள் நோக்கியும் ஷெல்கள் விழுந்து வெடிக்க படையினர் பாதுகாப்பு தேட பதுங்குகுழிகளை நாடினர்.

அதே நேரம் புலிகளின் அணிகள் அலை அலையாக முகாம் நோக்கி முன்னேறின.

முதலில் அதிர்வுகளால் தடுமாற்றம் கண்டாலும், பின்னர் சுதாகரித்துக் கொண்ட படையினரும் திருப்பித் தாக்க ஆரம்பித்தனர்.

புலிகளின் அணிகளது முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது கடும் சண்டை மூண்டது.

சண்டையுடன் பொழுது மலர்ந்தது. மறுநாள் விமானங்கள் வட்டமிட்டன. குண்டுகளை வீசின. ஆனால் புலிகளின் முற்றுகையை உடைக்க முடியவில்லை.

வேறு முகாம்களில் இருந்து படையினர் தரை நகர்வு முயற்சிகளை மேற்கொண்டு மாங்குளம் நோக்கி செல்லவும் முடியவில்லை.

புலிகளின் அணிகள் வன்னிப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய முகாம்கள் முன்பும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தன.



சக்கை லொறியுடன் போர்க்

### கரும்புலித் தாக்குதல்

23ம் திகதி மோதல் தொடர்ந்தது. மோதலை நீளவிடாமல் அதிரடி மூலம் முகாமை விரைவாக கைப்பற்ற முடிவு செய்தனர் புலிகள்.

முதல் தாக்குதலில் முகாம் வீழ்ச்சி காணாவிட்டால், மறுநாள் கரும்புலித் தாக்குதல் மேற்கொண்டு முகாமை அழிப்பது என்பது தாக்குதல் திட்டம் தீட்டப்படும்போதே செய்யப்பட்ட முடிவு. அந்த முடிவின்போது வெடிமருந்து நிரப்பி தயாராக நின்ற லொறியில் முகாம் நோக்கிப் புறப்பட்டார் கரும்புலி லெப்டினன்ட் கேணல் போர்க்.

மாங்குளம் முகாம் பற்றியும் அதன் சுற்றாடல் பற்றியும் நன்கு தெரிந்து வைத்திருந்த போர்க், குண்டு லொறியில் ஏறும் போது; "நான் புறப்படுகிறேன். இதோ மாங்குளம் முகாம் முடிந்தது" என்று கூறிவிட்டு சென்றார்.

வெடிமருந்து நிரப்பிய லொறியை சக்கை லொறி என்றுதான் அழைப்பர்.

சக்கை லொறி வெடித்ததும் முகாம் அதிரும். அந்த அதிர்வு அடங்க முன்னரே முகாம் நோக்கிப் பாய்வதற்கு தயார் நிலையில் பதுங்கியிருந்தன புலிகளின் அணிகள்.

சக்கை லொறி தங்குதடையின்றி விரைந்துபோய் இலக்கில் இடித்தது.

மாங்குளம் எங்கும் அந்த அதிர்வு கேட்டது. அதன் பின்னர் புலிகளின் தாக்குதல் அணிகளது துப்பாக்கிகள் வெடிக்கும் ஓசைகள் கேட்ட வண்ணம் இருந்தன.

சக்கை லொறித் தாக்குதலில் முகாமுக்குள் இருந்து சளைக்காமல் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான படையினர் பலியாகினர்.

அத்தாக்குதல் மட்டும் இல்லையானால் முகாமை கைப்பற்றுவது கடினமான காரியமாகவே இருந்திருக்கும்.

எஞ்சிய படையினர் மாங்குளத்தை அண்டியிருந்த காட்டுப்பகுதிகளை நோக்கிப் பின் வாங்கினர்.

முன்னூறுக்கு மேற்பட்ட படையினர் இச் சண்டையில் பலியாகினர். புலிகள் தரப்பில் பெண் புலிகள் உட்பட 40 பேர் பலியாகினர்.

மாங்குளம் சண்டையிலும் புலிகளின் பெண்கள் படையணி முக்கிய பங்கு வகித்திருந்தது.

ஏராளமான ஆயுதங்களும், இராணுவ உபகரணங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதல் தொடர்பாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் கூறிய விளக்கம் சுவாரசியமானது.

"முகாமைவிட்டு நாம்தான் தந்திரோபாயமாக வெளியேறினோம். வெளியே இருந்து புலிகளை எதிர்த்து தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறோம்" என்று கூறியிருந்தார் ரஞ்சன்.

அன்று மாங்குளம் முகாமை புலிகள் கைப்பற்றியிருக்காவிட்டால் இன்று நடந்து வரும் 'ஜயசிக்குறுய்' எப்போதோ இலக்கை எட்டியிருக்கவும் கூடும்.

நீண்டகால நோக்கில் பிரபாகரன் எடுத்த இராணுவரீதியான முடிவுகள்தான் இப்போது புலிகளுக்கு உதவுகின்றன.

மாங்குளத்தை கைப்பற்ற மட்டும் ஜயசிக்குறுய் படைகள் கிட்டத்தட்ட ஆறுமாத காலமாக முயன்றுகொண்டிருக்கின்றன. இது ஒன்றே மாங்குளம் இராணுவ முகாமின் கேந்திர முக்கியவத்துவத்தை அறிந்து கொள்ளப் போதுமானது.

### கரும்புலி போர்க்

வன்னியில் நடைபெற்ற சண்டையில் பலியான முதல் கரும்புலி லெப்டினன்ட் கேணல் போர்க்.

போர்க் வன்னியில் சேமமடு என்ற இடத்தைச் சேர்ந்தவர். இக்கிராமத்தின் எல்லையாக இருப்பது சிங்களக் கிராமமாகும்.

கரும்புலித் தாக்குதல் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் தன் கிராமத்திற்கு சென்றார் போர்க்.

கரும்புலித் தாக்குதலுக்கு புறப்படும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் குறிப்பிட்ட நாளுக்கு முன் தங்கள் வீடுகளுக்கு சென்று தாய், தந்தை சகோதரங்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை கடைசியாக ஒரு தடவை பார்த்துவிட்டு வருவர்.

போர்க்கும் தன் தாயாரிடம் சென்று "அம்மா எனக்கு உங்கட கையாலே ஒரு பொட்டு வைச்சுவிடுங்கோவன், ஆசையாக இருக்கிறது" என்று கேட்டார்.

ஏன் கேட்கிறான் மகன் என்று அறியாத தாயாரும் பொட்டு வைத்து மகிழ்ந்தார். சிரித்தபடியே விடைபெற்ற போர்க் படலையில் நின்று ஒரு கணம் திரும்பிப் பார்த்தார். பின்னர் போய்விட்டார்.

பக்கத்துவீட்டுச் சிறுவர்களுடன் விளையாட்டாக கதைத்துக் கொண்டிருந்த போர்க்; "தம்பியவை மாவீரர் தினம் வருகுதல்லோ, தற்செயலாக நான் செத்தால் அண்டைக்கு என்ன செய்வியள்?" என்று கேட்டார்.

"நீங்கள் ஏன் சாகப்போறியள்" என்று கூறினர் சிறுவர்கள்.

போர்க் சிரித்தபடி: "தப்பித்தவறி நான் செத்துப்போனா என் நினைவாக ஆளுக்கு ஒரு மரம் நட்டு வளவுங்கோ" என்று கூறினாராம்.

**அற்புதன் எழுதுவது**

கரும்புலியாக போர்க் சென்றபின்னர் அவரது தாயார் கூறினார்: "அவன் அண்டைக்கு வித்தியாசமாக நடந்து கொண்டதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் கரும்புலியாகச் செத்த பிறகுதான் அவன் பக்கத்தில் படுக்கச் சொன்னது, பொட்டுவைக்கச் சொன்னது, உடுப்புக்களை விட்டிட்டுப் போனது ஏனெண்டு விளங்குது!"

### மாவீரர் தினம்

1990 மாவீரர் தினத்துக்குமான தாக்குதலாகவே மாங்குளம் முகாம் தாக்குதல் நடத்தப்பட்டது.

புலிகள் பலவீனமாகிவிட்டனர். அவர்களால் தாக்குப்பிடிக்க முடியாது என்று கூறிவந்த அரசாங்கத்திற்கு மாங்குளம் தாக்குதல் நெத்தியடியாக அமைந்தது.

(தொடர்ந்து வரும்)



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# இன்னொரு தடுப்பு முகாமுக்கு அழைப்பா?

**கொ**ழும்பில் இருந்து வெளியாகும் 'லக்விம' பத்திரிகையின் தலைப்புச் செய்தி (06.09.98) பின்வருமாறு கூறுகிறது: "வடபகுதிக்கு அனுப்பப்பட்ட முன்னூறு கோடிரூபாய் உணவுப் பொருட்கள் புலிகளிடம் போய்ச் சேர்ந்ததாக சந்தேகம். விசாரணை நடக்கிறது!"

இச் செய்தியை குறிப்பிட்ட பத்திரிகைக்கு கொடுத்தவர்கள் யாராக இருந்தாலும், மிக விஷமத்தனமான சதிநோக்கம் கொண்ட தகவலே அதுவாகும்.

**வன்னியில் பட்டனிச்சாவை வேடிக்கை பார்க்க தயாராக உள்ள அரசாங்கமும், அத்தியாவசிய சேவைகள் திணைக்களமும் இவ்வாறான செய்திகளால் தங்கள் நடவடிக்கைகளை நியாயப்படுத்த முனைவதாகவே சந்தேகிக்க வேண்டியுள்ளது.**

அவ்வாறு இல்லையெனில், வடபகுதி நிவாரணத்திற்காக என்று ஒதுக்கப்பட்ட பொருட்களை அங்கு அனுப்பாமல் மாபெரும் மோசடி நிகழ்ந்துள்ளதா? என்றும், அதனை மூடிமறைக்க காரணம் சோடிக்கப்படுகிறதா? என்றும் சந்தேகம் ஏற்படுகிறது.

இத்தகைய சந்தேகம் நியாயமானதாகும். ஏற்கனவே வடபகுதிக்கு நிவாரண பொருட்கள் அனுப்புவதில் மோசடிகளும், சுருட்டல்களும் பாரியளவில் நடந்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆண்டு 10.04.97 முதல் 31.12.97 வரை கப்பல் மூலம் யாழ் குடாநாட்டுக்கு அரசால் அனுப்பப்பட்ட 31 கோடிரூபா - பெறுமதியான உணவுப்பொருட்கள் யாழ் அரச அதிபரிடம் சென்றடையவில்லை.

யாழ் மாவட்டத்துக்கு அனுப்பப்பட்டதாக கணக்கு எழுதிவிட்டு, சுருட்டல் நடந்திருக்கிறது என்றே கருதவேண்டியிருக்கிறது. இத்தகவல் வெளியாகி ஒருமாதகாலம் கடந்துவிட்டபோதும், ஊழல் செய்தவர்களை கண்டுபிடிக்க எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

வடபகுதிக்கு நிவாரணம் அனுப்புவது என்ற பெயரில் சுருட்டல் நடப்பது ஒருபுறம் இருக்க, அனுப்பப்படுவதற்கான பொருட்களை கொள்வனவு செய்வதில் கமிஷன் வாங்குவது மூலமும் பல அதிகாரிகள் கொழுத்திருக்கின்றனர்.

பலநூறு கோடி ரூபாய்கள் இவ்வாறு மோசடி செய்யப்பட்டு வருவதாக நம்பகமான தகவல்கள் கூறுகின்றன.

குறிப்பிட்ட சில அதிகாரிகளுக்குள் பங்குபிரித்து மோசடிகள் நடந்து வருகின்றன. அரசியல் பின்பலம் உள்ள புனரமைப்பு சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவரே சுருட்டல் விவகாரங்களில் முன்னணியில் நிற்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இம்மோசடிகள் தொடர்பாக எவ்வித அக்கறையும் காட்டாத அரசாங்கம் நிவாரண வெட்டுக்கு காரணம் நிதிப் பற்றாக்குறை என்றும், புலிகளுக்குப் போய்ச் சேர்வதை தடுக்கிறோம் என்றும் நாளொரு விதமாக கூறிக்கொண்டிருக்கிறது.

'நிவாரண நிறுத்தமே நடக்கவில்லை' என்று அப்பட்டமான பொய் ஒன்றை நாக்கூசாமல் அவிழ்த்துவிட்ட அரசாங்கம், இப்போது நிவாரண வெட்டுக்கு நியாயம் கூறுவதையும் அவதானிக்க முடிகிறது.

வன்னியில் ஆரம்பமான மக்கள் போராட்டங்களும், பரவலாக எழுந்த கண்டனக் குரல்களுமே அரசு உண்மையை ஒப்புக்கொள்ளும் நிலைக்கு தள்ளியிருந்தன.

யாழ் குடாநாட்டுக்கு நிவாரணம் வழமைபோல வழங்கப்படும் என்றும், வன்னிக்கு நிவாரண வெட்டு தொடரும் என்றும் ஜனாதிபதி சந்திரிக்கா கூறியுள்ளார்.

உண்மையில் நிவாரணப் பொருட்கள் புலிகளிடம் போய்ச் சேருவதை தடுப்பதுதான் நோக்கமாக இருந்திருக்குமானால் ஜூன், ஜூலை மாதங்களுக்கான நிவாரணத்தை தனது கட்டுப்பாட்டில் உள்ள யாழ்மாவட்டத்தில் வெட்டியது ஏன்? என்ற கேள்விக்கு அரசு பதில் கூறியாகவேண்டும்.

யாழ் மாவட்டத்தில் நிவாரண நிறுத்தத்துக்கு எதிரான மக்கள் எழுச்சிக்கான அறிகுறிகளை அவதானித்த பின்னரே அங்கு நிவாரண வெட்டை நிறுத்த அரசு முன்வந்தது.

ஆனால், ஜூன், ஜூலை மாதங்களில் அநியாயமாக வெட்டப்பட்ட நிவாரணப் பாக்கி வழங்கப்படவில்லை. அதனை வழங்குமாறு மாண்புமிகு ஜனாதிபதி கருணைகூர்ந்து உத்தரவிடவும் இல்லை.

கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் மட்டும் யாழ் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததாக அரசாங்கம் கனவு கண்டுவிட்டதோ தெரியவில்லை.

எனவே, இன்றைய ஆட்சியாளரின் அணுகுமுறைகளுக்கும், அவர்கள் கூறுகின்ற விளக்கங்களுக்கும் இடையே எவ்விதமான சம்பந்தமும் இருப்பதில்லை. நிவாரண வெட்டு விடயத்திலும் அதனையே அவதானிக்க முடிந்தது.

இவற்றுக்கான உண்மையான காரணம் யுத்த வெற்றி சார்ந்த இராணுவ நலன் என்பது அழுத்தம் திருத்தமாக அம்பலமாகியுள்ளது.

நிவாரண வெட்டும் இராணுவ நலன் சார்ந்து மேற்கொள்ளப்பட்ட முடிவேயாகும் என்பதை முன்னரே முரசு கூறியிருந்தது. சமீபத்தில் பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கை அதனை உறுதிப்படுத்தியுள்ளது.

'நிவாரண வெட்டால் பாதிப்பில்லை, எவரும் சாகவில்லை' என்று பாதுகாப்பு அமைச்சு சப்பைக்கட்டு கட்டியிருந்தது.

ஆயுதங்களையும், அதனோடு தொடர்பான விவகாரங்களையுமே நாட்டின் பாதுகாப்புக் கருதி பாதுகாப்பு அமைச்சு கையாள்வது வழக்கம்.

உணவும் ஒரு ஆயுதமாக இன்றைய ஆட்சியாளரால் கருதப்படுவதால் வடக்கு-கிழக்கில் அதனை விநியோகிக்கும் முறையை தீர்மானிப்பது பாதுகாப்பு அமைச்சின் கையில் போயிருக்கிறது.

ஐ.தே.கட்சி ஆட்சியிலும் பொருளாதார முற்றுகை, உணவுத்தடை என்பன கடைப்பிடிக்கப்பட்டன.

ஆனாலும் நிவாரணம் வழங்குவது போன்ற விடயங்கள் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த விடயமாகவோ, பாதுகாப்பு தரப்பின் நலனுக்கும், விருப்பத்துக்கும் ஏற்ப தீர்மானிக்கப்படுவதாகவோ அன்று இருக்கவில்லை. புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுத்தான் அவற்றை தீர்மானித்தது. அரசாங்கத்தின் அரசியல் முடிவுகளின்படியே அந்த அமைச்சு இயங்கிவந்தது.

தமிழ் மக்களை பணியவைத்தல் என்பதே ஐ.தே.கட்சியின் அரசியல் கொள்கையாகவும் இருந்தமையால், அதற்கேற்பவே பொருளாதார தடைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், இன்றைய ஆட்சியாளர்களுக்கு தமிழ் மக்களை பணியவைத்தல் என்பதுடன், எப்படியாவது யுத்தத்தில் விரைவாக வெற்றிபெற வேண்டும் என்ற அவசரமும் ஏற்பட்டுள்ளது.

எனவே, வடக்கு-கிழக்கில் இன்றைய அரசு நம்பியிருப்பது படையினரையேயாகும்.

ஆகவே, வடக்கு-கிழக்கில் மட்டுமன்றி முழுநாட்டிலுமே தமிழர்கள் தொடர்பாக எடுக்கும் ஒவ்வோர் முடிவும், கொள்கைகளும் இராணுவ நலன் என்ற தராசில் வைத்தே தீர்மானிக்கப்படுகின்றன.

அதன்காரணமாகவே உணவும் பாதுகாப்பு' தரப்பு கையாளும் ஆயுதமாக மாறியுள்ளது. வன்னியில் 'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கை ஒன்றேகால் வருடமாக தொடர்கிறது.



காலக்கெடுக்கள் பொய்த்துவருவதால் அவற்றுக்கு காரணம் கூறவேண்டிய கட்டாயம் பாதுகாப்புத் தரப்பினருக்கு ஏற்படுகிறது. அப்படிக் காரணம் தேடும்போது "நிவாரண பொருட்கள் புலிகளுக்கு போகின்றன, புலிகள் நன்றாக சாப்பிட்டுவிட்டு மோதுகிறார்கள், நிவாரணத்தை நிறுத்தினால் வாடிப்போவார்கள்" என்று விளக்கம் கூறப்பட்டிருக்கலாம்.

எப்படியாவது வெற்றிபெற்று தேர்தலில் வாக்கு குவிக்கத் துடிக்கும் அரசாங்கம் பாதுகாப்பு தரப்பின் காரணத்தை நம்பி, நிவாரண வெட்டை நிறுத்தியிருக்கலாம்.

கடந்த மூன்று மாதங்களாக நிவாரண வெட்டு நடந்தும்கூட ஜயசிக்குறுய் இலக்கை எட்டிவிடவில்லை.

எனவே, நிவாரண நிறுத்தம் புலிகளையோ, அவர்களது சண்டைத்திறனையோ எவ்வகையிலும் பாதித்ததாகத் தெரியவில்லை. ஆனால் வன்னி என்று பொதுவாக அழைக்கப்படும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களையே பயங்கரமாக பாதித்திருக்கிறது.

மேற்படி நான்கு மாவட்டங்களிலும் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் மட்டும் மொத்தம் ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 51 குடும்பங்களைச் சேர்ந்த ஆறு இலட்சத்து 15 ஆயிரத்தி 785 பேர் வசித்து வருகின்றனர். இவர்களில் இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை 4 இலட்சத்து 57 ஆயிரத்தி 397 பேர்.

இடம்பெயர்ந்தோரை இரண்டுவிதமாக பிரிக்கலாம். சூரியக்கதிரின் பின்னர் யாழ் மாவட்டத்தில் இருந்து வன்னி நோக்கி இடம்பெயர்ந்தவர்களும், மற்றும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோரும் ஒரு பிரிவினர்.

'எடிபல', 'ஜயசிக்குறுய்' மற்றும் இராணுவ நடவடிக்கைகளால் சொந்த மாவட்டங்களுக்குள்ளேயே இடம்பெயர்ந்து வசிப்பவர்கள் இன்னொரு பிரிவினர்.

ஆனால் அரசாங்கம் யாழில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மட்டுமே பெருமளவில் இருப்பதாக சித்தரித்து, வன்னியில் தனது இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்தோர் அவலத்தை பூசி மெழுகப் பார்க்கிறது.

மன்னார், வவுனியா, முல்லை, கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களில் அந்தந்த மாவட்டங்களுக்குள் மட்டும் 23 ஆயிரத்தி 791 குடும்பங்களைச் சேர்ந்த 97 ஆயிரத்தி 420 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்பது சாதாரண விடயமல்ல.

இங்கு முன்னெப்போதும், எந்த ஆட்சியிலும் இல்லாதளவுக்கு இன்றைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள்மீது முரட்டுத்தனமானதும், இரக்கமற்ற பிடிவாதமானதுமான அணுகுமுறைகளையே கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

முல்லை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் அரச கட்டுப்பாடு அற்ற பகுதிகளில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த இடம்பெயர்ந்தோர் 2 இலட்சத்து 67 ஆயிரத்தி 716 பேர் உள்ளனர்.

இவர்களில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தோரே அதிகமானோர். இவர்களுக்கு அரச கட்டுப்பாட்டில் உள்ள மன்னார் மாவட்டத்துக்கு வந்தால் மட்டுமே நிவாரணம் தரப்படும் என்று அரசு கூறியுள்ளது.

இக்கூற்றானது 17 ஜூன் 98ல் அத்தியாவசிய சேவை ஆணையாளர் ஒபாடே வெளியிட்ட சுற்றறிக்கையை பொய்யாக்கியுள்ளது.

இலவச உணவு விநியோகத்தை தொடர்ந்து நடத்த கஜானாவில் நிதி பலகோடி பற்றாக்குறையாக இருக்கிறது. அதனால்தான் நிவாரண வெட்டை அமுல்படுத்துவதாக அவர் தெரிவித்திருந்தார்.

இப்போது அரசகட்டுப்பாட்டு பகுதிக்கு வந்தால் உணவு கிடைக்கும் என்று அதே ஆணையாளர்தான் அறிவித்தும் உள்ளார்.

இந்த அறிவித்தல் பாரதூரமான ஒன்றாகும். ஆடுமாடுகளை தீனியைக் காட்டி இழுப்பதுபோல, மக்களுக்கு உணவைக் காட்டி அலைக்கழிக்கும் மனிதாபிமானமற்ற செயற்பாடாகவே இந்த அறிவிப்பு அமைந்துள்ளது.

இரண்டு இலட்சத்து 67 ஆயிரம்பேர் மன்னாருக்கு வந்து சேர்வது சாதாரண விடயமல்ல. அங்கு தங்குவதற்கான வசதிகளும் இல்லை. அதுதவிர அவர்களை யாழ் அனுப்பிவைக்கக்கூடிய போக்குவரத்து வசதி செய்து முடிக்கவே பல ஆண்டுகள் செல்லும். அதுவரை முகாம்களில் தடுத்துவைத்து ஆடு மாடுகள்போல நடத்துவர்.

ஏற்கனவே யாழ் குடாநாட்டுக்கு மக்களை அழைத்தது அரசாங்கம். அறுநூறு பேர் காணாமல் போயினர். புதைகுழிகளும், எலும்புக்கூடுகளுமே அவர்களது நினைவாக உள்ளன.

யாழ் குடாநாடு சென்ற மக்களுக்கு மீளக் குடியேறுவதற்காக வாங்கப்படுகின்ற நஷ்டஈடுகூட கிடைக்கவில்லை. வலிகாமம் பிரதேசத்தில் பெரும்பாலான பகுதிகளில் அப்பகுதி மக்கள் மீளக்குடியேறுவதை படையினர் அனுமதிக்கவில்லை. அம் மக்கள் சொந்த மாவட்டத்திலேயே அகதி முகாம்களிலும், உறவினர்கள் வீடுகளிலும் நிவாரணத்தை நம்பி தங்கியிருக்கின்றனர்.

வன்னியில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள யாழ் மாவட்ட மக்களில் பெரும்பாலானோர் வலிகாமம் பகுதிகளைச் சேர்ந்தவர்களே.

இதற்கிடையே சில வருடங்களுக்கு முன்பாக இதேபோன்ற அறிவிப்பை அரசாங்கம் வெளியிட்டதையும் மறந்துவிடலாகாது.

அரச கட்டுப்பாட்டில் உள்ள வவுனியாவிற்கு யாழ் மக்களை வருமாறும், அவர்களை வரவேற்க முகாம்கள் உள்ளன என்றும் அமோகமாக அறிவிக்கப்பட்டது.

அதனை நம்பிவந்த மக்கள் பாதுகாப்பு காரணம் என்ற பெயரில் தடுப்பு முகாம்களில் பூட்டப்பட்டுள்ளனர். யாழ்செல்ல விரும்புவோரைக் கூட அலைக்கழித்து பல சிரமங்களுக்கு உள்ளாக்கினர்.

விரைவில் மழைக்காலம் ஆரம்பமாக இருப்பதால் திருமலை ஊடான யாழ் கப்பல் சேவை நடைபெற காலநிலை அனுமதிக்காது. மன்னாரில் இருந்து அனுப்புவதாக இருந்தால் ஆழமற்ற கடலில் செல்லக்கூடிய கப்பல் வசதி தேவை. அத்தனை அக்கறையை அரசாங்கம் காண்பிக்கமாட்டாது என்பதும், அதற்கான வசதியும் இல்லை என்பதும் தெளிவானது.

எனவே யாழ் மக்களை தடுப்பு முகாம்களில் வைத்திருப்பது மூலம் மேலும் விரக்திக்கு உள்ளாக்கும் திட்டமே இதுவாகும்.

உணவுக்கு அலைவது, முகாம்களில் வாழ்வது, அரைப்பட்டினி கிடப்பது போன்ற சூழ்நிலையில் உரிமைப்போராட்ட அபிலாசைகள் மங்கி மரத்துப்போகும் என்று ஆட்சியாளர்கள் கருதுகின்றனரா? என்னும் கேள்வியும் எழத் தொடங்கியுள்ளது.

இதனை ஏதோ வன்னி சார்ந்த பிரச்சனை போன்றும், புலிகளுடனான போரில் அரசின் தந்திரங்களில் ஒன்றுபோலவும் மட்டும் சித்தரிப்பது அறிவீனமாகும்.

முழுத் தமிழ் பேசும் மக்களையும் இரந்துண்ணும் மக்களாகவும், அரசினது அறைகுறைப் பொதியை மறுபேச்சின்றி பெற்றுக்கொள்ளும் மக்களாகவும் மாற்றும் ஒட்டுமொத்தமான அரசியல், இராணுவ திட்டத்தின் ஒரு பகுதியே நிவாரண வெட்டாகும்.

புலிகளுக்கு உணவு போய்ச் சேருவதை தடுப்பதாக கூறிக்கொண்டாலும் தமது நிவாரண வெட்டு புலிகளைப் பாதிக்காது என்பது ஆட்சியாளர்களுக்கு தெரியாத விடயமல்ல. எனவே அவர்களது இலக்கு ஒட்டுமொத்தமான தமிழ் பேசும் தரப்பை பலவீனமாக்குவதே என்பது வெளிப்படையாகிறது.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

**ஒ**ரே விதமாகப் பேசுவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறார்களா? அல்லது ஜன நாயக வேலைப்பிரிவினை(?!) மூலம்தனித்தனி யான பணிகள் கொடுக்கப்பட்டிருக்கிறதா? என்று சந்தேகம்.

இலங்கை இனப்பிரச்சனை தீர்வு தொடர் பாக இந்திய முன்னாள் தூதர் 'ஜா' இங்கு வந்தபோது பேசினார். உடனே பொங்கி யெழுந்து இந்தியத் தூதரகத்திடம் ஆட்சேபம் தெரிவித்தார் வெளிநாட்டமைச்சர் கதிர்காமர்.

சில வாரங்கள் சென்று, நீதியமைச்சர் பீரிஸ், "திரு. நாகேந்திர நாத் ஜா பேசியதில் தவறில்லை. தன் கருத்தை கூறினார்" என்று சொன்னதாக பத்திரிகைகள் செப்பின.

"மாகாணசபைத் தேர்தல் என்றால் என்ன, ஜனாதிபதித் தேர்தல் என்றால் என்ன சந்திக்கத் தயார்" என்றார் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே.

"மாகாணசபைத் தேர்தல் நடந்தால் பதவியை ராஜினாமாச் செய்வேன்" என்று உரைத்தார் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜென ரல் அநுருத்த ரத்வத்த.

"நிவாரண வெட்டு நடக்கவே இல்லை" என்று புனிதமான (?!) நாடாளுமன்றத்தில் அறிவித்தார் பிரதி பாதுகாப்பு அமைச்சர்.

"யாழ் மாவட்டத்துக்கு நிவாரணம் கிடைக்கும், வன்னிக்கு நிவாரண வெட்டுத் தொடரும்" என்று அறிவித்தார் ஜனாதிபதி.

"இலங்கை பிரச்சனையில் மூன்றாம் நாடு தலையிடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று முற்றுப்புள்ளி போட்டார் ஜனாதிபதி.

"இந்தியா இலங்கை இனப்பிரச்சனையில் அனுதாபத்துடன் செயற்பட வேண்டும்." என்று இந்தியா போயிருந்தபோது கருத்து உதிர்த் துள்ளார் நீதியமைச்சர் பீரிஸ்.

என்ன, அரசாங்கத்திற்குள் முரண்பாடா? என்று நினைத்தால், நீங்கள் இன்னமும் விரல் சூப்பும் பருவத்தில் இருக்கிறீர்கள்.

ஆறுமுகக் கடவுளின் ஒவ்வொரு முகத் திற்கும் ஒரு தொழில் இருப்பதாக இந்துப் புராணம் கூறுகிறது.

நமது அரசாங்கத்தின் ஒவ்வொரு அமைச் சரும் ஒவ்வொரு விதமாக பேசவைக்கப்பட் டுள்ளனர். வெளியுலகை தாஜா செய்யும் முகம் ஒன்று. மனித உரிமை பேசும் முகம் ஒன்று. போர் முழக்கம் செய்யும் முகம் ஒன்று, பொதி பற்றி அடிக்கடி பேசும் முகம் ஒன்று, தேர்தல் வேண்டாம் என்று உரைக்கும் முகம்

### இவர்கள் ஏன் கூடுகிறார்கள்?

ஒன்று, விரைவில் தேர்தல் வரும் என்று பகரும் முகம் ஒன்று... இப்படியாக பல முகங் கள், தனியான பணிகள். சகல பணிகளும் அடுத்த தேர்தலிலும் அதிகாரத்திற்கு வருவதற் கும், அரைகுறையான தீர்வுப் பொதியை தமிழர் தலையில் கட்டியடிப்பதற்குமே!

–★–

**த**மிழ்ப் பத்திரிகையாளர் மதுசூதனன் கைது செய்யப்....அல்ல...அல்ல கடத்தப்பட் டுள்ளார்.

கைது செய்துவிட்டு காரணம் தேடுவது புதியதல்ல. மதுசூதனனை கடத்திப்போனவர் கள் யார் என்பதை மிகத் தாமதமாகவே அறிய முடிந்தது. ஏன் கடத்தினார்கள் என்பதை இதுவரை சரியாகக் கூறவில்லை.

இனி தொல்லை தவிர்ப்புக் குழுவோ, அல்லது மனித உரிமை ஆணைக்குழுவோ கைது செய்தவர்களிடம் விளக்கம் கேட்கும். அப்படி விளக்கம் கேட்டிருப்பது பத்திரிகை களிலும் வரும்.

"புலிகளுடன் தொடர்பு இருப்பதாக தகவல் கிடைத்தது. விசாரிக்கிறோம்!" என்று பதில் வரும். (பின்னே, சும்மா ஒரு விளையாட்டுக்கு பிடித்தோம் என்றா கூறப்போகிறார்கள்)

அந்தப் பதிலை வாங்கி 'நன்றி' கூறி விட்டு, தேநீர் அருந்திவிட்டு, தாம் கூடிய செய்தியை பத்திரிகைகளுக்கு தெரிவித்து விட்டு கலைந்து போய்விடுவார்கள். கைதான வரின் உறவினர்களும், நண்பர்களும் அலைந்து திரிய வேண்டியதுதான்!

தொல்லை தவிர்ப்புக் குழுவின் தலைவராக இருப்பவர் லக்ஷ்மன் ஜெயக்கொடி. 1974 ல் யாழில் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது, 'எங்கே நடத்தித்தான் பார்க்கட்டுமே' என்று அவர் சவால்விட்டதாக கூட்டணி மேடை களில் காரசாரமாக வசைபாடப்பட்டதும் ஞாபகம் வருகிறது.

மதுசூதனின் சகோதரர் ஒருவர் புலிகளில் இருப்பதாக கூறப்படுகிறது. அப்படியிருந்தா லும் அது மதுசூதனனின் குற்றமல்ல.

அக்காவை எதிர்த்து அவரது பரம வைரி யான ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கிறார் தம்பி அநுரா. அதற்கு அக்கா என்ன செய்வார்? அவரோ அநுராவை அங்கு போகச் சொன் னார்?

**தமிழ்ப்** பத்திரிகையாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் முன்னர் மறைமுகமாக இருந்தது. இப்போது நேரடியாக மாறியிருக்கிறது. கஜன், மாணிக்கவாசம், தெய்வநாயகம்பிள்ளை என்று ஆரம்பித்து இன்று மதுசூதனன்.

மதுசூதனன் ஒரு பத்திரிகையாளர். அவர் எங்கு தங்கியுள்ளார்? என்ன செய்கிறார்? என் பது இரகசியமல்ல. பின்னர் ஏன் நடுவீதியில் வைத்து முகவரியில்லாத ஒருவரைப்பிடிப்பது போல கடத்திப் போனார்கள்?! இதனை யெல்லாம் தொல்லை தவிர்ப்புக்குழுவோ, அரசின் மனித உரிமை ஆணைக்குழுவோ ஏன் கேட்பதில்லை?! அங்குதான் இருக்கிறது விஷயம்.

இவற்றின் நோக்கம் தவறுகளை கண்டறி வதல்ல, அவற்றுக்கு வெள்ளையடிப்பதுதான்!

அதற்காக இவற்றிடம் புகார் கூறவேண் டாம் என்றில்லை. இவற்றை அம்பலமாக்கவும், இவற்றின் இயலாமையை வெளிக்காட்டவும் அவையும் உதவும்!



படிப்பகம்

www.padippakam.com

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 26

**கடந்தவாரம்**

**நாட்டின் பொதுப்பணத்தை தனது சொந்தத் தேவைக்காக செலவு செய்கிறான் இடி அமீன். அது தவிர, அனாவசியமான திட்டங்களை தீட்டியும் பணத்தை விரயமாக்குகிறான். திறைசேரி அதிகாரிகள் குழப்பமடைகின்றனர்.**

**இனி....**

# இடி அமீன்



அரச நிதியை தன்னிஷ்டப்படி அமீன் செலவு செய்த வேகத்திற்கு அரச கஜானா தாக்குப்பிடிக்காமல் காலியானது.

கஜானா காலியாகிக் கொண்டிருப்பதை இடி அமீனுக்கு தெரிவிக்கப் பயந்தனர் அதிகாரிகள்.

தனது செலவுக்குப் பணம் எடுத்து வருமாறு வங்கிக்கு ஆள் அனுப்பினான் இடி அமீன்.

அன்று வங்கியில் பணம் இல்லை. வங்கி உயரதிகாரிகளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

எப்படியோ அரும்பாடுபட்டு தைரியத்தை வரவழைத்து "இன்று பணம் வங்கியில் இல்லை!" என்று கூறினார்கள்.

அதிகாரிகள் கூறியதை சரியாக விளங்கிக்கொள்ளாத இடி அமீனின் முட்டாள் உதவியாளன்; "இன்று பணம் தர முடியாதாம்!" என்று அமீனிடம் போய்க்கூற அமீனுக்கு தலைகால் தெரியாமல் கோபம் வந்துவிட்டது.

**"வங்கியை மூடிவிட்டு அந்த அதிகாரிகளைப் பிடித்துவாங்கடா!"** என்று கத்தினான்.

'பிடித்துவா' என்று அமீன் சொன்னதை அவனது உதவியாளர்கள் 'அடித்துவா' என்று விளங்கிக்கொண்டோ என்னவோ, அதிகாரிகளை செமர்த்தியாக உதைத்துவிட்டனர்.

முதலில் உதை, பின்னர்தான் கதை என்பதால் தங்கள் நிலையை அதிகாரிகளும் விளக்கமுடியாமல் போய்விட்டது.

அமீன் முன்னால் மண்டியிட்டு இருக்க வைக்கப்பட்டனர். சிலருக்கு பற்கள் உடைந்திருந்தன.

மூச்சுப் பிடித்து தங்கள் தரப்பு விளக்கத்தை கெஞ்சும் பாவனையோடு அதிகாரி ஒருவர் கூறி முடித்தபோதுதான், தான் கொஞ்சம் அவசரப்பட்டுவிட்டான் என்பது அமீனுக்கு உறைத்தது.

தகவல் கூறிய தன் உதவியாளர்களில் ஒருத்தனை அழைத்தான்.

**"இவர்கள் உன்னிடம் என்ன சொன்னார்கள்?"** என்று கேட்டான்.

அவன் முதலில் சொன்னதையும் பயத்தில் மறந்து, "இனி பணமே இல்லை என்று சொன்னார்கள்!" எனக் கூறிய போது, அமீனின் கால் உயர்ந்து அவனது இடுப்பின் கீழ் மையத்தில் உதைத்த உதையில் சுருண்டு மடங்கி, வலியின் அடர்த்தியால் மயங்கிப்போனான்.



பாப்பரசருடன் அமீன். உட்படத்தில் பாப்பரசருடன் அமீனின் செயலாளர் சியம்பா.

வங்கி அதிகாரிகள் முகத்தில் தங்கள் வலியையும் மறந்து, சின்னதாக மகிழ்ச்சி ரேகைகள் எட்டிப்பார்த்தன.

அத்தனைபோரையும் விடுதலை செய்த அமீன், தன் அந்தரங்கச் செயலாளர் சியம்பாவை அழைத்து ஆலோசித்தான்.

**"கஜானாவை நிரப்ப என்ன செய்யலாம்?.... செய்யலாம் என்ன செய்யலாம், உடனே ஏதாவது செய்தாக வேண்டும்; யோசனை கூறும்?"** என்றான்.

'யோசனை கூறாவிட்டால் ஒரே போடாகப் போட்டுத் தள்ளிவிடுவானோ?' என்ற பயம் பிடித்துக்கொண்டது சியம்பாவை.

அந்த நேரம் பார்த்து தொலைபேசி அலற, அதனை எடுத்த அமீன், **"என்ன அடிபோடி, நான் கஜானாவை நிரப்ப வழி தேடிக்கொண்டிருக்கிறேன், நீ----- நிரப்ப வழிதேடுகிறாயா?"** என்று இடையே பாவித்த கெட்ட வார்த்தை தனக்கு கேட்காததுபோல வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டார் சியம்பா.

**"ஏன் உமக்கு சிரிப்பே வராதா? குற்றம் செய்தவர்கள் மாதிரி 'உம்'மென்று இருக்கிறீரே?"** என்றான்.

சியம்பாவுக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. நாகரிகம் கருதி காதுகளை திருப்பிக்கொண்டதும் குற்றமாகிவிடுமோ என்று பயந்தவராக, அசட்டுத்தனமான சிரிப்பொன்றை உதிர்த்தார்.

**"இது பரவாயில்லை!"** என்று சிரிப்பை வரவேற்ற அமீன்; **"நான் லிபியாவுக்கு விஜயம் செய்யலாம் என்று இருக்கிறேன்!"** என்று சட்டென்று கூறவும், சியம்பாவின் புருவங்கள் ஆச்சரியத்தால் உயர்ந்தன.

லிபியா உட்பட அரவு நாடுகளின் பயங்கர விரோதியான இஸ்ரேலுடன் நட்பு வைத்திருப்பவன் இடி அமீன்.

அரபு நாடுகளில் இஸ்ரேல், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு முற்றிலும் பிடிக்காத ஒருவர் கேணல் கடாபி.

'விடுதலைக்காகப் போராடுவோர் விமானத்தைக் கடத்துவதிலும் தவறு கிடையாது' என்று கூறியவர் கடாபி.

இஸ்ரேல் என்ற நாடு உலக வரை படத்தில் இருந்து உதிர்ந்தே தீரவேண்டும் என்பதில் அசைக்கமுடியாத உறுதி கொண்டவர்.

ஒரே நேரத்தில் இஸ்ரேலுடனும் அதன் பயங்கர எதிரியான லிபியாவுடனும் எப்படி உறவு வைத்திருக்க முடியும்?

அதனால்தான் சியம்பாவின் புருவங்கள் அளவுக்குச் சற்று அதிகமாகவே உயர்ந்தன.

அதனைப் புரிந்துகொண்டு அமீனே விளக்கத்தையும் கூறினான்; **"இஸ்ரேல் நான் கேட்ட நிதி உதவியை செய்வதற்கு தயங்குகிறது. ஆனால் லிபியா அதிபர் கடாபி நிதிதர ஒப்புக்கொண்டு விட்டார்!"** என்றான் தோள்களைக் குலுக்கியபடி.

**"வரவும், செலவும், உறவையும் பகையையும் தீர்மானிக்கிறது; என்ன அப்படித்தானே நினைக்கிறீர்?"** என்று அமீன் வீசிய கேள்வியால், விக்கெட்டை பறிகொடுத்த துடுப்பாட்ட வீரர் போல தடுமாறினார் சியம்பா.

**"இல்லையில்லை, அப்படி நினைக்கவில்லை,"** என்று சியம்பா மறுக்க, **"அப்படி நினைக்கவில்லை என்றால் நீர் எப்படி என் அந்தரங்கச் செயலாளர்? நான் அப்படி நினைத்துத்தான் லிபியாவை நாடியிருக்கிறேன்!"** என்று இடியென நகைக்க, சியம்பாவுக்கு வியர்த்துவிட்டது.

இப்படியான சந்தர்ப்பங்களில் ஒபேடேக்கு செய்த துரோகம்தான் தன்னை அமீனிடம் நாயாய்பட வைக்கிறதோ? என சியம்பா நினைப்பதுண்டு.

லிபியாவுக்குப் புறப்பட்ட இடி அமீன், அதிலும் பரபரப்பான காரியம் ஒன்றைச் செய்தான்.

இஸ்ரேல் விமானத்தில் லிபியாவுக்கு போய் இறங்கினான் அமீன். அங்கு அட்டகாசமான மரியாதையும், வரவேற்பும் கிடைத்தன.

வரவேற்கப்பட்டு வாகன ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டபோது, வீதியில் பெண்கள் நடந்துபோவதைப் பார்த்து, தன் அருகில் இருந்த சியம்பாவிடம் **"லிபியாவிலேயே ஜனாதிபதியாக இருந்திருக்கலாம்!"** என்று கூறி கண்ணடிக்க, சியம்பா சாரதியைக் கவனித்தார். நல்லவேளை அவனுக்குப் புரியவில்லை.

"ஆபிரிக்க நாடு ஒன்று இஸ்ரேலையும், அமெரிக்காவையும் எதிர்த்து நிற்பது எனக்குப் பிடிக்கிறது. இஸ்ரேல் விமானத்திலேயே அதன் எதிரி நாட்டுக்கு வந்துள்ள உமது துணிச்சலும் எனக்குப் பிடிக்கிறது. நாம் இன்று முதல் நண்பர்கள்! இஸ்ரேல்-அமெரிக்கா போன்ற வற்றின் எதிரிகள்!" என்றுகூறி அமீனை கட்டியணைத்தார் கடாபி.

நிதி உதவிக்காகவே லிபியாவின் உதவியை நாடியபோதும் கடாபியின் பேச்சும், பழகும் விதமும் அவர்மேல் அமீனுக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்திவிட்டது.

தன்னையே எப்போதும் உயர்ந்தவனாகக் கருதும் குணமுள்ள அமீன், தன்னை மறந்தவனாக உணர்ச்சிவசப்பட்டு; **"உங்கள் நட்பைப் பெற நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும். எப்போதும் உங்கள் முகாமில்தான் உகண்டா நிற்கும்!"** என்றபோது, சியம்பாவுக்கு தன் காதுகளையே நம்பமுடியவில்லை.

இடி அமீன் லிபியாவுக்கு விஜயம் செய்ததும், தமது விமானத்திலேயே சென்றதும் இஸ்ரேலுக்கு கடுப்பை ஏற்படுத்தியிருந்தது.

கடாபியும் இடி அமீனும் கூட்டாக விடுத்த அறிக்கை இஸ்ரேலின் கோபத்தை உச்சத்துக்குக் கொண்டு போனது.

இஸ்ரேலையும், அமெரிக்காவையும் விளாசித்தள்ளியிருந்தது அறிக்கை.

இடி அமீன் உகண்டாவில் வந்து இறங்கிய கையோடு வானொலிகள், பத்திரிகைகள் என்பவற்றில் அந்த அறிக்கைக்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

விமானநிலையத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்த அமீன், **"போப்பாண்டவரை முன்பு சந்தித்தேன். அப்போது ஏற்பட்ட மகிழ்ச்சியை கடாபியைச் சந்தித்த போதும் அனுபவித்தேன்!"** என்று கூறினான்.

இடி அமீன் தம்மோடு நட்பாக இருப்பான் என்ற நம்பிக்கையில் உகண்டாவில் முதலீடு செய்திருந்த இஸ்ரேல்காரர்கள் பலர் திகைத்து நின்றனர்.

## தருவது ரசிகன்

இடி அமீனின் மாற்றத்திற்கு விளக்கம் கேட்டது இஸ்ரேல்.

"என்ன விளக்கம் கூறுவது?" என்று சியம்பா கேட்க, வழக்கமான இடிச் சிரிப்புடன் வந்தது பதில்: **"இஸ்ரேலிய நாசகாரர்களை உகண்டா வன்மையாகக் கண்டிக்கிறது! என்று இன்னொருமுறை அழுத்திக் கூறுவதாக அறிவித்துவிடும்!"** என்றான்.

இஸ்ரேல் சினந்தது. அதன் உளவுப்பிரிவு அமீனைத் தீர்த்துக்கட்ட திட்டம் போட்டது.

அமீனின் பலம் என்ன, பலவீனம் என்ன வென்று ஆராய்ந்தது.

பெரிய பலவீனம் பெண்!

மாஅழகி ஒருத்தி தேர்ந்தெடுக்கப் பட்டாள்.

(இடி தொடரும்)

# நடிக்க விடுத்த அழைப்பு



சச்சின் டெண்டுல்கருக்கு ராஜீவ் காந்தி விருது கிடைத்திருக்கிறது. சமீப காலத்தில் 'அந்தக் கால டெண்டுல்கர்' திரும்ப கிடைத்துவிட்டார். இந்த டெண்டுல்கர்தான் வேண்டும். தயங்கி, தாமதித்து, யோசித்து உப்பு சப்பில்லாமல் ஆடிவிட்டு திரும்பும் டெண்டுல்கர் வேண்டாம், என்பது ரசிகர்களின் ஏகோபித்த வேண்டுகோள்.

சச்சினுக்கு இருக்கும் செல்வாக்கைப் பார்த்துவிட்டு ஹிந்தி சினிமாவில் நடிக்க அழைப்பு விடுக்கப்பட்டது.

மறுபேச்சே இல்லாமல் வாய்ப்பை நிராகரித்த டெண்டுல்கர்; "நடிகைகளை கட்டியணைத்து காதல் செய்துகொண்டிருந்தால் உள்நாட்டுப் போர் ஆரம்பமாகிவிடும். என் மனைவி கோபக்காரி" என்று ஜோக்கடித்திருக்கிறார்.

உண்மையான காரணம் அதுவல்ல. ஏற்கனவே சினிமா உலகில் புகுந்த கிரிக்கெட் வீரர்கள் விலாசம் இல்லாமல் போனதை எண்ணித்தான் சச்சின் மறுத்துவிட்டாராம்.

சமீபத்தில் ராஜீவ் விருது வாங்கச் சென்ற இடத்தில் புகைப்படப்பிடிப்பாளர்களது தொல்லை சகிக்காமல் டென்ஷனாகி விட்டார் டெண்டுல்கர்.

தன் மனைவி அஞ்சலியிடம் கண்டிப்பான குரலில், "காரில் போய் அமர்ந்திருங்கள்" என்று கூறினார்.

அப்போதும் அஞ்சலியை தொடர்ந்து புகைப்படப்பிடிப்பாளர்கள், "சற்று நில்லுங்கள்" என்று கெஞ்ச, அஞ்சலியும் நின்று போஸ் கொடுத்தாராம்.

அதனை கவனித்த டெண்டுல்கர் மிக உரத்து போட்ட அதட்டலில் "இனியும் நின்றால் சச்சின் என்னைக் கொன்றுவிடுவார்" என்று கூறிவிட்டு ஓடிப்போய் காருக்குள் புகுந்து கொண்டாராம்.

# வேட்பாளர்களும் வயாக்ராவும்



வாக்காளர்களுக்கு இலஞ்சம் கொடுத்து வாக்குக் கேட்பது நம்நாட்டில் மட்டும் உள்ள பழக்கமல்ல. இது ஒரு சர்வதேசப் பழக்கம்.

பணமாக, பொருளாக, ஆசைகாட்டும் வாக்குறுதிகளாக வாரிவழங்கி வாக்குக்கேட்பார்கள்.

ஆனால் தைவான் நாட்டில் வேட்பாளர்கள் சிலர் கொடுக்கும் பொருள் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

இதனையும் கொடுக்கலாமா? இனி எதை எதை கொடுக்கப் போகிறார்களோ? என்று அரசாங்கம் பதறியடிக்கிறது.

சர்ச்சைக்கும், பரபரப்புக்கும் காரணமான அந்தப் பொருள்; 'வயாக்ரா' செக்ஸ் மாத்திரை.

வயாக்ரா இறக்குமதிக்கு தைவான் அரசு இன்னமும் அனுமதி அளிக்கவில்லை. இந்நிலையில் தைவான் தேர்தல் நெருங்கி வருகிறது. சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வயாக்ரா கொடுத்து வாக்கு வேட்டை துவக்கிவிட்டனர் வேட்பாளர்கள்.

துரிதமாக செயற்பட்ட தைவான் அரசு வயாக்ரா இறக்குமதி செய்வதோ கடத்திவருவதோ ஏழு ஆண்டு சிறைத் தண்டனைக்குரிய குற்றம் என்றும், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தைவான் டொலர் அபாரம் விதிக்கப்படும் என்றும் சட்டம் இயற்றியுள்ளது. ஏதோ போங்கள், இங்கு மாகாணசபை தேர்தல் நடக்கவில்லை.

# 60+19

பத்தொன்பது வயதில் திருமணம் செய்துள்ளார் ஒரு இளைஞர். அதில் என்ன புதுமை? என்கிறீர்களா? இருக்கிறது அதனால்தானே செய்தியாகியுள்ளது.

அந்த இளைஞர் திருமணம் செய்துள்ள மணமகளின் வயது எத்தனை தெரியுமா? 60.

வடகிழக்கு ஈரானில் உள்ள ஒரு கிராமத்தில் இந்தத் திருமணம் ஜாம்ஜாமென்று நடந்திருக்கிறது.

கொராசான் மாவட்டத்தில் கலிலாபாத் என்ற இடத்தைச் சேர்ந்தவர் சுதாபே. 60 வயதான இவரது கணவர் இறந்துவிட்டார். ஏராளமான சொத்துக்கள் வைத்திருக்கிறார்.

இந்நிலையில்தான் 19 வயதான இளைஞரை காதலித்து கைப்பிடித்துள்ளார். திருமணப் பரிசாக 20 ஆயிரம் ரியால்களை அந்த இளைஞருக்கு கொடுத்தாராம் மணமகள் சுதாபே.

# சாதனை முத்தம்



உலக சாதனையில் இடம்பிடிக்க முத்தமிட்டு சாதனை படைத்த ஜோடிகளும் உள்ளனர். அந்தச் சாதனையை முறியடிக்க மிக அதிகமான ஜோடிகள் ஒன்று சேர்ந்து முத்த மழை பொழிந்துள்ளனர்.

ஸ்பெயின் நாட்டில் மொத்தம் ஆயிரத்தி அறுநூறு ஜோடிகள் ஒன்று சேர்ந்து சளைக்காமல் உதட்டோடு உதடு சேர்த்து இச் கொட்டினர். இச் சத்தத்தால் மைதானமே சிலிர்த்து விட்டதாம்.

இந்த உலக சாதனையில் அல்காடி ஹெனாரஸ் நகர மேயரும், அவரது மனைவியும் தவறாமல் கலந்துகொண்டு முத்தமிட்டனர்.

1996ல் காதலர் தினமான பெப்ரவரி 14ல் அமெரிக்காவில் உள்ள மைனே பல்கலைக்கழக மைதானத்தில் 420 கோடிகள் இதழோடு இதழ் கலந்து உலக சாதனை படைத்தனர். அதனை முறியடிக்கத்தான் இந்த சுவையான முயற்சி.

# அரவிந்தாமீது அழகி புகார்



இலங்கை கிரிக்கெட் வீரர்களில் சனத் ஜெயசூர்யா, அரவிந்தா இருவரையும் பெண் ரசிகைகள் மொய்ப்பது வழக்கம்தான்.

இதற்கிடையே தென்னாபிரிக்காவில் இலங்கை அணி வீரர்கள் சிலர் பெண்களுடன் கும்மாளமிட்டதாக தகவல்கள் வெளியாகின. பின்னர் அதனை மறுத்தது இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.

இப்போது இன்னொரு புகார் கிளம்பியிருக்கிறது. கிளப்பியிருப்பவர் அவுஸ்திரேலிய அழகி.

கொழும்பில் இருந்து வெளியாகும் 'ராவய' பத்திரிகை 'திடுக்' செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அழகி ஒருவர் "என் குழந்தைக்கு அரவிந்தாவே அப்பா!" என்று கூறியுள்ளார்.

தனது குழந்தைக்குரிய பராமரிப்புச் செலவை அரவிந்தா தரவேண்டும் என்று அந்த அழகி கோரியுள்ளாராம்.

பொய்யான புகார் கூறப்பட்டால் மரபணு சோதனையை வைத்து கண்டு பிடித்து விடலாம். ஏற்கனவே இம்ரான் கான்மீதும் இப்படியொரு புகார் கூறப்பட்டது. இம்ரான் மறுத்தார். மரபணு பரிசோதனையில் மாட்டிக்கொண்டார்.

# ஜூனியரின் புத்தகம்



அமெரிக்க முன்னாள் அதிபரும் கிளின்டனுக்கு காதல் லீலைகளில் முன்னோடியுமானவர் கென்னடி. அவரது மனைவி ஜாக்குலின் பின்னர் கோடீஸ்வரர் ஒருவரை மணந்தார். மறைந்தார்.

கென்னடி, ஜாக்குலின் தம்பதியின் புதல்வரான ஜூனியர் கென்னடியும் காதல் மன்னர்தான். அது ஒருபுறம் இருக்க தன் தாயாரைப் பற்றி புத்தகம் ஒன்று எழுதப்போகிறாராம் ஜூனியர் கென்னடி.

தன் தாயாரைப் பற்றி உண்மைக்கு புறம்பான புத்தகங்கள் பல வெளியாகி விட்டதாம். அதனால்தான் உண்மைகளை புட்டுவைத்து தாயாரின் களங்கத்தை தன் பேனாவால் துடைக்க புறப்பட்டிருக்கிறார் ஜூனியர்.

தன்மீது கூறப்படும் புகார்களுக்கே பதில் சொல்லக் காணவில்லை, தாயார் பற்றி என்ன எழுதி கிழிக்கப் போகிறார்? என்று கேட்கின்றனர் புத்தக வெளியீட்டாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# 2001ல் தயார்


➡ பறக்கத் தயாராகும் விமானமுமல்ல, அதிநவீன புல்லட் ரயிலுமல்ல. கார்! தரையில் ஓடும் கார் இது. விமானம் போலவே உருவாக்கியுள்ளனர்.

இந்த அதி வேகக் காரை அவுஸ்திரேலிய நாட்டின் பிரபல 'ரோபர்ட் றோய்டில்' நிறுவனம் தயாரித்துள்ளது. சமீபத்தில் சுவிற்ஸர்லாந்தில் நடைபெற்ற அடுத்த நூற்றாண்டு கார்கள் கண்காட்சியில் இதனையும் வைத்திருந்தனர். முதல் மரியாதை இதற்குத்தான்.

2001ம் ஆண்டில் பாவனைக்கு வருமாம். நம்நாட்டு கடாங்புடாங் சாலைகளுக்கு ஒத்துவருமா தெரியவில்லை.




தகவல் பெட்டி



## 42 விநாடிகளில் நாசம்

⬆ உதட்டில் பூ உள்ளத்தில் முள். அதுதான் அமெரிக்கா. உலக சமாதானம், நாடுகளுக்கிடையே நட்புறவு என்று வாய் ஓயாமல் கூறிக்கொண்டு, உலக நாடுகளை ஓசையின்றி மோப்பம் பிடித்து உளவறிகிறது அமெரிக்கா.

தனக்கு சவாலான நாடுகளை விண்ணிலிருந்து உளவறிய செயற்கை கோள்களை உலாவவிட்டுள்ளது.

அமெரிக்காவின் செயற்கைகோளை நன்றாக ஏமாற்றிவிட்டு இந்தியா அணுக்குண்டை வெடித்து பரிசோதனை நடத்தியது. தனது செயற்கைகோள் ஏமாற்றப்பட்டது அமெரிக்காவுக்கு இடி விழுந்தமாதிரியாகிவிட்டது.

உடனே மிகவேகமாக புதிய செயற்கைகோளை தயாரித்து விண்ணுக்கு ஏவியது அமெரிக்கா. அதன் பெயர்: டைட்டான்-04.

ரசியா, இந்தியா, சீனா போன்ற நாடுகளை மட்டுமன்றி, தனது நட்பு நாடுகளான பாகிஸ்தான் போன்றவற்றை உளவறியவே டைட்டான்-04 ஏவப்பட்டது.

ஆனால், அமெரிக்காவின் ஆசை சிறிது நேரத்திலேயே சுக்கு நூறாகியது. டைட்டான்-04 புறப்பட்ட 42 விநாடிகளில் டமாலாகியது. இதனை தயாரிக்க எவ்வளவு செலவானது தெரியுமா? கிட்டத்தட்ட 12 ஆயிரத்தி 800 கோடி ரூபாய்கள்! என்ன தலை சுற்றுகிறதா? அடுத்த நாட்டு அந்தரங்கத்தை எட்டிப்பார்க்க இதைவிட பல கோடி மடங்கு பணத்தை கொட்டித்தீர்த்து வருகிறது அமெரிக்கா!

தற்போதும் பல செயற்கைகோள்கள் அமெரிக்காவின் உளவு நோக்கங்களுக்காக விண்ணில் உலாவிவருகின்றன. பூமியில் இருந்து 500 மைல் தொலைவில் இருந்து பூமியில் உள்ள பந்தைக்கூட படமெடுக்கும் சக்தி இந்த செயற்கை கோள்களில் உள்ள வீடியோ கமராக்களுக்கு உண்டு.

## ஓணானை கட்டிக்கோ

⬇ 'ஒட்டகத்தை கட்டிக்கோ' என்றுதான் பாடல் இருக்கிறது. இந்த அழகிய மிக இளம் பெண் ஓணான்களை கட்டிக்கொண்டிருக்கிறார்.

இவை சாதாரண ஓணான்கள் அல்ல. உலகிலேயே மிகப்பெரிய ஓணான்கள் இவைதான்.

ஆபிரிக்காவில் வேஸ்டேஷன் நகரில் அமைந்திருப்பது தேசிய ஏஞ்சல் பூங்கா. அங்குதான் இந்த அபூர்வ ஓணான்கள் இருந்தன.

விறுவிறு என்று வளர்ந்துவிட்ட இந்த ஓணான்களை கவனிக்க என்றே தனியாக நியமிக்கப்பட்டுள்ளார் இந்த குறுகுறு இளம் பெண். ஓணான்களுக்கும் அவரைப் பிடித்ததால் தாவிப் பிடித்துக் கொண்டுள்ளன.



## அரிதிலும் அரிது

➘ புகைப்படம் போன்று தெரிகிறதல்லவா?

ஆனால் புகைப் படமல்ல! மிகத் தத்ரூபமாக வரையப் பட்ட ஓவியம்!

உலகில் எத்தனையோ பிரமாண்டமான அசத்தலான ஓவியங்கள் இருக்கின்றன. ஆனால் ஓவியம் என்பது பார்த்ததும் தெரிந்துவிடும். இது மட்டும்தான் புகைப்படம் எடுத்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது. அலுமாரியில் இருந்த 500 பவுண்ட் பெறுமதியுள்ள மருந்துப் பொருட்களை அப்படியே வரைந்துள்ளார் ஓவியர் டாமியன் ஹிர்ஸ்ட். இந்த அரிய ஓவியம் இலண்டன் கிறிஸ்டி ஏல விற்பனை நிலையத்தில் பயங்கரமான விலை போயுள்ளது? எவ்வளவு தெரியுமா? மூச்சை இழுத்துப் பிடித்துக்கொள்ளுங்கள்: 1 இலட்சத்து 88 ஆயிரத்தி 500 பவுண்டுகள். நம்மூர் மதிப்பில்: 2 கோடியே 7 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய்கள்!



## இப்படி ஆடலாம்

➘ 'ஆடாதேடா ஆடாதேடா மனிதா'! அதாகப்பட்டது, கர்வம் பிடித்து ஆடக்கூடாது. அகம்பாவம் கொண்டு ஆடக்கூடாது. ஆனால் இவர் ஆடுவது உலக சாதனை ஆட்டம். 338 மணி நேரம் தொடர்ந்து டிஸ்கோ நடனம் ஆடி உலக சாதனை படைத்திருக்கிறார். 38 வயதான இந்த தென்னாபிரிக்க சாதனையாளரின் பெயர்: ஆன்ட்ரு வான் ஜிஜில். சமீபத்தில் எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி நிதிக்காக 400 மணி நேரம் இடைவிடாமல் ஆடி தன் முன்னைய சாதனையை தானே உடைத்து விட்டார். உடைப்பிலும் மன்னராக்கும்.



## எதிர் நீச்சல்

➡ சண்டைகள், சமர்கள், யுத்தங்கள், பூசல்கள், கலப்படங்கள் என்று செயற்கை அழிவுகளும் மனித உயிர்களை தீனியாக்கி கொள்கின்றன.

அது போதாது என்று இயற்கையும் சில சமயங்களில் இரக்கமில்லாமல் நடந்துகொள்கிறது.

இயற்கையின் சமீபத்திய அராஜகம் வங்கதேச வெள்ளம். கிட்டத்தட்ட மூன்று கோடிப்பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். திட்டமிட்டு தாக்கியதுபோல பலவாரங்களாக வானம் கொட்டித்தீர்த்தது.

அந்த வெள்ளக்காட்டின் மத்தியிலும் தன் வளர்ப்பு பிராணிகளையும் காப்பாற்றிக்கொண்டு எதிர் நீச்சல் போடுகிறார் இந்த இளைஞர்.

இயற்கையாகவும் அழிவு வரும். செயற்கையாகவும் அழிவுகள் வரலாம். அவற்றைக்கண்டு மனம் துவளுவதோ, ஏனையோரை துவளவைப்பதோ கோழைத்தனம். அது வாழும் முறையல்ல! இந்த இளைஞர் சொல்லாமல் சொல்வது அதுதானோ! எதிர் நீச்சல் இன்றி வாழ்க்கை இல்லை!



## ருசியான பொம்மை

⬅ 'டைட்டானிக்' படத்தை அடுத்து உலகெங்கும் தற்போது பேசப்படும் திரைப்படம் 'கோட்சிலா'.

படத்தில் வருவது போன்ற பிரமாண்டமான கோட்சிலாவை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள ஹொட்டல் ஒன்றில் இப்படி உருவாக்கி வைத்துள்ளனர்.

இந்த பிரமாண்டமான பொம்மையை எப்படி உருவாக்கினார்கள் தெரியுமா? பாண் துண்டுகளால் கச்சிதமாக உருவாக்கியுள்ளனர். மொத்தம் 1400 பாண் துண்டுகள். எடை 500 கிலோ. ஆறு சமையல் கலைஞர்களுக்கு இதை உருவாக்க இரண்டு வாரங்கள் தேவைப்பட்டன. உலகில் முதன் முதலில் பாண்மூலம் உருவாக்கப்பட்ட பொம்மையும் இதுதான்.





படிப்பகம்

திரையுலக மறுபக்கம் 69

# நடிப்புச் சொல்லித் தந்த கலைவாணர்

# அன்புக்கு ஏங்கிய நடிகை

அந்தக்காலத்தில் பிரபல நகைச்சுவை நடிகர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன். அவரது மனைவியர்களில் ஒருவர் டி.ஏ. மதுரம். இருவரும் ஜோடியாக நடித்து கலக்கினார்கள்.

என்.எஸ். கிருஷ்ணன் இருந்தால்தான் படம் ஓடும் என்ற காலமும் இருந்தது. பகுத்தறிவு கொள்கையை பிரசாரம் செய்து சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்தவர்.

தன்னுடன் நடிக்கும் நடிகைகளை தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்துவதிலும் கில்லாடி.

'மணமகள்' படத்தின் படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது. பத்மினி, பாலையா, துரைராஜ் ஆகியோர் நடித்துக்கொண்டிருந்தனர். காட்சியை இரட்டை இயக்குநர்கள் கிருஷ்ணன்-பஞ்சு இயக்கிக் கொண்டிருந்தனர்.

கலைவாணர் ஒரு ஓரமாக அமர்ந்திருந்து வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டு படமாகும் காட்சியை பார்த்துக்கொண்டு இருந்தார்.

பத்மினியை வில்லன் பாலையா பலாத்காரம் செய்வது போன்ற காட்சி. அப்பொழுது பாலையாவின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு அவர் கூச்சல் போடவேண்டும். ஓரளவு சுமாராகவே தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றார் பத்மினி. பெரிதாக அல்லாமல் கூச்சல் போட்டார்.

பத்மினியை அருகில் அழைத்தார் கலைவாணர்.

பயபக்தியோடு கலைவாணருக்கு அருகில் வந்து நின்றார் பத்மினி. "உன்னை ஒருவர் பலாத்காரம் செய்தால் இப்படித்தான் துடிப்பாயா? நிஜமாகவே பலாத்காரம் செய்வதாக நினைத்துக்கொண்டு அலறி இருக்க வேண்டாமா? புடவைத்தலைப்பை வெடுக்கென்று பறித்துக்கொண்டு ஓடவேண்டாமா? உன்னுடைய வெறுப்பு உணர்ச்சியை அதிகம் பிரதிபலிக்காமல் கூச்சல் போடுகிறாயே? நிஜமான பலாத்காரமாக நினைத்து நடி!" என்று கூறினார்.

மீண்டும் அக்காட்சி படமானது. தத்ரூபமாக நடித்தார் பத்மினி. கலைவாணரும் ஓ.கே.சொல்லி பாராட்டினார்.

மேற்படி தகவலை கூறியிருப்பவர் பிரபல சினிமா நிருபர் நவீனன்.

●●

## நடிகர் போட்ட தூண்டில்

அந்த ஐந்தெழுத்து நடிகையின் தாயாருக்கு அருமையான குரல்வளம். அவரது குரல் வளத்தைவிட உடல் வளத்தில் சில வி.ஐ.பி.க்கள் கண்வைத்தனர்.

அவரும் மிக முக்கியமான சிலரை மட்டும் தேர்வு செய்து அனுமதித்தார். அவரது வருமானத்தை நம்பியிருந்த கணவரால் அதனைத் தடுக்க முடியவில்லை. பாடகியின் தந்தையார் மகளை ஆதரித்தார்.

இந்நிலையில் மகளும் நடிகையானார். தாயாரின் அன்புக்கு பாத்திரமான ஒருவர்தான் மகளுக்கு நடிகையாகும் வாய்ப்பை வழங்கினார்.

நடிகையோ சிறு வயதில் இருந்தே அன்புக்காக ஏங்கியவர். தாயாரோ வீட்டில் இருப்பதில்லை. தந்தையோ பிள்ளைகளுடன் அன்பாக நாலு வார்த்தை பேசியதில்லை.

நடிக்கத் தொடங்கிய மகள் அன்பைத் தேடினார். அவரது வாளிப்பான உடலில் கண் வைத்த மலையாள நடிகர் ஒருவர் அன்பைக் கொட்டுவதுபோல நடித்து தூண்டில் போட்டார்.

அன்பு எது, நடிப்பு எது என்பதை நடிகைகள்கூட கண்டுபிடிக்க முடியாமல்தான் கழுகுகளிடம் சிக்கிக்கொள்கின்றனர். ஐந்தெழுத்து நடிகை போதையின் பெயர் கொண்ட மலையாள நடிகரிடம் சிக்கினார்.

திகட்டும்வரை தேன்குடித்த வண்டு பின்னர் வேறு மலர் தேடி பறந்தது முதல் அதிர்ச்சி நடிகைக்கு. 'இதுதான் சினிமா உலகம், பார்த்து நடந்துக்க' என்று அனுபவம் உள்ள நடிகைகள் கூறினார்கள்.

## பெரிய மனிதர்

இதற்கிடையே வயதான இயக்குநர் ஒருவரும் நடிகையை தன் ஆசைக்கு தீனியாக்கிக் கொண்டார். வெளியே பண்பாளராக போற்றப்படும் அந்த இயக்குநர் தனி அறையில் நான்கு சுவர்கள் மத்தியில் வில்லன்போல நடிகையை துகிலுரிந்தார். துகிலுரிந்து பார்ப்பதில் மட்டும் திருப்திகாணும் ரகம் அந்த பெரிய மனிதர். ஆனாலும் வாக்குமீறாமல் வாய்ப்புக்களும் கொடுத்தார்.

இக்கட்டத்தில் முன்னணி ஹீரோ ஒருவருடன் ராகமும் தாளமும் போலானார் நடிகை. இருவரும் இலட்சியக் காதலர்கள்போன்று கட்டற்ற சுதந்திரத்தை அனுபவித்தனர்.

நடிகர் உயர்ந்த ஆங்கில நாவல்கள் பற்றியெல்லாம் நடிகையுடன் விவாதிப்பார். அறிவுபூர்வமாகப் பேசுவார். நடிகை வானில் பறந்தார். நடிகர் கேட்கும்போதெல்லாம் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தார்.

ஒருநாள் நடிகையின் தலையில் இடி இறங்கியது. அந்த நடிகருக்கு திருமணம் நடந்துவிட்ட செய்திதான் அது. நடிகைக்கு கூறாமலேயே காரியத்தை முடித்துவிட்டார் நடிகர்.

## விவாகரத்து

இடிந்துபோன நடிகைக்கு தயாரிப்பாளர் ஒருவர் ஆறுதல் சொன்னார். அப்படியே காதல் மலர்ந்தது. கல்யாணத்தில் முடிந்தது.

தயாரிப்பாளருக்கு நடிகையின் வருவாய்மீதுதான் கண். அதேசமயம் நடிகை சற்றுத் தாமதமாக வந்தால்கூட 'இன்று எவன்கூட படுத்தாய்?' என்று கேட்கிற வக்கிர சந்தேகம்.

ஐந்தெழுத்து நடிகை மறுபடி முடங்கினார். விவாகரத்தில் முடிந்தது. பின்னர் மனதை திடப்படுத்திக்கொண்டு முன்னர் காதலித்த ஹீரோ உட்பட தான் விரும்பும் ஹீரோக்களுடனும் நட்பாக பழகத் தொடங்கினார்.

சகலகலா வல்லமை படைத்த தாடிக்கார இயக்குநரும், நடிகருமானவருக்கு நடிகை என்றால் உயிர். அவரது மனமறிந்து நடிகையும் நடந்துகொண்டார். தனது படம் அனைத்திலும் நடிகைக்கு சந்தர்ப்பம் தருவதோடு, முதல் காட்சியை நடிகையை வைத்தே படமாக்குவாராம் அவர்.

முகப்பில் — வினிதா — டெண்டுல்கர்



ஷாருக்கான்-மனிஷா கொய்ராலா
படம்: உயிரே

## காதோடு சொல்லுகிறோம்

சங்கீத நடிகைக்கும் அவர் காதலரான ஒளிப்பதிவாளருக்கும் இடையே கல்யாணம் நடந்துவிட்டதாம். கேரள மாநிலத்தில் ஒரு கோவிலில் இரகசியத் திருமணம் நடந்ததாம்.

மூன்றெழுத்து 'மா' நடிகையால் கைவிடப்பட்ட குமார நடிகர் சரம் சரமாக தன் மனைவிபற்றி புகழ்கிறாராம். இப்போது பிள்ளைகள் நடிகருடன் இருக்கின்றனர். பிள்ளைகளை அனுப்பி நடிகரின் மனமாற்றம் உண்மையா? என்று நோட்டம் விடுகிறாராம் மனைவி.

சிம்ம நடிகையும் நடன சுந்தரமானவரும் பிரிக்கமுடியாத நட்புக்கொண்டுள்ளனர். அதனால் அதிகாலை படப்பிடிப்பு என்றால் தவிர்க்கிறாராம் நடிகை. அதிகாலையிலும் தூங்காவிட்டால் உடம்பு என்னத்துக்கு ஆகும்? என்று நினைக்கிறாராக்கும். படப்பிடிப்புகளுக்கு பிந்திவருவதாகவும், வீட்டுக்குச் செல்ல முந்தி நிற்பதாகவும் நடிகை மீது புகார்மேல் புகார்.

'கா' நடிகரின் அன்புப் பிடியில் 'சு' என்ற எழுத்தில் பெயர் ஆரம்பமாகும் நடிகை மாட்டியிருக்கிறார். 'திக்'கான நட்பாம். நடிகைதான் படப்பிடிப்பில் நடிகருக்கு உணவு பரிமாறுவது, மாத்திரை கொடுப்பது என்று பணிவிடைகள் புரிகிறாராம்.

குமராவில் புகுந்து விளையாடி பல தேசிய விருது பெற்றவர் அவர் பல நடிகைகளும் அவர் கட்டுப்பாட்டில் இருந்திருக்கின்றனர். சமீபத்தில் ஒரு நடிகையிடம் வசமாக மாட்டிக்கொண்டாராம். 'நீதான் அடுத்த பட நாயகி' என்று ஐந்து வருடங்களாக தன்னை ஏமாற்றி காரியம் பார்த்தார் என்று பொங்கியுள்ளார் நடிகை. தற்போது அந்த நடிகை சின்னத்திரையில் முகம்காட்டி வருகிறாராம். இனியும் விட்டால் சரிப்படாது என்பதால், 'வீடு தேவை' என்று இயக்குநரை மிரட்ட, இருபது இலட்சத்தில் சென்னை சாலிக்கிராமத்தில் வீடு வாங்கிக் கொடுத்துள்ளாராம் இயக்குநர்.

கௌசல்யமான நடிகையின் லேட்டஸ்ட் படமும் பிய்த்துக் கொண்டு வசூல் மழை பொழிகிறது. அதனால் தனக்கு 'சான்ஸ்' தந்த இயக்குநரைக்கூட புறக்கணித்துள்ளாராம் நடிகை.



மிங்க் சிங்
படம்: என் சுவாசக்காற்றே




## திரும்பிய வினிதா

இந்தியில் சக்கரவர்த்தியான உயர நடிகரை நம்பியிருந்தார் வினிதா. 'பெற்றோல் வளம் கொழிக்கும் நாட்டில் இருந்து வந்தவள் நான்' என்று மார்தட்டும் வினிதாவுக்கு அதிஷ்டம் கதவைத் தட்டியது.

இந்தியில் சக்கரவர்த்தியான நடிகர் தன் கவனிப்பில் மும்பாயில் வினிதாவை அனுசரித்தார்.

ஸ்ரீதேவியும் அந்த நடிகரின் கடைக்கண் பட்டதால்தான் சூப்பர் நடிகையானார். தனக்கும் சூப்பர் வாய்ப்பு இருப்பதாக கனவு கண்டார் நடிகை.

ஆனால் நடிகரோ கவனிப்போடு நிறுத்திக் கொண்டார். அதுவே பெரிய அதிஷ்டம் என்று நடிகரின் எடுபிடிகள் நடிகைக்கு சமாதானம் கூறினராம்.

வெறுத்துப்போன வினிதா மறுபடி சென்னைக்கு திரும்பி கிராம இயக்குநரின் தயவை நாடினார்.

'அஞ்சற்க நான் இருக்கிறேன்' என்று தட்டிக் கொடுத்து வருகிறாராம் கிராம இயக்குநர்.



www.padippakam.com
படிப்பகம்

## வரும் மிங்க்

தமிழில் வெளியான ரஜினியின் 'முத்து' படத்தின் டித்தவர் அரவிந்தசாமி என்பது தெரிந்த கதை. ித்த பஞ்சாப்மாநில கட்டழகி மிங்க். அந்த னாரு படத்திலும் அன்புடன் சிபாரிசு செய்துள்ளார் அரவிந்தசாமி.

அரவிந்த சாமியும், இஷாகோபிகரும் இணைந்து நடிக்கும் 'என் சுவாசக் காற்றே' படத்தில் தமிழ்ப்பட ரசிகர்களை தன் கவர்ச்சியால் மிரட்ட வருகிறார் மிங்க்.



## கல கல கலாட்டா

ரஜினி, கமல், விஜய், சரத்குமார், கார்த்திக் என்ற தரவரிசையில்தான் நடிகர்களின் மார்க்கெட் நிலவரம் இருக்கிறது.

கார்த்திக் நடித்துள்ள 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன் நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது.

விஜய் நடித்த 'நிலாவே வா' ஹிட்டாகியுள்ளது. சரத்குமாரின் 'நட்புக்காக' வசூல் அறுவடை.

சத்யராஜ் படங்கள் தொடர்ந்து தோல்வி கண்டன. அந்தக் குறையைப் போக்க வந்துள்ளது 'கல்யாண கலாட்டா'. கல கலவென்று ஓடிக்கொண்டிருக்கிறது. தற்போது தமிழ்நாட்டில் ஓடிக்கொண்டிருக்கும் படங்களில் சிரிப்புப் பட வரிசையில் முதலிடத்தில் இருக்கிறது கல்யாண கலாட்டா.

சன்.ரி.வி மட்டும் சத்யராஜ்மீது உள்ள கோபத்தில் கன்னாபின்னாவென்று விமர்சித்தாலும் படம் ஹிட்.

விஜயகாந்தின் தர்மா தோல்வி கண்டாலும் தயாரிப்பாளர்களுக்கு கையைச் சுடவில்லை. போட்ட முதல் திரும்பக் கிடைத்திருக்கிறது.

இவற்றின் மத்தியில் நட்சத்திர மதிப்பு இல்லாத 'சொல்லாமலே' வசூலிலும், வரவேற்பிலும் முதலிடம் பெற்றுள்ளது.

## உயிரோடு உயிராக

'உயிரோடு உயிராக' பட நாயகி ரிச்சாவும், நாயகன் அஜித்குமாரும் உடலோடு உடலாகிவிட்டதாக தீவிரமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இப்படம் தயாரிப்பில் நீண்டகாலம் இருக்கிறது. இடையே சிலகாலம் தடைப்பட்ட படப்பிடிப்பு இப்போது மீண்டும் தொடர்கிறது.

முன்பே ரிச்சாவின் ரிச்சான கட்டுக்கோப்பில் அஜித்குமார் மயங்கி நெருங்கியிருந்தாராம். அதனை அறிந்து ஹீரா துள்ளிக்குதித்து 'ஸ்பீட் பிரேக்' போட்டு வைத்திருந்தார்.

இப்போது ஹீரா எட்டத்திற்கு போய் விட்டதால், இந்த மாதிரியான மங்கல காரியங்களுக்காகவே வாங்கிப் போட்டுள்ள தனிபங்களாவில் அஜித் ரிச்சாவை பூஜிக்கிறாராம்.

இதனால் படத்திலும் இருவர் சம்பந்தப்பட்ட காட்சிகளும் சூட்டோடு சூடாக படமாக்கப் பட்டுள்ளதாம்.

## ரம்பா விருந்து

ரம்பா இப்போது தமிழில் பிஸி இல்லை. சிம்ரான், ப்ரீதா, இஷா கோபிகர், தேவயாணி என்று பலரும் சேர்ந்து ரம்பாவை ஓரம் கட்டிவிட்டனர்.

ஆனாலும் ரம்பாவுக்கு கவலையில்லை. தெலுங்கில் வாழை இலைபோடாத குறையாக கவர்ச்சி விருந்து படைத்து உள்ளங்களை கொள்ளை அடிக்கிறார்.

சிம்ரானைவிட ரம்பா தான் கவர்ச்சிக்கு ஏற்ற கட்டோடு இருக்கிறார் என்பது தெலுங்குப் பட ஜொள்ளர்களின் ஏகோபித்த முடிவாம்.



ரம்பா

## கார்த்திக்கின் கவசம்

கார்த்திக் புதிதாக நடிக்க பணம் வாங்கியுள்ள படங்களில் ஒன்று 'கவசம்'.

கார்த்திக்கு இரண்டு ஜோடிகள். அவர்கள் யார் புது முகங்களா? அறிமுகமான அசத்தல் முகங்களா? என்பதை இன்னமும் தீர்மானிக்கவில்லை.

செந்தில், சின்னி ஜெயந்த் ஆகியோரும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இயக்கமும், திரைக்கதை வசனமும் கேசவன். இவர் கே.எஸ்.ரவிக்குமார், விக்ரமன் போன்றோரிடம் பாடம் கற்ற சிஷ்யன். இசை: தேவா.

## கணவர்

ங்கு வரப்போகும் கணவர் எப்படி ாடும்?" என்ற கேள்விக்கு தக்காளிச் தா விஜயகுமார் உதிர்த்த முத்துக்கள்: விஜயகாந்த் போலவும் கம்பீரத்தில் போலவும், அழகில் நம்ம சூர்யா ன் கணவர் ஆண்மையும் அழகும் க இருக்க வேண்டும்!"

## தேவயாணிக்கு கல்தா?

ரஜினியின் அடுத்த படத்தின் நாயகிகளில் ஒருவர் தேவயாணி என்று செய்தி வந்ததல்லவா. இப்போது தேவயாணிக்கும் கல்தா கொடுத்துவிட்டனராம்.

ரஜினி படத்தில் நடிக்கப்போகும் செய்தியை முந்திரிக்கொட்டைத்தனமாக பத்திரிகைகளுக்கு கூறியதுக்கு தண்டனையாம்.

முன்னர் ஜெயராமுக்கும் இதுபோலத்தான் நடந்தது. தன் வாயினால் அப்போது வாய்ப்பை இழந்தார் ஜெயராம். இன்று தேவயாணி.

## விஜயகாந்துடன் யானை

'கள்ளழகர்' படத்தில் படு தீவிரமாக கவனம் குவித்திருக்கிறார் விஜயகாந்த். தர்மா வாங்கிய அடியை கள்ளழகர் வந்து நிமிர்த்துவார் என்று நம்புகிறார்.

பிரமாண்டமாக தயாராகி வரும் கள்ளழகர் படத்தில் கம்பீரமான யானை ஒன்று நடிக்கிறது.

அது சாதாரண யானையல்ல, ஆசிய விளையாட்டுப் போட்டியில் பார்வையாளர்களைக் கவர்ந்த 'அப்பு' என்ற யானைதான் நடிக்கிறது. அப்போது குட்டியாக இருந்த அப்பு தற்போது குன்றென உயர்ந்து நிற்கிறதாம்.

ஒரு நாள் வாடகை 5 ஆயிரம் ரூபா.



லிவிங்ஸ்டன்-கௌசல்யா
படம் சொல்லாமலே

## பெருமூச்சுவிடும் ஹீரோ

ரஜினிகாந்துக்கு பணமா பஞ்சம்? திகட்ட திகட்ட பணம் இருக்க நிம்மதி தேடி உலகம் சுற்றுகிறார். நாம் என்ன பண்ணுவது. வருடத்தில் குறைந்தது இரண்டு படமாவது நடித்தால்தான் வருமானம் தங்கும் என்று பெருமூச்சுவிட்டாராம் பிரபல ஹீரோ ஒருவர்.

"சத்யராஜ் சம்பளம் குறைக்க ஒப்புக்கொண்டுள்ளார். அவர் சினிமாவுக்கு வருவதற்கு முன்னரே பணக்காரர்தான். நாங்கள் அப்படியா? இப்போதே சம்பாதித்தால்தான் உண்டு!" என்றும் கூறியிருக்கிறார் அந்த ஹீரோ.

திரைப்பட கதை விவாதம் செய்வதற்காக சென்னை நுங்கம்பாக்கத்தில் கெஸ்ட் ஹவுஸ் கட்டியிருக்கிறார் ரஜினிகாந்த். மூன்று மாடியில் 30 அறைகள் உள்ளன. அருணாசலம் கெஸ்ட் ஹவுஸ் என்று பெயராம். திறப்புவிழா நடக்க உள்ளது.

## பொத்தான்கள்

ிழில் 'உயிரே') படத்தில் ் மூலம் மணிரத்னத் ்திற்கு நெருக்கமாகி க்கான்.

ம், சுகாசினி ஆகியோ ெட் மற்றும் பல புது க்க விழாவுக்கு வந் கான்.

ங்கிய சிலர், "நீங்கள் ான்களை அநேகமாக ஏன்?" என்று கேட்

-பதில் சொன்னாராம் ்களின் பார்வை என் ம் என்ற எண்ணத்தில் ட்ட பெண்கள் நாணிப்

## மினி சினி

☆ 'என்னுயிர் நீதானே' படத்தில் இணைந்து நடிக்கும் பிரபு-தேவயாணி ஜோடி, 'கும்மிப்பாட்டு' என்ற படத்தின் மூலம் மறுபடி இணையவுள்ளது. இப்படத்தை கஸ்தூரிராஜா சொந்தமாகத் தயாரித்து இயக்குகிறார்.

☆ அசோக் அமிர்தராஜ் தயாரிக்க அகத்தியன் இயக்கத்தில் பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கும் படத்திற்கு முதலில் 'பூங்கொத்து' என்று பெயர் வைத்தார்கள். பின்னர் 'அதிசயம்' என்றார்கள். தற்போது 'காதல் கவிதை' என்று சொல்கிறார்கள்.

☆ மணிரத்னத்தின் உதவியாளர் பெருமாள் இயக்குநராக அறிமுகமாகும் 'முதன்முதலாக' படத்தில் முதலில் அரவிந்தசாமி-கரிஷ்மா கபூர் ஜோடியாக நடிப்பதாக அறிவிக்கப்பட்டது. இப்போது கரிஷ்மா கபூருக்குப் பதிலாக வேறொருவரை நடிக்க வைக்கவுள்ளனர்.

☆ 'மாப்பிள்ளைக் கவுண்டர்' படத்திற்குபின் மணிவாசகம் இயக்கும் புதிய படம் வீரமுத்து. சரத்குமார் ஹீரோவாக நடிக்கிறார். இதற்கு முன் மணிவாசகம் இயக்கத்தில் சரத்குமார் 'கட்டபொம்மன்', 'நாடோடி மன்னன்' போன்ற படங்களில் நடித்துள்ளார்.

☆ 'சிம்மராசி' படத்தில் மட்டும் நடித்து வரும் கனகாவுக்கு தமிழில் இன்னுமொரு புதிய படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இயக்குநர் கே.எஸ். அதியமான் நடிகராக அறிமுகமாகும் 'தலைமுறை' படத்தில்தான் அந்தப் புதிய வாய்ப்பு.

☆ பார்த்திபன்-ப்ரீதா விஜயகுமார் இணைந்து நடிக்கும் 'காக்கைச் சிறகினிலே' படத்தில் தனுஜா என்னும் புதுமுகம் அறிமுகமாகிறார். இவர் பாலுமகேந்திராவின் 'ராமன் அப்துல்லா' நாயகி ஈஸ்வரி ராவின் தங்கை ஆவார்.

☆ சரவணன்-சுவலட்சுமி நடித்த 'சந்தோஷம்' தெலுங்கில் தயாராகவுள்ளது. தமிழில் சரவணன் நடித்த வேடத்தில் ராஜேந்திர பிரசாத் நடிக்கிறார். தமிழில் கதாநாயகியாக நடித்த சுவலட்சுமியே தெலுங்கிலும் நடிக்கிறார்.

☆ தமிழில் வில்லனாக அறிமுகமாகி கதாநாயகனாகி மறுபடி வில்லனாக நடித்து வரும் ஆனந்தராஜ் தற்போது 'ஆக்ஷன் டைகர்', 'ஸ்கெட்ஸ்' ஆகிய இரண்டு கன்னடப் படங்களில் கதாநாயகனாக நடித்து வருகிறார்.

## ஏன் தோன்றவில்லை?

'காதல் கோட்டை' போன்ற வெற்றிப் படங்களை பணம் இறைத்து தயாரித்தவர் சிவசக்தி பாண்டியன். தொழிலில் படுசுத்தம்.

இன்ன தேதிக்கு படம் வெளியாகும் என்பதை படப்பூஜை அன்றே அறிவித்துவிடுவார். அதன்படி பிசகில்லாமல் வெளியிட்டும் விடுவார்.

யானைக்கும் அடி சறுக்கும் சிவசக்தி பாண்டியனுக்கும் சறுக்கிவிட்டது.

'கண்ணெதிரே தோன்றினாள்' ஆகஸ்ட் 15ல் ரசிகர்கள் முன் தோன்றுவாள் என்று அறிவித்தார். ஆனால் அத்திகதியில் வெளியிட முடியவில்லை. அதற்கு காரணம் நாயகி சிம்ரான்.

படப்பிடிப்பு ஆரம்பமான நாளில் இருந்து தாமதமாக வந்தாராம். மாலை 7 மணியானதும் தலைவலி என்று கிளம்பிவிடுவாராம். அதுதான் தாமதமானதாம்.





# மறையாத மனித மாணிக்கம்

உடையும் வெள்ளை, உள்ளமும் வெள்ளை, குள்ள உருவம், உள்ளம் உயரம், ஆதரவற்றோரின் இதய தெய்வம்- அன்னை தெரேசா.

செப்டம்பர் 05.1997ல் அந்த அற்புத விளக்கு அணைந்தது. உலக மக்களின் விழிகள் நனைந்தன.

தள்ளாத வயதிலும் சிந்தனை எல்லாம் சேவைக்கு என்று வாழ்ந்தவர்மேல் இரக்கப்பட்டு, அவர் சிந்தனையை இயற்கையே நிறுத்திவிட்டது!

பூமித்தாய் தன் பெருமைமிகு புதல்வியை தன் வயிற்றுக்குள் வாங்கி பத்திரப்படுத்திக் கொண்டாள்.

பூமியின் வயிற்றில் கட்டாய ஓய்வில் நமது கருணைத்தாய்! தூங்கம்மா! தூங்கு!

# தேன் கிண்ணம்

## உதயத்தை நோக்கி...!

சத்தங்கள் ஓயவில்லை
இரத்தமோ காயவில்லை
இன்றைய வாழ்வினிலே
அர்த்தமே புரியவில்லை...!
••
புரியாத புதிரானோம்
முடிவில்லா நதியானோம்
விதியென்ற புயலினிலே
சதிராடும் படகானோம்...!
••
சேயது துடிக்கும்நிலை
தாயின்றித் தவிக்கும்நிலை
சொந்தமென்று
சொல்லிடவே
உயிர்மட்டும் உள்ளதிலை...!
••
வெண்புறாவந்ததிங்கே
மண்புறா ஆனதிங்கே
கண்களில் வீழுமுன்பே
காணாமல் போனதெங்கே...?
••
கடலலைகள்
பேசிக்கொள்ளும்:
காற்றும்மெல்ல
பேசிக்கொள்ளும்:
மலர்களகூடப்
பேசிக்கொள்ளும்:
மனங்கள்
பேசவழியில்லையே...!
••
அழகை
அள்ளிக்கொடுத்தவனே!
அறிவை அள்ளி
விதைத்தவனே
ஆசையைத் தூதுவிட்டவனே!
அன்பை எங்கு
தொலைத்துவிட்டாய்...?
••
மனங்களின் ஏக்கங்கள்
ஒருசிலரின் தூக்கங்கள்
இவையாவுமில்லை யென்றால்,
இங்குதான் சொர்க்கமுண்டு...!
••
இரவுகளை விடியவைப்போம்!
உறவுகளை மலரவைப்போம்!
கனவுகளை நனவாக்க
கைகளைக் கோர்த்திடுவோம்!!!

இணுவையூர்- இராகுலன்.

## குடியிருப்பாளர் தேவை!

குடியிருக்கும்
ஓரடி நிலங்கூட
குறையாடப்படும்
என் தேசத்தில்
ஆறுதலாகப் படுத்துறங்க
ஆறடி நிலம்
காத்துக் கிடக்கிறது!
*–*
செம்மணிகளா...?
சூரிய கந்தைகளா...?
தெரிவு செய்து கொள்ள
அரிய பல இடங்கள்-
ஆள் அரவம்
அடி தடிகள்
ஏதுவும் அற்ற
அமைதியான சூழல்!
*–*
சூரிய கந்தையானால்
சுதந்திரம் மறுக்கப்படும்!
பிரசாரத்திற்கு தோதாக
உன் இருப்பிடம்
முற்றுகை இடப்படும்!
*–*
கதவுகள் திறக்கப்படும்–
அவசர அவசரமாக!
மிக அவதானமாக–உன்
அங்க அடையாளங்கள்
அக்கு வேறு ஆணி வேறாக
ஆராயப்படும்!
*–*
செம்மணியில்
குடி கொண்டால்
கிடைக்கும்
நிம்மதியான தூக்கம்!
*–*
பேரின வாதத்தின் பேரில்
உன் இருப்பிடம்
முற்றுகை இடப்பட
மாட்டாது;
கதவுகள்
திறக்கப்பட மாட்டாது;
அங்க அடையாளங்கள்
ஆராயப்பட மாட்டாது!
*–*
மாறாக–உன்
நிறைவான தூக்கத்துக்கு
முழுநேர பாதுகாப்பு!
முழுமையான சுதந்திரம்
வழங்கப்படும்!
*–*
செம்மணியா?
சூரிய கந்தையா?
விடிவதற்குள்
முடிவெடு...!
தாமதித்தால்
தவிக்க நேரும்!

எஸ். கமலநாதன்-
களுதாவளை-1.

## தேவையா இது?

கப்பலைக் காணோமென்ற
செய்தியைக் கேட்டதும்...
கடைகள் வெறிச்சோடி,
களசாமான பதுங்க:
காற்றடிக்க ரெண்டு ரூபாய்-
கப்பல் வராதாம்!
கண்மூட முன்னே
சுண்ணமிடிப்பு!

கடல் தாண்டிச் சாமான்
வந்திறங்கும் வரைக்கும்,
கட்டியவர் பாடு
திண்டாட்டமே?
கப்பல் ஓடுமாம்...?
களநாள் ஆகுமாம்...?
ஆகாய மார்க்கத்தால்
அசலான உழைப்பு!



லயன் எயர், மொனரா
என்றெல்லாம் சேவைகள்-
கிளியறன்ஸ் வராமல்
அலையுதுகள் பாவம்!
கிளியரன்சே இல்லாமல்
போகுதுகள் சிலாக்கள்!

நல்லூரை வேண்டி
நாளெல்லாம் உபவாசம்.
வடம்பிடித்த வரிசையில்
வந்த வசனமிது-
"உபவாசம் முடியட்டும்
உரும்பிராய் ஆடடிப்போம்!"
உடலால் உபவாசம்
மனதால் உயிர்நாசம்!

அன்றொரு நாள்
வான் வெளியில்
வந்ததொரு வானூர்தி!
குண்டுமழை தூவி நிதம்
உயிர் பலிகள் தாராளம்!
சனியன் சண்டாளம்
அழிவானென்றெல்லாம்
திட்டுக்கள் ஏராளம்!

இன்றொரு நாள் தேரேறி
முருகனுலா வருகையிலே,
பல்வர்ண வானூர்தி
பவனிவரும் முருகன் மேல்
பூக்களைத் தூவியல்லோ
புகழாரம் தேடியது...?
குழந்தைகள் வீரிட்டு
அழுதவொலி கேட்டுதோ?

பூக்களை வீச வரும்
ஹெலி என்று தெரிந்தும்,
சுவரோடு நின்றவர்கள்
எத்தனை ஆயிரம் பேர்?

'ஐ.நா. உதவியுடன்
அகற்றுவோம் மிதிவெடிகள்!'
செய்தி நாம் பார்த்து
எத்தனை நாளாச்சு?

மாடோடு, மனிதர்கள்
மல்லாந்து போய்விழ,
வெடியோசை கேட்டதிசை
மாட்டு வியாபாரி மட்டுமே!

சரா மாஸ்ரர்- யாழ்ப்பாணம்.

# இந்த வாரம் உங்கள் பலன்

(13.09.1998 தொடக்கம் 19.09.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

சிம்மம் - சூரியன், புதன், சுக்கிரன்.
மீனம் - குரு.
மேடம் - சனி.

சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வெற்றி, மனச்சந்தோஷம். | காலை | 8 மணி |
| **திங்கள்**- தொழில் மூலம் நன்மை, வெற்றி. | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- கவலை, செலவுகள் அதிகம். | காலை | 6 மணி |
| **புதன்**- தெய்வானுகூலம், புதியமுயற்சி. | பி.ப. | 1 மணி |
| **வியாழன்**- வெளிப்பயணம், காரியசித்தி. | மாலை | 5 மணி |
| **வெள்ளி**- புதிய தொழில் விருத்தி, விரயம். | மாலை | 6 மணி |
| **சனி**- தொழில் கஷ்டம், அந்நியர் பகை. | காலை | 6 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மனமகிழ்ச்சி, இனசன நன்மை. | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- தொழில் முன்னேற்றம், காரியானுகூலம். | காலை | 7 மணி |
| **செவ்வாய்**-பெரிய மனிதர்கள் சந்திப்பு, மனக்குழப்பம். | பி.ப. | 1 மணி |
| **புதன்**- செலவு மிகுதி, பிரயாணம். | பி.ப. | 3 மணி |
| **வியாழன்**- பயனுள்ள செய்தி, பொருள் விரயம். | மு.ப. | 9 மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, மகிழ்ச்சி. | காலை | 6 மணி |
| **சனி**- உறவினர் வரவு, பலவித பேறு. | மாலை | 4 மணி |

**அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர்கள் உதவி, மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- அதிக செலவுகள், மனக்கவலை. | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- தெய்வ வழிபாடு, முன்னேற்றம். | காலை | 7 மணி |
| **புதன்**- பணவரவு, குடும்ப ஒற்றுமை. | மாலை | 4 மணி |
| **வியாழன்**- தொழில் மூலம் பாதிப்பு, வெறுப்பு. | மாலை | 6 மணி |
| **வெள்ளி**- பிரயாணம், மனச் சஞ்சலம், தொழில் மந்தம். | காலை | 6 மணி |
| **சனி**- குடும்பத்தினர் வருகை, நன்மை. | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- காரியானுகூலம், புதிய முயற்சி. | மு.ப. | 9 மணி |
| **திங்கள்**- வெளியூர் பிரயாணம், சன்மானம். | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, பலவிதமான நன்மை. | காலை | 6 மணி |
| **புதன்**- செலவு அதிகம், பெரியோர்களின் உதவி. | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- கௌரவமான தொழில், வாக்குபலிதம். | மாலை | 5 மணி |
| **வெள்ளி**- ராஜ சன்மானம், தெய்வானுகூலம். | மாலை | 6 மணி |
| **சனி**- பிரச்சனைகள் அதிகம், மனக்கவலை. | காலை | 8 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3**

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வீண் செலவுகள், கடன் படுதல். | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- புதிய முயற்சியில் ஈடுபடுதல், வாக்குபலிதம் | மாலை | 7 மணி |
| **செவ்வாய்**- முன்னேற்றம், எதிர்பாராத வெற்றி. | மு.ப. | 9 மணி |
| **புதன்**- நல்லோர் சகவாசம், பிரயாணம். | பி.ப. | 3 மணி |
| **வியாழன்**- தொழில் விருத்தி, நண்பர் உதவி. | மாலை | 5 மணி |
| **வெள்ளி**- இனசன நன்மை, காரியானுகூலம். | காலை | 6 மணி |
| **சனி**- முயற்சி பலிதம், மனக்கலக்கம். | காலை | 8 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- ஆடம்பர வாழ்க்கை, குடும்ப ஒற்றுமை. | காலை | 8 மணி |
| **திங்கள்**- வெளியிட பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, மதிப்பு, கௌரவம். | மு.ப. | 10 மணி |
| **புதன்**- வரவுக்குமேல் செலவு, குடும்ப நன்மை. | பகல் | 12 மணி |
| **வியாழன்**- சகோதரரால் நன்மை, சுபகாரியம். | பி.ப. | 3 மணி |
| **வெள்ளி**- காரிய சித்தி, வாக்குபலிதம், நன்மை. | காலை | 7 மணி |
| **சனி**- வீண் கவலை, தொழில் பாதிப்பு. | மு.ப. | 10 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4**

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வீண் அலைச்சல், பொருள் விரயம். | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, பொருள் வரவு. | மு.ப. | 9 மணி |
| **செவ்வாய்**- கௌரவம், மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **புதன்**- தொழில் விருத்தி, பெரியோர் சகவாசம். | பகல் | 11 மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, பலவிதமான பேறு. | மு.ப. | 9 மணி |
| **வெள்ளி**- உறவினர் மூலம் உதவி, மனமகிழ்ச்சி. | மாலை | 4 மணி |
| **சனி**- வீண்பழி கேட்டல், துயர் மிகுதி. | காலை | 8 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6**

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- உயர்வு, மனக்குழப்பங்கள் தீரும். | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- தொழில் முன்னேற்றம், பிரயாணம். | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- குடும்ப கவலை, மனச்சஞ்சலம். | மு.ப. | 9 மணி |
| **புதன்**- பெரியோர் உதவி, அந்நியர் நட்பு. | பி.ப. | 1 மணி |
| **வியாழன்**- பிரச்சனை, கவலை, காரியக் கேடு. | காலை | 8 மணி |
| **வெள்ளி**- தெய்வ நம்பிக்கை, மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **சனி**- வீண் பழி கேட்டல், அதிக செலவு. | மு.ப. | 9 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-1**

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- தொழில் முன்னேற்றம், வெற்றி. | காலை | 6 மணி |
| **செவ்வாய்**- உயர் பதவி, அந்தஸ்து, மன நிம்மதி. | பகல் | 12 மணி |
| **புதன்**- இனசன ஒற்றுமை, கௌரவம், பலவிதபேறு. | காலை | 7 மணி |
| **வியாழன்**- மனமகிழ்ச்சி, காரிய பலிதம். | மாலை | 7 மணி |
| **வெள்ளி**- தெய்வானுகூலம், நம்பிக்கை, துயரம். | பகல் | 1 மணி |
| **சனி**- பொருள் செலவு, குடும்பத்தில் பிரச்சனை. | மாலை | 5 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1**

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தெய்வானுகூலம், பொருள் வரவு. | மாலை | 7 மணி |
| **திங்கள்**- தொழில் முன்னேற்றம், புதிய முயற்சி. | காலை | 6 மணி |
| **செவ்வாய்**- காரியதடங்கல், மன நிம்மதியின்மை. | பகல் | 12 மணி |
| **புதன்**- பிரயாணம், பொருள் செலவு, நன்மை. | மாலை | 5 மணி |
| **வியாழன்**- வெளியிடப் பிரயாணம், நற் செய்திகள். | மு.ப. | 9 மணி |
| **வெள்ளி**- உறவினர்மூலம் நன்மை, காரிய பலிதம். | பி.ப. | 1 மணி |
| **சனி**- வீண்குறை கேட்டல், அலைச்சல் மிகுதி. | மு.ப. | 9 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7**

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- துயரம் நீங்கும், தேகசுகம். | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- அலைச்சல், பொருள் வரவு. | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**-பெரியோர் உதவி, தொழில் முன்னேற்றம். | மாலை | 5 மணி |
| **புதன்**- கௌரவம், புதிய முயற்சி. | மு.ப. | 9 மணி |
| **வியாழன்**- பொருள் விரயம், பிரயாணம். | காலை | 6 மணி |
| **வெள்ளி**- பொருள் சேர்க்கை, நண்பர் மூலம் நன்மை. | மாலை | 5 மணி |
| **சனி**- செலவு மிகுதி, குடும்ப ஒற்றுமை. | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6**

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி வெற்றி, சந்தோஷம். | பகல் | 12 மணி |
| **திங்கள்**- மனக்குறை நீங்கும், பிரயாணம். | காலை | 6 மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பிரயாணம், தெய்வவழிபாடு. | பி.ப. | 1 மணி |
| **புதன்**- குடும்பத்தில் சந்தோஷம், கௌரவம். | மாலை | 4 மணி |
| **வியாழன்**- தொழில் உயர்வு, வியாபார விருத்தி. | மு.ப. | 10 மணி |
| **வெள்ளி**- அதிகலாபம், மன மகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| **சனி**- பணச் செலவு, காரியக்கேடு. | பி.ப. | 2 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4**



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

## பால் நகை பொழியலாம்!

இளம் பெண்களின் புன்னகைக்காக ஏங்கும் இளைஞர்கள் ஏராளம்.

'செங்கனி வாய் திறந்து சிரித்திடுவாய்...' என்று ஒரு திரைப்படப் பாடல் வருகிறது. அதிலிருந்தே பெண்ணின் உதடுகளுக்கும் அவளுடைய சிரிப்புக்குமுள்ள சிறப்பு வெளிப்படையாகத் தெரிகிறது.



பெண்களோ ஆண்களோ தங்களுடைய பற்களை எப்போதும் சீராகச் சிறப்பாக வைத்திருக்க வேண்டியது மிக மிக அவசியமானது. அழகுக்காக மட்டுமல்ல, பொதுச் சுகாதாரத்துக்காகவும் பற்கள் சுத்தமாக இருக்க வேண்டும்.

பற்கள் சுத்தமாக இல்லாதிருப்பின் பல நோய்கள் ஏற்பட்டுவிடும். தினசரி காலையிலும் இரவிலும் இரு தடவைகள் பற்களை பற்பசை, பற்தூரிகை கொண்டு துலக்க வேண்டும்.

பற்களின் ஈறுகளுக்கிடையில் நாம் உண்ணும் உணவுத் துகள்கள் ஒட்டிக் கொள்ளும். இவற்றை அவ்வப்போது அகற்றா விட்டால் பக்டீரியாக்கள் பெருகி பற்களின் ஆணி வேர்களையே பதம்பார்த்துவிடும். சுற்றியிருப்பவர்களுடன் உரையாட முடியாமல் உங்கள் வாயிலிருந்து வெளிவரும் துர்நாற்றம் தடுத்துவிடும்.

சிறு குழந்தையாக இருக்கும் போதே பற்களைப் பேணும் முறையினை அவர்களுக்குத் தாய்மார் பழக்கிவிடவேண்டும்.

இரண்டு வயதானவுடன் பாற்பற்களை- தாய்மார் தமது விரலால் தேய்த்து சுத்தப்படுத்தவேண்டும். 3 வயதான பின்னர்தான் பற்தூரிகை கொண்டு பற்சுத்தப்படுத்தும் பழக்கத்தை அவர்களுக்குப் புகட்ட வேண்டும்.

அதற்கு முன்னர் பற்தூரிகை பயன்படுத்துவதால் இள முரசுகளில் கிழிசல்கள் ஏற்பட்டு வேதனை தரலாம்.

முத்துப் போன்ற பல்வரிசை அமைய வேண்டும் என்றே எல்லோரும் விரும்புவார்கள். ஆனால் சிலருடைய பற்கள் வெளிர் மஞ்சள், காவி, மற்றும் இளநீலம் போன்ற வர்ணங்களிலும் இயல்பாக அமைந்து விடுகின்றன. இப்பொழுது பல்லின் வர்ணத்தை செயற்கைப் பூச்சினால் மாற்றித்தரவும் நவீன பற் சிகிச்சைகள் பரவி வருகின்றன.

## பொன் நகை மின்னிட

ஆபரணங்கள் பற்றிய சில விஷயங்கள்:

- நின்று கொண்டு ஆபரணங்களை அணிய வேண்டாம். கல் பதித்த ஆபரணங்களை நின்று கொண்டு அணிந்தால் அது தவறுதலாகக் கீழே விழுந்தால் நொறுங்கி விடும். அதனால் கட்டிலில் உட்கார்ந்தபடி அணியுங்கள்.
- வோஷ் பேசினுக்கு மேலே கண்ணாடி இருக்கிறதே என்று? வோஷ் பேசினுக்கு அருகில் நின்று கொண்டு ஆபரணங்களை அணிய வேண்டாம். முக்குத்தி, தோடு போன்றவற்றின் சுறைப்பகுதிகள் கைதவறி வோஷ் பேசினில் விழுந்தால் அப்படியே உள்ளே போய்விடும்.
- கிறீம்கள், வியர்வை, சென்ட் போன்றவை ஆபரணங்களில் படாமல் இருப்பது நல்லது. அதனால் மேக்-அப் முடித்த பின்பு ஆபரணங்களை அணியுங்கள். மேக்-அப்பைக் கலைக்கும் முன்பும் ஆபரணங்களைக் கழற்றி விடுங்கள்.
- வழக்கமாகப் பயன்படுத்தும் ஆபரணங்களை மாதம் ஒரு முறையாவது கழுவிச் சுத்தம் செய்யுங்கள்.



- தங்க ஆபரணங்களில் 'மேர்க்குரி' என்ற இரசாயனப் பொருள் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அது விழுந்தால் தங்கத்தின் நிறம் மாறும்.
- தூங்கும் போதும் குளிக்கும் போதும் ஆபரணங்களைக் கழற்றி வைப்பதாக இருந் தால் பாதுகாப்பான இடத்தில் கழற்றி வையுங்கள். கவனமாக எடுத்து மீண்டும் அணிந்து கொள்ளுங்கள்.

## அழகுக் குறிப்புகள்

* சிலருக்கு நகை அணிவதால் கழுத்து கருமையாகக் காணப்படும். இதற்கு, முட்டைக் கோவா சாற்றை கழுத்தின் கருமையான இடத்தில் தடவிக் கொண்டால், கழுத்தைச் சுற்றியுள்ள கருமை நீங்கிவிடும்.

* சிலரது உதடுகள் அடிக்கடி உலர்ந்து போய்விடும். பாதாம் பருப்பைப் பசையாக அரைத்து பாலேட்டுடன் கலந்து உதடுகளில் தடவி, பின் வெந்நீரால் தினமும் கழுவி வந்தால், உதடுகள் அடிக்கடி உலராமல் நன்றாக இருக்கும்.

* சில பெண்களின் உதடுகள் கறுப்பாக இருக்கும். தோடம்பழம் அல்லது மாதுளம் பழச் சாற்றினை எடுத்து உதட்டில் தினமும் தடவி வர வேண்டும். கறுப்பு நிறம் மாறி விடும். உதடுகளில் தினமும் இரவு வேளைகளில் வெண்ணெய் பூசி வந்தாலும் கறுப்பு நிறம் மாறிவிடும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EJ

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 19-09-1998

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

52

புவனா



தன்னைப் புகைப்படம் எடுப்பவர்களுடன் டயானா ஒத்துழைப்பார். பத்திரிகையாளர்களை மதித்து வரவேற்புக் கொடுப்பார்.

தனது படங்கள் பத்திரிகைகளில் முதலில் இடம்பெற்றபோது சங்கடமும், வெட்கமும் கொண்டாராயினும், பின்னர் உள்ளூர சந்தோசப்பட்டார்.

அரச குடும்பத்தினர் தமது விருப்பு வெறுப் பின்படிதான் பத்திரிகையாளர்களுடன் நடந்து கொள்வர்.

ஒரு முறை புத்தாண்டு விடுமுறையைக் கழிப்பதற்காக சண்டிங்ஹாம் சென்றது அரச குடும்பம். டயானாவும் கூடப்போயிருந்தார்.

அவர்கள் வந்திருக்கும் தகவல் கிடைத்த பத்திரிகையாளர்களும், புகைப்படப்பிடிப்பாளர்களும் விரைந்தனர்.

அவர்களை முதலில் கண்டு வரவேற்றது டயானாதான். புன்னகையோடு அவர்கள் மத்தியில் நின்று உரையாடத் தொடங்கிவிட்டார்.

அந்த நேரம் வெடியோசை ஒன்று பலமாகக் கேட்டது. டயானா உட்பட அவரைச் சூழ நின்றிருந்த பத்திரிகையாளர்களும் பயந்து போனார்கள்.

எல்லோரும் வெடியோசை கேட்ட திசையில் நோக்கினர்.

அங்கு இளவரசர் எட்வேட் துப்பாக்கியும் கையுமாக நின்றார். அவரது கண்களில் சினம் கொப்பளித்தது.

பத்திரிகையாளர்களின் தலைக்கு மேலாக சுட்டு எச்சரித்தார் இளவரசர் எட்வேட் என்று மறுநாள் செய்திகள் வெளியாகின.

இளவரசி டயானாவைத் தவிர அரசகுடும்பத்தினர் அனைவருமே பத்திரிகையாளர்களை கிள்ளுக் கீரைகளாக நினைக்கின்றனர்.

தனது மகனின் செயலுக்காக மகாராணியார் வருத்தம் தெரிவிக்கவில்லை. "எங்களை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?" என்று பத்திரிகையாளர்களிடம் கேட்டார்.

'இளவசர் சாள்ஸ் சிடுசிடுத்த முகத்துடன் காணப்பட்டார்.' என்று பத்திரிகைகள் கிழித்திருந்தன.

இவ்வாறான சம்பவங்களும் பத்திரிகைகளை அரச குடும்பம்மீது கடும் சீற்றம் கொள்ள வைத்தன.

### "போதும் நிறுத்துங்கள்!"

"பத்திரிகையாளர்கள், புகைப்படப்பிடிப்பாளர்கள் போன்றோருக்கு அதிக இடம் கொடுக்கவேண்டாம்!" என்று மகாராணியாரே டயானாவிடம் கூறியிருந்தார்.

டயானா அதனை காதில் போட்டுக்கொள்ளவில்லை. புகைப்படக்காரர்களுக்கு அவர்கள் விருப்பம் போல போஸ் கொடுப்பார்.

ஆனால் ஒரு கட்டத்தின் பின்னர் பத்திரிகைகளில் தனது புகைப்படங்கள் இடம்பெறுவதைப் பார்த்துப் பார்த்து டயானாவுக்கே சலித்துப் போனது.

புகைப்படக்காரர்கள் தன்னை துரத்தித் துரத்தி படம் எடுப்பது முதலில் சுவையான, த்ரிலான அனுபவமாக இருந்தது.

பின்னர் அதுவே திகட்டிவிட்டது. கமரா வெளிச்சம் பட்டாலே வெறுப்பாக இருந்தது.

எக்கட்டத்திலும் தனது வெறுப்பை புகைப்படக்காரர்களிடமோ பத்திரிகையாளர்களிடமோ டயானா நேரில் காண்பித்தது கிடையாது.

சில சந்தர்ப்பங்களில் ஓடித் தப்பியிருக்கிறார். வேறு சில சந்தர்ப்பங்களில் "ப்ளீஸ் வேண்டாம், போதும் நிறுத்துங்கள்!" என்று வேண்டுகோள் விடுத்தும் இருக்கிறார்.

"கடிந்து பேசியோ, சினந்தோ நடந்து கொண்டதில்லை. அதுதான் டயானா!" என்கிறார் அவரை பலமுறை புகைப்படம் எடுத்து படப்பிடிப்பாளரில் ஒருவரான சகாரின்.

தன்னைப்பற்றி தரக்குறைவாக சில பத்திரிகைகள் எழுதியபோது டயானா வருத்தமடைந்தார். அப்போது அவரது சிநேகிதி ஒருவர்: "உன்னைப் பற்றிய புகைப்படங்களை வெளியிட்டு சம்பாதித்தவர்கள், இப்போது உன்னையே திட்டுகிறார்கள் பார்த்தாயா?" என்று கூறினாராம்.

அதற்கு டயானா சொன்ன பதிலில் அவரது பக்குவப்பட்ட மனம் தெரிகிறது: "பத்திரிகைகளால்தான் நானும் இந்தளவு பிரபலமானேன். அதனால் அவர்களுக்கு மட்டும்தான் பலன் என்று கூறுவது சரியல்ல," என்றாராம்.

## கடிந்து பேசாத இளவரசி



### பத்திரிகைக் குண்டு

"தனது மெய்காப்பாளர்கள் மூவருடன் டயானாவுக்கு நெருக்கமான உறவு இருக்கிறது. ஒவ்வொரு முறையும் வெளியே செல்லும்போது மூவரில் ஒருவரை மாறி மாறி அழைத்துச் செல்லுவார்.

நேராக எங்காவது சிநேகிதி வீட்டுக்கு அவர்களை அழைத்துச் சென்று, அவர்களுடன் சந்தோசம் அனுபவித்துவிட்டு திரும்புகிறார்.

மெய்காப்பாளர் ஒருவருடன் டயானா மட்டுமன்றி, அவரது சிநேகிதியும் உறவு வைத்துக் கொண்டார்." இப்படி பத்திரிகை ஒன்று குண்டைத்தூக்கிப் போட்டது.

டயானா கலங்கிப் போனார். அபாண்டமாக இப்படி எழுதுகிறார்களே, என்று தன் சிநேகிதிகளிடம் கூறிய டயானா, "ஒருவேளை சாள்ஸின் நண்பர்கள்தான் தூண்டிவிடுகிறார்களோ? தெரியவில்லை," என்றும் கூறினாராம்.

தன்னைப்பற்றிய பரபரப்பான கிசுகிசு செய்திகளைக் கண்டு முதலில் அதிர்ந்தாலும்,



பின்னர் அவ்வாறான செய்திகளை அலட்சியம் செய்யப் பழகிக்கொண்டார்.

சில தகவல்கள் உண்மையாக இருக்கும் போது மட்டும், பத்திரிகையாளர்களின் திறமையை எண்ணி லேசாக ஆச்சரியப்படுவார்.

"பத்திரிகையாளர்களையும், புகைப்படக்காரர்களையும் ஏமாற்றிவிட்டு ஜேம்ஸ் கில்பியை நான் சந்தித்தபோதெல்லாம் என் சாகசத்தை எண்ணி நானே பெருமைப்பட்டதுண்டு" என்று குழந்தைபோன்ற குதூகலத்துடன் கூறினாராம் டயானா.

ஜேம்ஸ் கில்பி டயானாவை கட்டியணைத்து முத்தமிட்டுக் கொண்டிருக்க டயானாவின் விழிகள் மட்டும் எங்காவது கமராக்களின் மூக்கு தெரிகிறதா? என்று தேடிக்கொண்டிருந்தன.

டயானாவின் வளைவுகளிலும், வசீகரங்களிலும் கில்பியின் கரங்கள் பயணித்துக் கொண்டிருந்தன. டயானாவோ பத்திரிகையாளர்கள் எங்கே மோப்பம் பிடிக்கப்போகிறார்களோ என்று பயந்துகொண்டிருந்தார். அவரது இதயம் படபடத்தபடி இருந்தது.

அவரது மார்புகளின் மையத்தில் காதுவைத்துப் பார்த்த கில்பி, உணர்ச்சித் துடிப்பு என்று நினைத்து மகிழ்ந்தார். 'உன் இதயம் 'கில்பி' என்றுதான் கூவுகிறது டியர்!' என்றாராம்.

டயானாவுக்கு கில்பியின் நினைப்பு சிரிப்பாக இருந்தது. பொலபொலவென்று சிரித்துவிட்டார். "கூச்சமாக இருக்கிறதா?" என்று கேட்டாராம் கில்பி. அவரது லேசான வழுக்கைத் தலையில் செல்லமாகக் குட்டினாராம் டயானா.

கில்பியின் வழுக்கைத் தலையை டயானா கேலி செய்ய, "வழுக்கைத் தலையர்கள் அந்த விவகாரங்களில் ரொம்ப விவரமானவர்கள், ஆர்வமானவர்கள்!" என்று கில்பி கண்ணடிக்க, "நாசகாரா! உன்னால் வழுக்கைத்தலையர்கள் அனைவருக்கும் இப்படியொரு பழியா?" என்று டயானா கிண்டலடித்தாராம்.

இவையெல்லாம் டயானா குஷியான மனநிலையில் தன் நண்பிகளிடம் அவ்வப்போது இறக்கி வைத்த நினைவுக் குறிப்புக்கள்.

### நடிப்பு

கில்பி- டயானா தொலைபேசி உரையாடலை ஒட்டிக்கேட்ட பத்திரிகைகள், கில்பியும், டயானாவும் ஒன்றாக நெருங்கிப் பழகும் காட்சியைப் படமாக்க அலைந்தனர்.

அவர்களுக்கு தண்ணி காட்டிக் கொண்டே இருந்தார் டயானா. கில்பியும் கில்லாடி என்பதால் அவரைப் பின்தொடர்ந்து அறியவும் முடியாமல் இருந்தது.

ஒருமுறை கில்பியின் குரல்போல மிமிக்ரி செய்து, "டியர் நாங்கள் எங்கே சந்திக்கப்போவதாக கூறியிருந்தோம்? எனக்கு மறந்துவிட்டது. அதுதான் கேட்கிறன்!" என்று தொலைபேசியில் கேட்டது ஒரு குரல்.

கில்பிதான் என் உடன் நினைத்த டயானா, அடுத்த நொடியே உஷாரானார். தொலைபேசி ஊடாக இருவரும் இனிமேல் பேசுவதில்லை; அதையும்மீறி அவசியம் ஏற்பட்டால்கூட சந்திக்கும் இடம் பற்றி பேசுவதில்லை என்று முன்னரே இருவரும் முடிவு செய்திருந்தனர். அதனை நினைத்து உஷாரான டயானா, நம்புவதுபோல நடித்தார்.

ஒரு இடத்தின் பெயரைக் குறிப்பிட்டு, "அங்குதான் சந்திக்கிறோம், அடிக்கடி இப்படி மறக்கக் கூடாது." என்று கண்டிப்பதுபோலவும் நடித்தார்.

குறிப்பிட்ட இடத்திற்கு மறுநாள் படையெடுத்த பத்திரிகையாளர்களும் புகைப்படப்பிடிப்பாளர்களும் பலத்த ஏமாற்றமடைந்தனர்.

(அடுத்த வாரமும் வரும்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? சிலாபம் வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | செல்வி எல். கஜேந்திரா தேவி, கண்ணகியம்மன் கோயிலடி, திமிலை, சிலாபம். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு- அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 18

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அறிவிக்குமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com





> நன்னும் பாட்டினோடு தாளம்-மிக
> நன்றா வுளத்தழுந்தல் வேண்டும்-பல
> பண்ணிற் கோடிவகை இன்பம்-நான்
> பாடத் திறனடைதல் வேண்டும்!
>
> -சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# செல்வத்தின் புத்திசாலித்தனம்



ஓர் ஊரில் ஆறுமுகம் என்பவர் புடைவைக்கடை ஒன்றை நடத்தி வந்தார். அவருக்கு செல்வம் என்ற மகன் ஒருவன் இருந்தான். பத்து வயதான செல்வம் பாடசாலை ஒன்றில் படித்து வந்தான்.

ஒருநாள் ஆறுமுகம் கடையைப் பூட்டி விட்டு வந்து வீட்டில் சோகமாக இருந்தார். இதைக் கண்ட செல்வம் தந்தையிடம் சென்றான்.

"ஏன் அப்பா கவலையாக இருக்கிறீர்கள்?" என்று தந்தையைப் பார்த்துக் கேட்டான் செல்வம். அதற்குத் தந்தை:

"எமது கடையில் கடனுக்குத் துணிகளை வாங்கிய பலர், இப்போது கடைப்பக்கமே வருவதில்லை. பலவழிகளிலும் முயன்று விட்டேன், காசு மட்டும் வரவேயில்லை," என்று கவலையுடன் சொன்னார்.

இதைக் கேட்ட செல்வம் சிறிது நேரம் யோசித்தான். பின் தந்தையிடம் சொன்னான்:

"அப்பா! எம்மிடம் கடன் வாங்கியவர்களின் பெயர்களையும், எவ்வளவு காசு தரவேண்டும் என்பதையும் பட்டியலிட்டுத் தாருங்கள்," என்று சொன்னான்.

தந்தையும் அதன்படியே செய்து செல்வத்திடம் கொடுத்தார். ஒவ்வொருவரும் கொடுக்கவேண்டிய கடன்காசை ஒன்றுக்கு இரண்டு மடங்காக்கி அவர்களிடம் அனுப்பி வைத்தான்.

மறுநாள் காலை செல்வம் தந்தையுடன் அவர்களின் கடைக்குச் சென்றான். கடை திறந்து சிறிது நேரத்திற்குள் அவர்களிடம் கடன் வாங்கியவர்கள் எல்லாரும் கடைக்கு வந்தார்கள். அவர்கள் அனைவரும் வந்து,


"இது என்ன? நாங்கள் உங்களுக்குத் தரவேண்டிய கடன்காசை இரண்டு மடங்காக்கி விட்டீர்கள்? இது என்ன அநியாயம்? நாங்கள் உங்களுக்குத் தரவேண்டிய சரியான கடன் தொகையைத்தான் தருவோம்," என்று சொன்னார்கள்.

உடனே செல்வம் அவர்கள் முன்வந்து, "அப்படியானால் நீங்கள் தர வேண்டிய சரியான கடன் தொகையை இப்போதே தந்துவிடுங்களேன்!" என்று சொன்னான்.

அவர்களும் ஆறுமுத்திற்குக் கொடுக்க வேண்டிய கடனை இப்போதே கொடுத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் கடன்தொகையைக் அதிகரித்து விடுவான்' என்று எண்ணித் தங்கள் கடன் தொகையைக் கணக்கிட்டுக் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

மகனின் புத்திசாலித்தனத்தால் கடன் தொகையை மீட்ட ஆறுமுகம் அவனை அன்புடன் கட்டித் தழுவினார்.

## அதிசயம் - ஆனால் உண்மை!



**காட்டு அந்துப் பூச்சி:**

← தென் அமெரிக்காவிலுள்ள காட்டு அந்துப்பூச்சியை பூஞ்சைக்காளான் தாக்கும் போது இப்பூச்சி, செடி போன்று தன் உருவத்தை மாற்றிக்கொள்ளும்.

**டேர்பென்டைன் புழு:**



→ டேர்பென்டைன் மரத்தின்மீது கூடு கட்டும் இப்புழு இம்மரத்தின் இலைகளை குதிரை லாடம் போல வளைத்துத் தனது புகலிடத்தை அமைக்கிறது.

**ஒன்றிலிருந்து ஒன்பது:**



→ மனிடோபா என்ற இடத்தைச் சேர்ந்த மார்த்தா என்ற பெண்மணி, கேலெண்டுலா என்ற பூச்செடியை வளர்த்தார். இச்சடியில் பூத்த ஒரு மலரில் இருந்து 9 பூக்கள் தனித்தனியாக மலர்ந்தன.

**ஸீ ஏஞ்சல்**



← ஸீ ஏஞ்சல் எனப் படும் இந்த நத்தைக்கு இறக்கைகள் உண்டு. இவை பார்ப்பதற்கு தேனீக்கள் போன்று காணப்படும்.

## வாரம் ஒரு நாடு

### சுவாஸிலாந்து



தலைநகர்- பாபேன்
பரப்பு- 17,363 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 9.13 இலட்சம்
மொழி- ஆங்கிலம், ஸ்வாஸி
எழுத்தறிவு- 65%
சமயம்- கிறிஸ்தவம், பழங்குடி
நாணயம்- லிலாங்கனி
தனிநபர் வருமானம்- 1050 டொலர்.

**அமைவிடம்:**

பரந்த தென் ஆபிரிக்கா நாட்டின் நேட்டால் மாகாணம் தெற்கேயும் டிரான்ஸ்வால் மாகாணம் மேற்கேயும் வடக்கேயும் கொண்டுள்ள இந்நாட்டின் கிழக்கே மொஸாம்பிக் நாடு அமைந்துள்ளது.


**வரலாறு:**

சூலு இனத்தவர் 1820ல் பந்து இனத்தவரை ஆக்கிரமிக்க, பந்து இனத்தவர் தனியாக நிர்மாணித்த நாடுதான் சுவாஸிலாந்து. 1903ல் பிரிட்டன் இந்த நாட்டின் ஆட்சியைக் கையில் எடுத்தது. 1968ல் மன்னர் ஆரசியல் சட்டத்தை இரத்துச் செய்து அனைத்து அதிகாரத்தையும் தானே எடுத்துக்கொண்டார்.

**பொருளாதாரம்:**

கரும்பு, நெல், பருத்தி முக்கிய உற்பத்திப் பொருட்கள். கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில். அஸ்பெஸ்டஸ், இரும்பு, நிலக்கரி போன்றவை முக்கிய கைத்தொழில்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.09.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 262
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 260

**பரிசுக்குரியவர்:**
ஜி. கார்தீபன்,
றோயல் கல்லூரி, கொழும்பு-7.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கபிலாஷிதா சிவநாதன், வித்தியாலயம் ஒழுங்கை, திருகோணமலை. | ஏ. மாஜித், அல் ஹர்மியா ம.வி, நேரியகுளம், வவுனியா. |
| ஏ. ரிஸ்வின், அல் அஸ்ரக் வித்தியாலயம், அட்டப்பள்ளம், நிந்தவூர்-03. | செல்வரட்ணம் லவசங்கர், சரஸ்வதி மத்திய கல்லூரி, பதுளை. |
| விஜயராசா யோகானந்தி, தி/ விக்னேஸ்வரா ம.வி, திருகோணமலை. | என். நளினா, கடற்கரை வீதி, நீர்கொழும்பு. |
| எ.எம். ஸவ்பீக், பு/ எருக்கலம்பிட்டி மு.ம.வி, பாலாவி. | செல்வி அஞ்சனா பரமசிவராஜா, உக்லாங்குளம், வவுனியா. |
| எஸ். குதர்ஷனா, கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை. | ஜெயரத்தினம் சச்சாஜினி, களுதாவளை ம.வி., களுவாஞ்சிக்குடி. |

## மருத்துவம் பற்றிய தகவல்கள்

* மனிதன் நாகரிகமடைவதற்கு முன்பே மருத்துவ முறைகளைப் பின்பற்றியிருக்கிறான்.



* இப்போதுள்ள பல்வேறு வியாதிகளைப் பற்றி பாபிலோனியர்கள் முன்னரே எழுதிவைத்திருக்கிறார்கள்.
* மனிதர்களது பாவச் செயல்களே அவர்களது உடல்நலக் கோளாறுகளுக்கான காரணம் என்று எகிப்தியர்கள் நம்பினர். என்றாலும் சில நோய்களுக்கு அவர்கள் 'அபின்' (ஓப்பியம்) மற்றும் விளக்கெண்ணெய் கொண்டு செய்யப் பட்ட மருந்துகளைப் பயன்படுத்தினார்கள்.
* 'மருத்துவத்தின் தந்தை' எனப்படும் ஹிப்போக்கிரேட்ஸ் தான் உடல்நலக் கோளாறுகளுக்கும், மூடநம்பிக்கைகளுக்கும் சம்பந்தமில்லை என நிரூபித்தார்.
* ஹிப்போக்கிரேட்ஸ் 2000 வருடங்களுக்கு முன் எழுதி வைத்த மருத்துவக் குறிப்

## எக்ஸ் கதிர்கள்

மருத்துவத்துறையைத் தவிர தொழிற்துறையில் எக்ஸ் கதிர்களின் பயன்பாடுகள் வருமாறு:

* தங்கம் கடத்தப்படுவதைக் கண்டு பிடிக்கலாம்.
* உண்மையான வைரமா அல்லது போலி வைரமா எனக் கண்டுபிடிக்கலாம்
* முத்துச் சிப்பிகளில் முத்துக்கள் உள்ளனவா எனக் கண்டறியலாம்.
* தபால் மூலம் அனுப்பப்படும் கட்டுக்களில் உள்ள பொருட்களை பரிசோதிக்கலாம்.
* வார்ப்புக்கள், இணைப்புக்கள் ஆகியவற்றில் ஏற்படும் குறைகளை அறியலாம்.

## ஜேம்ஸ் வாட்



தொழிற்புரட்சியை உருவாக்கியவர் என்று ஜேம்ஸ் வாட்டைக் கூறலாம். 1736ம் ஆண்டு ஸ்கொட்லாந்து நாட்டில் பிறந்தவர். இவர்தான் நீராவி இயந்திரத்தைக் கண்டு பிடித்தார்.

நீராவி இயந்திரத்தை இவர் 1765ல் கண்டு பிடித்தார். பின் பெரிய வர்த்தகரான மதேவ் பவுல்டன் என்பவருடன் இணைந்து நீராவி இயந்திரங்களை அதிக அளவில் உருவாக்கினார்.

இந்த நீராவி இயந்திரங்கள் இங்கிலாந்துத் தொழிற்துறையை மாற்றியமைத்தது. இரும்புப் பொருட்கள் உற்பத்தியை நீராவி இயந்திரங்கள் எளிதாக்கின. நிலக்கரி சுரங்கப் பணிகளிலும் இந்த இயந்திரம் பயன்பட்டது.

நீராவி இயந்திரத்தை ஜேம்ஸ் வாட் கண்டு பிடித்திருக்காவிட்டால் தொழிற்புரட்சி ஏற்பட்டிருக்காது. இது எரிபொருள் அதிகம் வீணாவதைத் தடுக்கிறது.

## உயரமான ஏரி

உலகிலேயே மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள ஏரி 'டிட்டிகாகா' ஏரி. நன்னீராலான இந்த ஏரி தென் அமெரிக்காவில் அண்டடெஸ் மலையில் உள்ளது. இது கடல் மட்டத்தில் இருந்து சுமார் 4 கிலோமீட்டர் உயரத்தில் உள்ளது.




இதன் பெரும்பகுதி பெரு நாட்டிலும், சிறுபகுதி பொலிவியா நாட்டிலும் உள்ளது. இந்த ஏரியின் நீளம் 220.8 கிலோமீட்டர். அகலம் 110.4 கிலோமீட்டர். பல ஆறுகள் இந்த ஏரியில் சேருகின்றன. ஆனால் 'டெஸ்கெஉடெரா' என்னும் ஒரே ஒரு ஆறு மட்டும் இந்த ஏரியில் இருந்து புறப்படுகிறது. இந்த ஏரியில் 'சன்', 'மூன்' போன்ற சிறு தீவுகள் உள்ளன.

இது பூமத்திய ரேகைக்குச் சமீபமாக இருந்தாலும் கோடைகாலத்தில் அமெரிக்காவில் உள்ள எல்லா ஏரிகளையும் விட குளிர்ந்தே இருக்கிறது. காரணம், இது கடல் மட்டத்தில் இருந்து வெகு உயரத்தில் இருப்பதுதான்.

இந்த ஏரியைச் சுற்றி வரண்ட பகுதிகள் தான் உள்ளன. அருகில் மரங்களே வளர்வதில்லை.

## இடிதாங்கி



உயரமான கட்டடங்களில் இடி மின்னலின்போது மின்சாரம் இறங்க வாய்ப்புண்டு. அச்சந்தர்ப்பத்தில் கட்டடம் இடிந்து விழக்கூடிய அபாயம் உண்டு. அதைத் தவிர்க்க ஈட்டி போன்ற கூர் முனைகளையுடைய ஒரு உயரமான அமைப்பை உயரமான கட்டடங்களின் உச்சியிலும், கோபுரங்கள், ஸ்தூபிகளின் உச்சியிலும் பொருத்தியிருப்பார்கள். அத்துடன் ஒரு கம்பியை இணைத்து பூமியில் செலுத்துகிறார்கள். இதுதான் 'இடிதாங்கி' என அழைக்கப்படுகிறது.

இது எவ்விதம் வேலை செய்கிறது என்று தெரியுமா?

இந்த இடிதாங்கியின் கூர் முனைகளில் நேர்மின் அணுக்களும், எதிர்மின் அணுக்களும் இருக்கும். மின்னலின்போது மின்சாரம் அக்கட்டடத்தில் பாய நேரிட்டால், நேர்மின் அணுக்களை இடிதாங்கியின் எதிர்மின் முனையும், எதிர்மின் அணுக்களாக இருந்தால் இடி தாங்கியின் நேர்மின் முனையும் கிரகித்து அத்துடன் இணைக்கப்பட்டுள்ள கம்பியின் வழியாக பூமிக்கு அனுப்பி விடுகிறது.

இதனால் கட்டடம் இடிபாடுகளில் இருந்து தவிர்க்கப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இரண்டாம் பாகம்

அங்கம் 03

# மேற்கே ஒரு குற்றம்



"ஒரு பெண் கொலை செய்யப்பட்டாள். என்னிடம் ஏதோ சொல்ல விரும்புவதற்குள் அவளை அங்கே தீர்த்துக்கட்டி விட்டார்கள். விளையாட்டாக நான் அவர்களுடன் தொடர்பு கொள்ள, விஷயம் மேற்கு ஜெர்மனிவரை என்னைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டது."

"விவரமாகச் சொல்லுங்கள்."

சொன்னான். ஸ்டைன் ஹாஃப் கண்களை முடிக்கொண்டு கேட்டார். அவன் முடித்ததும் கண்களைத் திறக்காமல் சற்று நேரம் யோசித்தார். ஹொனிஷ் உன்னிப்பாகக் கவனித்தான். அவனுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்காது என்று நினைத்தான் கணேஷ்.

"அப்படியா?" என்றார்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"கடத்தல்தான்! சமீபத்தில் இது அதிகமாகியிருக்கிறது."

"கடத்தல் சரிதான். எது? எங்கிருந்து?"

"அங்கிருந்து இங்கே என்றால் ஓப்பியம்- ஹெராய்ன் அல்லது ஏதாவது ஒரு போதைப் பொருள். இங்கிருந்து அங்கே என்றால் தங்கம், வைரம் இவைகளில்தான் அதிகப் பணம் கைமாறுகிறது. உங்கள் இருவருக்கும் டிக்கெட் வாங்கி அனுப்பக் கூடியதென்றால் பெரிய கடத்தல்தான்..."

"எனக்கென்னவோ இங்கிருந்து அங்கேதான் என்று தோன்றுகிறது."

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"என்னிடம் அவர்கள் எதையும் ஒப்படைக்கவில்லையே? டிக்கெட் வாங்கப் பணம் கொடுத்தார்கள். அவ்வளவுதான். ஜெஸ்ட் எ மினிட். நீங்கள் பொலிஸ்தானா என்பதற்கு என்ன ஆதாரம்? சாரி, நான் அதைக் கேட்க வேண்டியிருக்கிறது."

ஸ்டைன் ஹாஃப் தன் கோட்டு பாக்கெட்டுக்குள்ளிருந்து ஒரு பாட்ஜை எடுத்துக்காட்டினான்.

மார்க் ஸ்டைன் ஹாஃப்.

சூபரின்டெண்டன்ட்.

போலிட்ஸே... என்று என்னென்னவோ எழுதி முத்திரை குத்தி போட்டோ வைத்த தகடு அது..

"கேட்க வேண்டியது நியாயம்தான். சொல்லுங்க மேலே."

"டிக்கெட் பணம் கொடுத்ததோடு சரி. அதற்கப்புறம் அவர்களிடமிருந்து பேச்சு மூச்சு இல்லை. இந்தப் பெண்ணுக்குப் பதில் நான் நியமிக்கப்பட்டேன். அவ்வளவுதான். இதிலிருந்து இங்கேதான் சரக்கு கை மாறும் என்று நினைக்கிறேன்."

"இருக்கலாம். அது இன்று தெரிந்துவிடும்."

"எப்படி?"

"நீங்கள் வந்திருக்கிற செய்தி நிச்சயம் இங்கே வந்து சேர்ந்திருக்கும். நிச்சயம் இங்கே உங்களுடன் தொடர்பு கொள்ளுவார்கள். நீங்கள் செய்யவேண்டியது இது. இன்று ஹொட்டலில் இருங்கள். ஊர் சுற்றிப் பாருங்கள். மாலைக்குள் யாராவது உங்களை அணுகுவார்கள். அணுகி ஏதாவது கேட்பார்கள். கேட்டுக் கொண்டு அவர்கள் ஆசாமி போலவே நீங்கள் நடிக்க வேண்டும்- புரிகிறதா?"

"புரிகிறது."

"பொலிசுடன் எந்தவித தொடர்பும் கொள்ளாதீர்கள். ஹொட்டல் டெலிஃபோன் மூலம் தொடர்பு கொள்ளவே கூடாது. நாங்கள் உங்களுடன் அவ்வப்போது தொடர்பு கொள்ளுவோம். பின்னணியில் நாங்கள் எப்போதும் இருப்போம். பயப்படாதீர்கள். ரிலாக்ஸ்- என்ன?"

"சரி..."

"டூரிஸ்டாக வந்தீர்கள். டூரிஸ்ட் போலவே நடந்து கொள்ளுங்கள்."

கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. விருட்டென்று இருவரும் எழுந்தார்கள். "ஒரு நிமிஷம்" என்று இருவரும் பாத்ரூமில் மறைந்தார்கள். அவர்கள் செயல்பட்ட மின்னல் வேகத்தைப் பார்த்து வியந்தான் கணேஷ்.

வசந்த் கதவைத் திறந்தான். அந்த ஆப்பிள் கன்னத்து ஆசாமி ஒரு மஞ்சள் சீட்டை அவர்களிடம் கொடுத்து ஏதோ சொன்னான்.

"தாங்ஸ்!" என்று வாங்கிக்கொண்டான்.. அவன் சிரித்துவிட்டுச் சென்றான்.

கணேஷ் அந்தக் காகிதத்தைப் பிரித்தான். அதில் ஒரேயொரு வரி எழுதியிருந்தது.

ஆல்ட்டே பினாகொதேக். 3 மணி.

"மிஸ்டர் ஸ்டைன் ஹாஃப். இதைப் பாருங்கள்! இந்த ஹொட்டல் சிப்பந்தி வந்து என்னவோ சொல்லிட்டு இதைக் கொடுத்துவிட்டுச் சென்றான்."

"அவன் சொன்னது எனக்குக் கேட்டது. கீழே ரிஸப்ஷனில் ஒருவன் வந்து இதை உங்களிடம் கொடுக்குமாறு சொல்லிவிட்டுச் சென்றானாம்."

ஸ்டைன் ஹாஃப் அதை வாங்கிப் பார்த்தார். "ஆல்ட்டே பினாகொதேக் என்றால் பழைய மியூசியம். அங்கே மூணு மணிக்கு உங்களை வரச் சொல்லியிருக்கிறார்கள். நான் சொன்னது போல முதல் தொடர்பு ஏற்பட்டு விட்டது?"

"என்ன செய்வது?"

"அங்கே செல்லுங்கள். ட்யூப் ரெயிலில் இங்கிருந்து நான்கு ஸ்டேஷன் தள்ளி இருக்கிறது. யூனிவர்ஸிடேட்டில் இறங்குங்கள். விசாரித்தால் யாரைக் கேட்டாலும் சொல்வார்கள். புராதன சித்திரங்கள் வைத்திருக்கும் மியூஸியம் அது. பிரபலமானது. சரியாக மூன்று மணிக்குச் சென்றுவிடுங்கள். ஞாபகமிருக்கட்டும். அவர்களுக்கு நம்பிக்கை தரும்படி நடந்துகொள்ள வேண்டும். குட்பை... குட் ஹண்டிங்."

"ஆஃப் வீடர்ஸென்" என்றான் ஹொனிஷ் முதல் தடவையாக.

அவர்கள் சென்றதும் கணேஷ் அந்தக் கடிதத்தை வெறித்துப் பார்த்தான்.

"விஷயம் சிக்கலாகிறதே" என்றான் வசந்த்.

"பார்ப்பம்."

"குளிக்கலாமா? பாத்ரூம்ல வெந்நீர் வருது. ஆனா தொட்டிக்குள்ள எப்படிக் குளிக்கிறதுன்னே தெரியலை. குளுப்பாட்டி விட யாராவது வருவாளான்னு கேக்கணும். குலைப் பசி பாஸ்! தோசை கீசை கிடைக்குமா?"

"உனக்கு அச்சம் ஏதும் இல்லையா வசந்த்?"

"எதுக்கு நீங்க இருக்கீங்க. பொலிஸ் இருக்கு! கோலிக்குண்டு மாதிரி கண்ணை வெச்சுண்டு ரெண்டு பேரும் எப்படி இருக்காங்க! கோட்டைத் திறக்கிறபோது உள்ளே துப்பாக்கி செருகியிருந்தது பார்த்தேன்."

"துப்பாக்கி இந்த தேசத்தில சீப்படும்! நீ குளிக்கிறாயா முதல்லே?"

குளித்துவிட்டு ஸ்வெட்டர் கோட் அணிந்துகொண்டு கனமாக, ஹொட்டலை விட்டுக் கிளம்பினார்கள். வசந்த் அந்த ரிஸப்ஷன் பெண்ணை விசாரித்தான். அவள் வசீகரமாகச் சிரித்தாள். வெளியே வந்தார்கள்.

"நிச்சயம் வருவா பாஸ்!"

"சும்மா இரு."

பிளாட்பாரத்தில் நடந்தார்கள். சூரியன் உறைக்கவில்லை. சில்லென்று கத்திக்குத்துவதுபோல் காற்று. கண்ணாடிக்குப் பின் பியானோக்கள். ஜன்னல்களில் இரத்தச் சிவப்பில் ட்யூலிப் மலர்கள். இப்போதுதான் ஃபாக்டரியிலிருந்து வெளி வந்ததுபோல் புதிய பஸ்கள்! டிராம்கள்!

ஒரு பெரிய சதுக்கத்திற்கு வந்து பூமிக்குள் செல்லும் எஸ்கலேட்டரில் இறங்கினார்கள். ஒரு இளைஞன் சூடாக ஒரு பெண்ணை முத்தமிட்டுக் கொண்டிருக்க, முத்தமாகவே இறங்கினார்கள்.

"சாப்பிடறான் பாஸ் அவளை!" என்றான் வசந்த்.

"குளிர் ஜாஸ்தியோல்லியோ?"

அடித்தளத்தில் ஏகப்பட்ட கடைகள் இருந்தன. தின்பண்டங்கள் யாவும் பரிச்சயமில்லாததாக இருந்தன. ஹாம்பர்கள் ஒரு அடி நீளம் இருந்தது. யோக்ஹர்ட் என்ற தயிர் காகிதக் கோப்பைகளில் கிடைத்தது. தண்ணீர் கிடைக்கவில்லை. இரண்டு டின்னில் கோக்கோ கோலா வாங்கிக்கொண்டு அந்த ஹாம்பர்கரை கடித்துப் பார்த்தார்கள். சய்! அரைக்கடிதான் சாப்பிட்டார்கள். அவ்வப்போது கோக்கோ கோலாவை வைத்து விழுங்கினார்கள். குமட்டியது. அந்த இடத்தை விட்டு விலகும்போது வசந்த் அந்தப் பெண்ணைப் பார்த்து, "ஆஃப்ட வீடர்ஸின்" என்றான்.

"வீடர்ஸின்" என்றாள் பதிலுக்கு. மேலே வந்தார்கள். "என்னடா அர்த்தம்?" என்றான் கணேஷ்.

"யாருக்குத் தெரியும்? அந்த ஹொனிஷ் சொன்னதை திரும்பி உபயோகிச்சுப் பார்த்தேன். போய்ட்டு வரேன்னு அர்த்தமா இருக்கலாம்."

"பொழச்சுப் போய்டுவே."

"விளக்கை அணைங்கறதுக்கு ஜெர்மன்ல என்னன்னு கேட்டு வெச்சுக்கணும்?"

"ஆரம்பிக்கிறியா?"

ஸாஸெஸ் ஸ்ட்ராஸ்ஸேயில் நடந்தார்கள். இந்தப் பக்கம் நடப்பதா அந்தப் பக்கம் நடப்பதா என்று மலைப்பாக இருந்தது. நவீன வாழ்க்கையின் அத்தனை அம்சங்களும் கடைகளில் கொட்டிக்கிடந்தன.

"நம்ம கிட்ட இருக்கிற பணத்தில் அதில் ஒண்ணைக் கூட வாங்க முடியாது," என்றான் கணேஷ்.

"சும்மா பார்க்கலாமே?"



ஸெக்ஸ் லாடன் என்றொரு பிரதானமான கடையைப் பார்த்து விசிலடித்தான் வசந்த். "பாஸ் லுக் அட் திஸ்!"

உடனே உள்ளே நுழைந்து விட்டான். புத்தகங்கள், சாதனங்கள், மருந்துகள் மாத்திரைகள்.... எத்தனை விதங்கள். எல்லாவற்றிற்கும் ஒரே ஒரு பொது அம்சம்; சம்போகம்! செக்ஸ்! ஆணும் பெண்ணும், ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும்! மேல் நாட்டு கலாசாரத்தின் வேட்டை எல்லைகள் எல்லாவற்றையும் தாண்டி சாதாரணமான அர்த்தங்கள் அலுத்துப்போய் உலகத்தில் உள்ள அத்தனை விபரீதங்களையும் யோசித்துப் பார்த்து எடுத்த புகைப்படங்கள் கலர் கலராக அச்சாக! அப்புறம் அந்த சாதனங்கள். அவைகளைக் கூச்சமில்லாமல் விவரிக்கும் இளம் பெண்கள்.

"இது பாட்டரி சக்தியில் வேலை செய்யறது. மூன்று வேகங்கள் உண்டு இதற்கு. சாதா, மத்திமம், உத்தமம்," அவள் பேசிக் கொண்டே அதை இயக்கிக் காட்டுகிறாள். "உங்கள் மனைவிக்கோ, சிநேகிதிக்கோ ஏற்படப்போகும் இன்பத்திற்கு அளவே இல்லை. இது ஆண்களுக்கு, ஊதினால் போதும், பக்கத்தில் படுத்துக்கொள்ள ஒரு பெண்! உண்மையான சூட்டுடன்..."

"வசந்த் கம் ஆன்! நிக்கறதுக்கே வெக்கமா இருக்கு!"

"இருங்க பாஸ்! மிஸ், அது என்ன?"

"இதில் காசு போட்டால் ஒரு நிமிஷம் திரைப்படம் காட்டும்."

"நம்மூர் பயாஸ்கோப் மாதிரி இல்லே? சில்லறையா இருக்கா பாஸ்!"

"வசந்த் நான் போறேன்!"

"ஏன்? பார்க்க வேண்டாமா?"

"நான் நிறையப் பார்த்தாச்சு!"

"நான் பார்க்க வேண்டாமா?"

"சரி, நான் வெளியில் நிற்கிறேன். பார்த்துவிட்டு வா."

கணேஷ் வெளியே வந்தான். நடைபாதையில் நின்றான். அவனுக்குக் கோபம் வந்தது. வசந்த் மாதிரி இளைஞர்களுக்கு எல்லையற்ற வசீகரங்கள். மிகச் சுலபமாகக் கிடைக்கக்கூடிய நகரம் அது. செக்ஸ் இவர்களுடைய அப்ஸெஷன். எல்லாவற்றையும் திறந்துகாட்டி அதில் உள்ள கவர்ச்சியை சாக அடித்திருக்கிறார்கள். எதிரே தோன்றும் ஆரோக்கியமான பெண்களைப் பார்த்தான். பலபேர் ப்ரா அணியவில்லை. நடக்க நடக்க மார்பு குலுங்கச் செல்கிறார்கள். சிலர் சட்டைகள் மிக மெலிதாக இருக்க, உள்ளே....

வசந்த் ஜன்ம சாபல்யமடைந்தவன் போல் வெளிவந்தான். "சரியான மிஷின் பாஸ். நல்ல சமயத்தில் நின்று போய்டறது. மறுபடி காசு போட்டால்தான் மேலே காட்டுவேன்கிறது. பணம் புடுங்கி மிஷின். அப்புறம் மாடிக்கு போனா இன்னும் நிறைய இருக்குன்னா! ஒரே நாளிலேயே எல்லாத்தையும் தீர்க்க வேண்டாம்னு வந்துட்டேன்!"

எழுத்துலக வேந்தன்

## சுஜாதா

நடந்தார்கள். "நீ வந்த வேலையை விட்டுவிட்டு இப்படி கடைக்குக்கடை அலையப் போறே!"

"சேச்சே அப்படியில்லை. மூணு மணிவரைக்கும் டயம் இருக்கில்ல. கொஞ்சம் இப்படி லோக்கல் கலாசாரத்தையும் தெரிஞ்சுக்கலாம்னு! பீர் சாப்பிடலாமா? ஜெர்மனியில் வந்து பீர் சாப்பிடலேனா வெட்கம்!"

"இல்லை. கொஞ்சம் நடக்கலாம். இப்பதான் சூரியன் கொஞ்சம் சூடு பிடிச்சிருக்கு! அப்பா, வெயில் வருமான்னு இருக்கு."

(தொடர்ந்து வரும்)

---

அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன்

06

இதைக் கேட்ட சதாமின் மனசுக்குள் சோகம் பரவியது. வளைகுடாக் கடலில் ஒட்டோமான் ராஜாவின் போர்க்கப்பல்களை இங்கிலாந்து போர்க்கப்பல்கள் மோதிக் கவிழ்க்கும் துயரக்காட்சி உள்ளுக்குள் விரிந்தது.

மாமா தொடர்ந்தார்...

"இங்கிலாந்தும் ஃபிரான்சும் நம்மை அடிமைப்படுத்தினது பத்தாதுன்னு ஒரே தேசமா இருந்த அரபு பிரதேசத்தை இதுலருந்து அதுவரைக்கும் உனக்கு; அதுலருந்து இதுவரைக்கும் எனக்கு'னு துண்டு துண்டாப் பிரிச்சு பங்கு போட்டுக்கிடுச்சு. 'அரேபியரெல்லாம் ஓரினம்; அவங்க எல்லாரும் ஒரே தேசம்'னு நெனச்சிக்கிட்டிருந்த நம்ம பெரியவங்களுக்கு இப்படி மண்ணையும் மக்களையும் அடிமைப் படுத்தி, சிதறடிச்சதை சகிச்சுக்க முடியல. 'எங்க மண்ணை விட்டு வெளியே போங்கடா ஐரோப்பிய நாய்களே!'னு அவங்க ஆவேசமா போராட ஆரம்பிச்சாங்க".

சதாமின் நரம்பெல்லாம் முறுக்கேறியது. நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"கூறு போட்ட பிரகாரம், ஈராக்கை இங்கிலாந்து எடுத்துக்கிட்டு, அதை தன்னோட நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வந்துச்சு. இதுக்கான அறிவிப்பு வெளியானவுடனே ஈராக்கியர்கள் வெள்ளக்காரங்களை எதிர்த்து கடுமையான போராட்டம் தொடங்கினாங்க. மக்கள் சக்திக்கு முன்னால இங்கிலாந்து அரசு தாக்குப்பிடிக்க முடியல. அதுனால ஈராக்குக்கு சுதந்திரம் கொடுக்கிறதா ஒத்துக்கிட்டாங்க. நீ பெறக்குறதுக்கு அஞ்சு வருஷத்துக்கு முன் ஈராக் சுதந்திரம் அடைஞ்சது. வேதனை என்னன்னா வெள்ளக்காரங்க சுதந்திரம் கொடுக்கிறதா பேர் பண்ணி, நசயவஞ்சகமா, தங்களுக்கு வேண்டப்பட்ட ஃபைசால் ராஜகுடும்பத்திடம் ஆட்சியை ஒப்படைச்சாங்க; நட்புறவு ஒப்பந்தம்கற பேர்ல வெள்ளக்காரங்களுக்குச் சாதகமான- நமக்கு பாதகமான ஒரு ஒப்பந்தத்தை ஃபைசால் ராஜகுடும்பத்தோட போட்டுக்கிட்டு இப்பவும் நேரடியா நம்மை கொள்ளையடிக்கிறாங்க. மறைமுகமா அடிமையா வச்சிருக்காங்க. அவங்களுக்கு என்னிக்கும் மன்னிப்பு இல்ல. வெள்ளக்காரனையும், அவன் ஏஜெண்டுகளையும் பழிவாங்கணும். விரட்டியடிக்கணும். அத்தோட அவங்க பிரிச்சு வச்சிருக்கிற அரபு மண்ணையும், மக்களையும் ஒரே தேசமா திரும்பச் சேக்கணும். இதைச் செய்யாதவன் அரேபியன் இல்லை. இதை தடுக்கிறவன் அரேபியன் இல்லை....!"

இதைச் சொல்லி முடிக்கையில் மாமா மிகவும் உணர்ச்சி வசப்பட்டிருந்தார். அதைப் பார்த்த சதாமுக்கும் ஆவேசம் பொங்கியது. மாமா ஏன் வெள்ளைக்காரர்களை வெறுக்கிறார் என்பது இப்போது ஓரளவிற்கு புரிந்தது. வெள்ளைக்காரர்களையும் அவர்களின் ஏஜெண்டுகளையும் சுட்டுத்தள்ள வேண்டும் என்ற வெறி அவனுக்குள் கிளர்ந்தது.

மாமா இன்னொரு கதை சொன்னார். அது 'ராணுவத்திலிருந்து மாமா டிஸ்மிஸ் ஆன கதை!'

அந்தக் கதைதான் எதிர்காலத்தில் சதாம் சதா நிஜத் துப்பாக்கியும் கையுமாகத் திரிய வேண்டிய வாழ்க்கைப் பாதையை தேர்ந்தெடுக்கச் செய்தது...!



ராஜையா

முதல் மணி இன்னும் அடிக்கவில்லை. வாத்தியார் வரவில்லை. வகுப்பு ஆரம்பமாகவில்லை...

சீக்கிரமாய் பள்ளிக்கு வந்துவிட்ட பிள்ளைகள் ஆட்டமும் அரட்டையுமாய் கும்மாளமடித்துக் கொண்டிருந்தார்கள்.

சதாமும் அவன் நண்பர்களும் வட்டமாய் உட்கார்ந்திருந்தார்கள். 'பெரிய ஆளாய் வளர்ந்த பிறகு என்ன வேலைக்குப் போவது?' என்பது பற்றி விளையாட்டாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"நான் டாக்டராவேன்!" என்றான் ஒருவன்.

"எங்கப்பா இன்ஜீனியர். அவர் மாதிரி நானும் இன்ஜீனியராவேன்!" என்றான் இன்னொருவன்.

"நான் வேலைக்கெல்லாம் போக மாட்டேம்பா. எங்க தோட்டத்துல விவசாயம் பாப்பேன்!" என்றான் மூன்றாமவன்.

சதாம் மௌனமாக இருந்தான்.

"டேய்.. சதாம்.. நீ?"

சதாம் முகம் சட்டென மாறியது. இறுகியது. அழுத்தமாய்ச் சொன்னான். "நான் ராணுவத்துல சேர்ந்து அதிகாரி ஆவேன். துப்பாக்கி பிடிப்பேன்!"

நண்பர்கள் திடுக்கிட்டார்கள். "ஐயையோ.... ஏண்டா உன் புத்தி இப்படி போகுது? வேணாம்டா...! சண்டை போடணும். சுடுபட்டு சாகணும்!"

"யார் என்ன சொன்னாலும் கேக்க மாட்டேன். நான் முடிவு பண்ணிட்டேன். சுட்டுக் கொல்லணும்!"

"யாரை...?"

"நம்ம ராஜாவையும், பிரதம மந்திரியையும்...!"

நண்பர்கள் வாயடைத்துப் போனார்கள். சதாம் எங்கோ பார்த்தபடி ஏதோ சிந்தனையில் சொன்னான்...

"எங்க மாமா அதை செய்யாம விட்டுட்டார். நான் செய்வேன்...!"

திகைப்பிலிருந்து விடுபட்டு நண்பன் கேட்டான். "உன் வாத்தியார் மாமாவா?"

"ஆமா. அவர் இங்கே வாத்தியாரா வர்றதுக்கு முன் ராணுவத்துல அதிகாரியா இருந்தார். வெள்ளக்காரனுக்கு ஏஜெண்டு வேலை பாக்குற நம்ம ராஜா வம்சத்தையும், பிரதம மந்திரி நூரி சேத்தையும் அவருக்குப் பிடிக்காது. அவரை மாதிரி அவங்களைப் பிடிக்காத ராணுவ அதிகாரிங்க அப்ப நிறையப் பேர் இருந்தாங்களாம். அவங்க எல்லாருமா சேர்ந்து ரகசியமா கூடி பேசி 'ராணுவப் புரட்சி' பண்ண முடிவு செஞ்சாங்களாம். 1941ல் ரெண்டாவது உலகப் போர் நடந்தப்ப, சண்டையோட சண்டையாய் இவங்க புரட்சி பண்ணி, அரண்மனையை பிடிச்சுக்கிட்டாங்க. உடனே ராஜ குடும்பமும் பிரதமரும் கையெடுத்து கும்பிட்டு, "எங்களை உயிரோட விட்டுடுங்க. நாங்க வேற நாட்டுக்கு ஓடிப் போறோம்"னு கெஞ்சினாங்களாம். இவங்களும் இரக்கப்பட்டு, அவங்களை உயிரோட வெளி நாட்டுக்கு வெரட்டியடிச்சுட்டு, ரஷீத் அலின்னு ஒருத்தரை நம்ம நாட்டோட ஜனாதிபதியா அறிவிச்சுட்டாங்களாம்.

"இதைப் பாத்துட்டு வெள்ளக்காரன் சும்மா இருப்பானா? திபுதிபுனு நம்ம நாட்டு மேல படையெடுத்து வந்துட்டானாம். எங்க மாமா மாதிரி புரட்சி அதிகாரிகளுக்கும், வெள்ளக்காரனோட ராணுவத்துக்கும் பயங்கர சண்டை நடந்துச்சாம். கடைசியில் புரட்சிக்காரங்களால் தாக்குப் பிடிக்க முடியல. ரஷீத் அலி நாட்டை விட்டே ஓடிட்டார். சண்டையில் ஜெயிச்ச வெள்ளக்காரன் மறுபடியும் தன் கைக்கூலிகளான ராஜ குடும்பத்தையும், நூரி சேத்தையும் கூட்டிட்டு வந்து ஆட்சியில உட்கார வச்சுட்டான். அந்த வெள்ளக்கார ஏஜெண்டுகள் எங்க மாமாவையும், மத்த அதிகாரிகளையும் டிஸ்மிஸ் பண்ணி வீட்டுக்கு அனுப்பி வச்சுட்டாங்க.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# முள் நிலவு



குரோட்டன்ஸ் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த வெங்கடேஷ்வரன் காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழையும் நிலாவைப் பார்த்ததும் கையிலிருந்த பூவாளியை வைத்துவிட்டுக் கேட்டார்.

"என்னம்மா... இன்விடேஷன் கொடுக்கற வேலையெல்லாம் முடிஞ்சுதா..?"

"முடிஞ்சுது மாமா..."

"வீட்டுக்குப் போனியே ஏதாவது ரகளையா?"

நிலா சிரித்தாள். "இல்லாமே இருக்குமா? அம்மாவைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பு அப்பாவுக்குத்தான்."

"கல்யாணத்துக்கு வருவாங்களா?"

"அப்பா வருவார்... அம்மா வர்றது சந்தேகம்தான். சொல்லமுடியாது மாமா, கடைசி நிமிஷத்துல அம்மா மனசு மாறி கல்யாணத்துக்கு வரலாம்."

உள்ளே டெலிஃபோன் அடித்தது.

"யார்ன்னு போய்ப் பாரம்மா..."

"வீட்ல அத்தை இல்லையா மாமா..?"

"பக்கத்துல வெஜிட்டபிள் மார்க்கெட் வரைக்கும் போயிருக்கா..."

நிலா போர்டிகோ படிகளை இரண்டிரண்டாய் தாவிக் கொண்டு உள்ளே போய் கதறிக் கொண்டிருந்த ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ."

ஒரு ஆண்குரல் கேட்டது.

"பேசறது.. யார்.. நிலாவா?"

"ஆமா! நீங்க யாரு...?"

"நான் ப்ருதிவ்..."

"எந்த ப்ருதீவ்...?"

"மறந்துட்டே போலிருக்கு... சென்ட்ரல் மினிஸ்டர் சோமய்யாவோட சன்..."

"ஓ... நீங்களா...? என்ன விஷயம்?"

"வர்ற வெள்ளிக்கிழமை கல்யாணம்னு கேள்விப்பட்டேன். உண்மையா?"

"உண்மைதான்..."

"மொதல்ல உனக்கு என்னோட வாழ்த்துக்கள்."

"தேங்க்ஸ்..."

"ரெண்டாவதா பாராட்டுதல்கள்..."

"எதுக்காக பாராட்டுதல்கள்...?"

"கோடிக்கணக்கான சொத்து, மந்திரியோட ஒரே மகன் இந்த ப்ளஸ் பாயிண்ட்களோடு வந்த என்னை ஒரு குப்பையை மாதிரி ஒதுக்கித் தள்ளிட்டு ஒரு மிடில் கிளாஸ் ஃபேமிலிக்கு கொடுத்த வாக்கை மீறாமே அந்த வீட்டுக்குத்தான் மருமகளா போவேன்னு பிடிவாதம் பிடிச்சு வீட்டை விட்டு வெளியே வந்திட்ட அந்த துணிச்சலுக்காக..."

"தேங்க்ஸ்..."

"பணம், பட்டம், பதவி இந்த மூணுக்கும் அடிமையாகிக்கிடக்கிற ஜனங்களுக்கு நடுவுல நீ... மட்டும் எப்படி இவ்வளவு வித்தியாசமாயிருக்கே? எனக்கு ஆச்சரியப்பட்டு ஆச்சரியப்பட்டு அலுத்துப் போச்சு..."

"நீங்க இப்படிப் பாராட்டிப் பேசறது உண்மையிலேயே உங்க மனசிலிருந்துதான் வருதா...! இல்ல தோத்துட்டோமேங்கிற விரக்தியில வெறும் உதட்டிலிருந்து வருதா...?"

"நோ....நோ... சர்ட்டன்லி நாட்...! உன்னோட கல்யாண விஷயத்துல நீ இவ்வளவு உறுதியா இருக்கிறதைப் பார்த்துட்டு நான் பின் வாங்கிட்டேன். இந்த உலகத்துல எதையுமே விலை கொடுத்து வாங்கலாம். ஃபோர்ஸ் பண்ணியாவது வாங்கிடலாம்... ஆனா ஒரு பொண்ணோட மனசை அப்படி வாங்க முடியாதுன்னு இப்ப புரிஞ்சுகிட்டேன்."

"இதை என்னோட அம்மாவுக்கு ஃபோன் பண்ணி சொல்லிட்டீங்களா....?"

"இன்னும் சொல்லலை..."

"சொல்லிடுங்க..."

"அதை தத்தாத்ரேயா சொல்லிடுவார். நான் இப்போ டெல்லிக்கு கிளம்பிட்டிருக்கேன். உன்னோட கல்யாண நாளன்னிக்கு என்னோட க்ரீட்டிங்க்ஸ் டெலிகிராம் வரும்... இப்போ என்னோட அட்வான்ஸ் கங்கிராட்ஸ்."

"தேங்க்யூ..."

நிலா ரிஸீவரை வைத்தபோது வெங்கடேஷ்வரன் உள்ளே வந்தார்.

"ஃபோன்ல யாரம்மா?"

"எனக்கு திடீர் மாப்பிள்ளையாக நினைச்ச ப்ருதிவ்..."

"அடடே... அன்எக்ஸ்பெக்ட்டட் ஃபோன் கால். என்ன விஷயமாம்...?"

"ஒரு பொண்ணோட மனசை பணத்தால விலை குடுத்து வாங்க முடியாதுன்னு புரிஞ்சுக்கிட்டாராம். என்னோட கல்யாணத்துக்கு வாழ்த்துக்களைச் சொன்னார்..."

வெங்கடேஷ்வரன் சிரித்தார்.

"ஒரு அரசியல்வாதியின் மகனோட வாழ்த்துக்களை நம்ப முடியாதே...?"

"அதையும் சொல்லிக்காட்டினேன். வாழ்த்துக்கள் வெறும் உதட்டிலிருந்து வருதா.. இல்லை உள்ளத்திலிருந்து வருதான்னு கேட்டேன். அது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்தானாம். ஆள் இப்போ டெல்லி கிளம்பி போயிட்டிருக்கார்..."

"எதுக்கும் நாம கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்துடறது நல்லதம்மா... அவன் அரசியல்வாதியோட புள்ளை. எந்த நேரத்துல விஷத்தைக் கக்குவான்னு தெரியாது..."

***

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஷ்குமார்
எழுதியுள்ள
விறு விறு காதல்கதை....
உங்கள் இதயத்தில்
இந்தக் கதையின் நாயகி
'நிலா'வுக்கும்
இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!

நிலாவைப் பற்றிய நினைப்புக்கள் சட்டென்று வந்துபோக-சிவப்பு விளக்கு இரத்தப் பொட்டாய் மின்னிய சிக்னலில் ஸ்கூட்டரை நிறுத்தினேன்.

எனக்கு முன்னாலும் பின்னாலும் பச்சைக்காகக் காத்திருந்த வாகனங்கள் புகை கக்கி உறுமிக்கொண்டிருந்தன. எனக்கு வலது பக்கத்தில் ஸ்கூட்டரில் இருந்த சுடிதார் அணிந்த கல்லூரி மாணவி ஒருத்தி என்னை அடையாளம் கண்டுகொண்டு புன்னகைத்தாள்.

"ஸார்...நீங்க...ரைட்டர்தானே...?"

"ஆமா..."

"நான் உங்க ஃபேன் ஸார்..."

"தேங்க்ஸ்.."

"ஸார் இப்ப வந்திட்டிருக்கிற 'முள் நிலவு' தொடர்கதையை ரெகுலரா படிச்சுட்டு வர்றேன்."

"அப்படியா...! சந்தோஷம்...!"

"கதையில வர்ற நிலாவுக்கு ஏன் ஸார் மனநிலை பாதிக்கப்பட்டது? அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியான சம்பவம்தான் என்ன?"

"அது...வந்து..."

நான் சொல்ல முயற்சிப்பதற்குள் சிக்னல் பச்சையாய் ஒளிர்ந்தது.

பின்னால் வாகனங்கள் அலறின.

"அந்த அவஸ்தையை சொல்லிட்டிருக்க முடியாதம்மா...நீயே படிச்சுக்க..." அவளைப் பார்த்து புன்னகைத்து விட்டு நான் ஸ்கூட்டரை விரட்டினேன்.

மனசுக்குள் மறுபடியும் நிலா வந்து நின்றாள்.

அவளைத் தாக்கிய அந்த அதிர்ச்சியான சம்பவம் நிகழ்ந்த அந்தப் புதன் கிழமை என் நினைவை நிரட-

மனசு பச்சைப் புண்ணைப் போல் வலித்தது.

அந்தப் புதன்கிழமை.

..........



சிவராஜன் அந்தப் புதன்கிழமையின் விடியற்காலை வேளையில் பாக்யத்திடம் கெஞ்சிக் கொண்டிருந்தார்.

"இதோ பார் பாக்யம்...! இனிமேலும் நீ வீம்பு, பிடிவாதம் பிடிச்சிட்டிருக்கிறது சரியில்லை...! அந்த மந்திரி சோமய்யா வீட்டு சம்பந்தம்தான் இல்லேன்னு ஆயிப் போச்சு... மந்திரி பையனே உனக்கு ஃபோன் பண்ணி

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஷ்குமார்

உங்க பொண்ணு விருப்பப்படி நடந்துக்கோங்கன்னு சொல்லிட்டு போயிட்டான்...! நிலாமேல இருக்கிற பழைய கோபத்தையெல்லாம் மூட்டை கட்டி வெச்சுட்டு என்கூட ஏர்போட்டுக்கு கிளம்பு...! ஏழுமணிக்கு ஃப்ளைட் லேண்டாயிடும்... இப்போ மணி அஞ்சரை. லேட் பண்ணாமே புறப்பட்டா... ஆறரை மணிக்கெல்லாம் ஏர்போர்ட் போய்ச் சேர்ந்துடலாம்..."

பாக்யம் கட்டிலில் சாய்ந்து கொண்டு முகத்தை இறுக்கமாய் வைத்தபடி சொன்னாள்.

"நான் வரலை..."

"நீ கோபப்படறது சரியில்லை..."

"உங்க மக பண்ணிட்டுப் போனது மட்டும் சரியா?"

"அவ கொஞ்சம் எமோஷனல் டைப்...! உன்னை வழிக்குக் கொண்டு வரணும்ங்கிறதுக்காக அப்படி ஒரு முடிவு எடுத்துட்டா...!"

"அதுக்காக வீட்டை விட்டு போயிடறதா?"

"தப்புதான்...! ஏதோ போயிட்டா...! அதையே நினைச்சு ஃபீல் பண்ணிக்காம கிளம்பு. என்ன இருந்தாலும் நிலா நம்ம பொண்ணு..."

"நீங்க என்ன சொன்னாலும் என்னோட மனசு ஆறலைங்க...! பெத்து வளர்த்து ஆளாக்கிய நம்மளைக் காட்டிலும் ஒருநாள் வந்து பார்த்துட்டுப் போன மாப்பிள்ளை வீட்டுக்காரங்க அவளுக்கு எவ்வளவு உயர்வாப் போயிட்டாங்க... பார்த்தீங்களா...?"

"எல்லாப் பெண்களுமே அப்படித்தான் பாக்யம். ஒரு பெண்ணுக்குக் கல்யாணத்தைப் பேசி முடிச்சிட்டாலே அவளோட மனசு பெத்தவங்களை ஒரு பக்கமா தள்ளிவைச்சுட்டு மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தவங்களையே நினைச்சுட்டிருக்குமாம்... பெண்களுக்குள்ள இயல்பான மனசு இது..."

"யாரோ எப்படியோ இருந்துட்டுப் போகட்டும். எம்பொண்ணு அப்படி இருக்கக் கூடாது.."

"அது என்ன நியாயம் பாக்யம்...?"

"நீங்க பாருங்க... நீங்க ஆயிரம்தான் சமாதானம் சொன்னாலும் அவ பண்ணினது சரியான காரியமே இல்லை. ஏர்போர்ட்டுக்கு நீங்க மட்டும் போயிட்டு வாங்க... நான் வரலை..."

"ஏர்போர்ட்டுக்கு வரமாட்டே. சரி..! நாளைக் கழிச்சு மறுநாள் ரத்தின விநாயகர் கோயில்ல கல்யாணம். கல்யாணத்துக்காவது வருவியா... மாட்டியா...?"

"கல்யாணத்துக்கு இன்னும் ரெண்டு நாள் இருக்குல்ல. பார்த்துக்கலாம்..."

"பாக்யம்! நீ ஏர்போர்ட்டுக்கு வரலைன்னா நிலாவோட மனசு மட்டும் இல்லை... சம்பந்தியோட மனசும் கவலைப்படும்...."

"எம்மனசோட கவலையைப் பத்தி அவங்களுக்குத் தெரியுமா...?"

சிவராஜன் மேற்கொண்டு பேச வாயை அசைத்த விநாடி... டெலிஃபோன் கூப்பிட்டது.

போய் ரிஸீவரை எடுத்தார்.

மறுமுனையில் நிலா பேசினாள்:

"அப்பா! நீங்களும் அம்மாவும் ஏர்போர்ட் புறப்பட ரெடியாயிட்டீங்களா...?"

"நான் ரெடி...! உங்கம்மா தான்...

"அம்மாவுக்கு இன்னமும் என்மேல இருக்கிற கோபம் தீரலை போலிருக்கு.. ரிஸீவரை அம்மா கிட்ட கொடுங்கப்பா, நான் பேசறேன்..."

சிவராஜன் மனைவியை ஏறிட்டார். "பாக்யம்! நிலா உன் கூட பேசப் பிரியப்பட்டு..."

"எனக்குப் பிரியமில்லை..."

"பாக்யம்...! என்ன இது சின்னப்பிள்ளைத்தனமா பேசிட்டிருக்கே...? அவ யாரு..? உன்னோட பொண்ணு...! அவளை ஏதோ பரம எதிரி மாதிரின்னு நினைச்சு பிஹேவ் பண்ணிட்டிருக்கிறது கொஞ்சமும் சரியில்லை... வா...வந்து..பேசு.."

"மாட்டேன்...! என்னைத் துச்சமா நினைச்சு வீட்டை விட்டுப் போனவகிட்ட எனக்கென்ன பேச்சு..? நான் ஒண்ணும் ஏர்போர்ட்டுக்கு வரப்போறதில்லை. உங்களுக்குப் பிரியம் இருந்தா போய்ட்டு வாங்க...! நான் வாசல் தெளிச்சு கோலம் போடப்போறேன்..."

பாக்யம் சொல்லிவிட்டு விருட்டென்று அறையை விட்டு வெளியேறிவிட, சிவராஜன் உதட்டை ரிஸீவருக்குக் கொடுத்தார்.

"அம்மா...நிலா...!"

"என்னப்பா...! அம்மாவுக்கு என்கூட பேச பிரியமில்லை போலிருக்கு..."

"அது...வந்தும்மா...!"

"நான் புரிஞ்சுக்கிட்டேன்...! அம்மாவுக்கு என்மேல இருக்கிற கோபம் தீர்றதுக்கு இன்னும் கொஞ்ச நாளாகலாம்... பரவாயில்லேப்பா... நான் அதுவரைக்கும் வெயிட் பண்ணிட்டிருப்பேன். நீங்க ஏர்போர்ட்டுக்கு வர ஒண்ணும் தடையில்லையே...?"

"எனக்கு அவ எந்தத் தடையும் போடல்லேம்மா! இதோ... நான் இப்போ புறப்பட்டு வந்துட்டேயிருக்கேன்..."

"நாங்களும் அங்கே கிளம்பிட்டோம்..."

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

---

# கவியரசுவின் சுயசரிதை 14

கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....

திருச்சி நகரத்தில் கொடிகள் அரைக் கம்பத்திலேயே பறந்ததாகவும், இன்னோர் ஊரில் அனுதாபத் தீர்மானமே நிறைவேற்றப்பட்டதாகவும் செய்திகள் வந்திருந்தன.

அவனைச் சுற்றிலும் மற்ற கைதிகள் உட்கார்ந்து ஆவலோடு பத்திரிகைகள் படித்தனர்.

சுமார் பதினொரு மணிக்கெல்லாம் குறிப்பாகச் சில பார்வையாளர்களை மட்டுமே பொலிஸார் அனுமதித்தார்கள்.

அவனுடைய சகோதரரும், மற்றும் சில நண்பர்களும் வந்திருந்தார்கள்.

அந்த நேரத்தில் அவன் தைரியமாகத்தான் இருந்தான்.

தான் நன்றாக இருப்பதாகவே அவர்களிடமும் சொன்னான்.

அவர்கள் போய்விட்டார்கள்.

அன்று மாலையே லால்குடி சப்ஜெயிலுக்கு அந்தக் கைதிகள் மாற்றப்பட்டார்கள்.

சிறைச்சாலையின் உட்பகுதியை அன்றுதான் அவன் முதன் முதலாகப் பார்க்கிறான்.

அங்கே போய்ச் சேர்ந்தபோது மணி ஐந்து!

ஒரு மணி நேரம் நண்பர்களோடு சப்ஜெயிலைப் பற்றி வேடிக்கையாகத்தான் பேசிக்கொண்டிருந்தான்.

லால்குடி சப்மாஜிஸ்டிரேட்தான் ஜெயிலுக்கும் அதிகாரி.

அவர் இளைஞர்! மிகவும் நல்லவர்!

ஆறுமணிக்கெல்லாம் அவர் சிறைச் சாலைக்கு வந்தார்.

"அறையிலே நீங்கள் தனியாக இருப்பீர்களா? துணைக்கு யாரும் வேண்டுமா?" என்று கேட்டார்.

"தனியாகவே இருப்பேன்!" என்று தைரியமாகவே சொல்லிவிட்டான்.

எல்லோரையும் 'லாக்-அப்' பண்ணும்படி அங்கிருந்த வார்டரிடம் சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

அவன் ஓர் அறைக்குள் நுழைந்தான்.

கதவு பூட்டப்பட்டது.

அவ்வளவுதான் தாமதம். அதுவரை தைரியத்தோடு இருந்த அவன் 'ஓ' என்று அழுதுவிட்டான்.

அறைச் சுவரைப் பார்த்தான்.

பழைய கைதிகளெல்லாம் அந்தச் சுவர்களிலே பெண் சித்திரங்களை வரைந்திருந்தார்கள்.

ஒவ்வொன்றும் அவனுக்குப் பயங்கரமாகத் தோன்றிற்று.

உடனே சத்தம் போட்டு வார்டரைக் கூப்பிட்டான்.

தனக்குத் துணைக்கு அரியலூர் வடிவேலுவை அனுப்பும்படி கேட்டான்.

வடிவேலு வந்து சேர்ந்தார்.

அவன் மனம் கொஞ்சம் தைரியமடைந்தது.

அரியலூர் வடிவேலு ஒரு விவசாயி! சொந்தமாக நிலபுலன்கள் உள்ளவர். நல்ல குடும்பத்தில் பிறந்தவர். அப்போது அவருக்கு இருபத்திஐந்து, இருபத்திஆறு வயதுதான் ஆகி இருந்தது.

ஏற்கனவே ஒருமுறை அவர் சிறை சென்றிருந்தார்.

நாரணமங்கலத்தில் 144 தடையுத்தரவை மீறி ஆறுமாத தண்டனை அடைந்தவர்களில் அவர் முக்கியமானவர்.

(பின்னாளில் அவன் கழகத்தைவிட்டு விலகியபோது, அவரும் விலகி த.தே.கவுக்கு வந்து, த.தே.க. அபேட்சகராக அரியலூர்த் தொகுதியில் தேர்தலுக்கு நின்றார். வேலூர் சதாசிவமும் விலகி வந்தவர்களில் ஒருவர்)



வடிவேலுவுக்கு சிறை விவகாரம் பழக்கப்பட்டதாகவே இருந்தது.

இரவு வெகு நேரம் வரை வடிவேலு அவனுக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்தார்.

மறுநாள் மாலை நண்பர்கள் சி.பி. சிற்றரசு, டி.கே. சீனிவாசன் முதலியோரும் மற்றும் சிலரும் அவனைப் பார்க்க வந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும் பழையபடியும் அழுது விட்டான்.

அவர்களெல்லாம் அவனுக்கு வெகுவாக தைரியம் சொன்னார்கள்.

போராட்டம் நடந்த அன்று அவர்களிலே பலர்- சி.பி. சிற்றரசு உட்பட- ஊரிலேயே இல்லை.

கைது செய்யும் கட்டம் முடிவடைந்த பிறகுதான் அவர்கள் தலைகாட்டினார்கள்.

தாங்கள் வெளியிலிருக்கிறோம் என்ற தைரியத்தில் அவர்கள் அவனுக்குத் தைரியம் சொன்னார்கள்.

அவனைக் 'கோழை' என்றார்கள், தலைமறைவாக இருந்து தப்பிய அந்த வீரர்கள்.

சரியாகப் பதினைந்து நாட்கள் 'ரிமாண்டில்' அவனும் நண்பர்களும் இருந்தார்கள்.

அவனை முதல் எதிரியாக வைத்து இருபத்தி நான்கு பேர்மீது கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

நான்கு கிரிமினல் செக்ஷன்களிலும், இரண்டு இரயில்வே செக்ஷன்களிலும் வழக்குத் தொடரப்பட்டது.

பதினைந்தாவது நாள் சொந்த ஜாமீனில் அவர்கள் வெளியே விடப்பட்டார்கள்.

வழக்கு வாய்தா போடப்பட்டது.

சுமார் நான்கு மாத காலம் அந்த வழக்கு நடந்தது.

அந்த வழக்கு முடிவதற்கு முன்பே மூன்று மாத தண்டனையை அனுபவித்து விட்டு கருணாநிதி, இராம சுப்பையா குழுவினர் வெளியே வந்துவிட்டார்கள்.

வழக்கு நடந்த நான்கு மாதங்கள் அவனுக்குத் துயர் நிறைந்த மாதங்களாகும்.

அவனது 'ரிமாண்ட்' காலம்வரை கைது செய்யப்படாமல் இருந்த அன்பில் தர்மலிங்கமும் இந்த வழக்கில் எதிரியாகச் சேர்க்கப்பட்டிருந்தார்.

நான்கு மாதகாலம் அவர்கள் பட்டபாடு சொல்லும் தரமன்று!

கையிலே காலணா இல்லாத நிலையில் வாயும் வயிறும் காய்ந்த வண்ணம், கோர்ட் வாசலில் அவனும் நண்பர்களும் காத்துக் கிடப்பார்கள்.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# அவன் வருவானா....?

விடியற்காலை ஐந்துமணி. தொய்ந்துபோன கட்டிலில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார் சிவநாதன். நாட்பூரா இருமிய களைப்பு அவர் முகத்தில் தெரிந்தது.

கமலம் அவரையே உற்றுப்பார்த்தாள். சிவநாதன் முனகியபடி முழங்கால்வரை மூடியிருந்த சாயம்போன சாறன் துண்டை ஒரு காலால் உதைத்துத் தள்ளினார். வலது முழங்காலின் கீழ் சிவநாதனுக்குக் காலில்லை என்பதை அவர் மனைவி கமலத்தால் நம்ப முடியவில்லை.

மெதுவாக அவர் முழங்காலைத் தடவிய போது அவள் விரல்கள் நடுங்கின. கண்களில் இருந்து வடிந்த நீர் கணவனின் தொடையைத் தொட்டு வழிந்தது. சிவநாதனின் ஒட்டியுலர்ந்த உடம்பு லேசாக அசைந்தது.



தலையை நிமிர்த்திய கமலம், "என்னங்க ஏதும் குடிக்கிறீங்களா?" என்றாள்.

"ஒண்ணும் வேணாம். நீ இன்னமும் முழிச்சிற்றுத்தான் இருக்கிறியா? என்னால உனக்கு எவ்வளவு கஷ்டம்?" வார்த்தைகள் கஷ்டப்பட்டு வெளியேறின. கமலம் மெளனமாய் அழுதாள்.

"சுரேஷ் வருவானா கமலம்?" சிவநாதனின் கேள்வி அவளைக் கெஞ்சியது.

"வருவான்; நீங்க தூங்குங்க." எங்கோ பார்த்தபடி கமலம் கூறினாள். சிவநாதனின் விழிகள் மூடின.

சில கணங்கள் அந்தப் பழைய நினைவுகளில் தோய்ந்து போனாள் கமலம்.

**அ**ப்போது கமலத்துக்கு வயது பதினெட்டு. அவள் அழகி என்று சொல்லமுடியாவிட்டாலும் ஏதோ ஒரு கவர்ச்சி அவள் முகத்தில் கோலம் போடுவதை யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. கமலம் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளி. படித்துக் கொண்டிருக்கும்போதே 'கலைச் செல்வி' என்று முத்திரை குத்தப்பட்டவள். 'அம்பிகா' மண்டபத்தில் 'சீதனம் வேண்டும்-வேண்டாம்' என்ற விவாதம் சுவாரஸ்யமாகச் சூடுபிடித்தது.

கமலம் காரசாரமாக விவாதத்தை முன்னெடுத்துப் பேசினாள். இறுதியில் உணர்ச்சி வசப்பட்டு, "சீதனம் இல்லாமல் திருமணம் செய்ய இன்று எத்தனை ஆண்கள் முன்வருவார்கள்?" வினாவை வீசி விட்டு உட்கார்ந்தாள் கமலம்.

சபையில் சலசலப்பு. "இதோ நான் இருக்கேன். நீங்கள் என்னை முடிப்பீர்களா?" பதிலைக் கேள்வியாக்கியவர் வேறு யாருமல்ல சிவநாதனே. கரகோஷமும் சிரிப்பொலியும் மண்டபத்தை நிறைத்தது. இந்த நிகழ்வே கமலத்தையும் சிவநாதனையும் கணவன்-மனைவியாக ஆக்கியது.

மூன்றாண்டுகளுக்குப் பிறகு பிறந்தவன் சுரேஷ். பாசத்தையும் பணத்தையும் கொட்டி வளர்த்தார்கள் கமலமும் சிவநாதனும். அவனைப் படிக்க வைத்து ஆளாக்கி உத்தியோகமும் வாங்கிக்கொடுத்தார் சிவநாதன். அப்போதுதான் அந்தத் துயர சம்பவம் தலைகாட்டியது. தலைநகரில் நடந்த குண்டு வெடிப்பொன்றில் சிவநாதனின் கால் துண்டிக்கப்பட்டது. கமலம் கதறி அழுதாள். காசைக்கரைத்தும் காலைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

"அப்பா உங்களுக்கு நானிருக்கேன். கால்போனதைப் பற்றிக் கவலைப்படாதீங்க!" சுரேஷ் தேற்றினான். அவனுடைய வார்த்தைகளில் ஆறுதலடைந்தாள் கமலம்.

மூன்று மாதங்கள் நகர்ந்தன... அலுவலகத்திலிருந்து வந்த சுரேஷ் தான் மனேஜரின் மகள் ஷாலினியை கல்யாணம் செய்யப் போகும் செய்தியை அவசரமாக வெளியிட்டான்.

"என்ன அறிவிக்கிறியா?" தன் முழுப்பலத்தையும் கூட்டித் தன் கொதிப்பைக் காட்டினார் சிலநாதன்.

"டேய் வேலயில சேந்து மூணு மாசத்ல உனக்குக் கல்யாணம் இப்ப அவசரமா?

ரூபராணி

உனக்கு அப்பாட நெலம தெரிஞ்சுமா இப்பிடி...?" கமலம் சொல்லி முடிக்குமுன் சுரேஷ் குறுக்கிட்டான்.

"அம்மா! பெரிய இடத்துப்பெண் ஷாலினிய முடிச்சா வெளிநாடு போகச் சான்ஸ் இருக்கு."

"போடா போ!" சிவநாதனின் வேதனையில் வார்த்தைகள் வெடித்தன. கமலம் பொங்கி வந்த கண்ணீரைத் தன் கணவனை எண்ணி அணைபோட்டு விட்டாள். சுரேஷ் அன்று போனவன் இன்றுவரை வீடு திரும்பவில்லை. அவன் கலியாணம் முடித்த செய்தியை யாரோ கமலத்தின் காதில் போட்டார்கள்.

சிவநாதனின் உடல் நிலை மோசமடைந்தது. அவருடைய வாய் "சுரேஷ் வருவானா?" என்று அடிக்கடி முணுமுணுக்கும். கமலம் அவருக்கு முழு நேர வேலைக்காரியாக மாறிப்போனாள்.

"**மாமி**... அப்பா இந்தக் கடிதத்த உங்க கிட்ட குடுக்கச் சொன்னார்." பக்கத்து வீட்டுக் காயத்திரியின் குரல் கமலத்தின் நினைவுகளைக் கலைத்தது. ஆச்சரியத்தில் கண்களை அகல விரித்தாள் கமலம். அவசரமான கிறுக்கல்கள், அது சுரேஷிற்கு சொந்தமானது.

அம்மா,

நான் ஹிக்கடுவையில் இருந்து இதை எழுதுகிறேன். அப்பா எப்படியிருக்கிறார். நானும் என் மனைவி குடும்பத்தினரும் நாளை அவ்வழியாக வரும்போது உங்களையும் அப்பாவையும் பார்க்க விரும்புகிறேன். அப்பாவை நன்றாக உடுத்தி, படுக்கை அறை, எல்லாவற்றையும் சுத்தமாய் அழகாய் வைத்திருங்கள்.

-மகன் சுரேஷ்.

கமலம் ஒரே பாய்ச்சலில் கணவனிடம் சென்று... "என்னங்க...என்னங்க... உங்க மகன் சுரேஷ் உங்களப் பார்க்க நாளைக்கி வாறானாம்..." சிவநாதனின் கைகளைப் பிடித்து ஆவலுடன் அசைத்தாள். ஜில்லிட்டுப் போயிருந்த அந்தக் கைகள் கமலத்தின் பிடியிலிருந்து நழுவின.

மறுநாள் சுரேஷ் வரும்போது சிவநாதனின் உயிரற்ற உடல் அழகாக உடுத்தி அசைவற்றுக் கிடந்தது. ▣

# சொந்த மண்!

சிவசம்பு மாஸ்ரர் கொழும்பிலிருந்து நேற்றுத்தான் வந்தவர். அவருக்கு பலாலி-யாழ்ப்பாணப்பாதையை பார்த்ததும் வன்னிக் காடுகள்தான் நினைவில் வந்தது. இடிந்த கட்டடங்கள், இடிபாட்டுக்கிடையில் கோவில்கள் எல்லாம் மனதில் ஒரு தெளிவின்மையைப் பிறப்பித்தது. பலாலிப் பாதையின் அன்றைய கோலமும் இன்று மரணித்துக் கொண்டிருக்கும் அந்த நிலத்தையும் எண்ணி மனம் வருந்தினார்.

பத்து வருடங்களுக்கு முதல் யாழ்ப்பாணத்தை விட்டு கொழும்புக்குச் சென்ற அவர் தனது மகனின் குடும்பத்தோடு சென்று வாழ்ந்தார். இப்போ இளைய மகனோடு தனது சொந்தவீட்டில் தங்கிச் செல்ல வந்துள்ளார்.

சிவசம்பருக்கு மனைவி இறந்து பன்னிரண்டு வருடங்களாகிவிட்டதுன. அதனால் கொழும்பும் ஊரும் ஒன்றுதான்! தலைமையாசிரியர் என்ற பெயரை 'அதிபர்' என மாற்றிய காலத்தில் பக்கத்து கிராமத்தில் ஆசிரியராகி அதிபராகத் தரமுயர்ந்து ஓய்வுபெற்ற சிறந்த தமிழாசிரியன்.

அதிபர் என்ற பதம் அவரது பெயரோடு ஒட்டவில்லை. 'மாஸ்ரர்' என்ற பெயரே சேர்ந்துகொண்டது.

செம்மண்கள் காலில் படிந்திருந்ததை மாஸ்டர் அவதானிக்கிறார். இது அவருக்கு பெரும் மகிழ்ச்சி. சொந்தமண் காலில் ஒட்டியிருப்பதுதான்! ஜில்லென்று காற்று வீசுகிறது. இனிமையான சுகந்தம்! சொந்த மண், சுகமான காற்று இவற்றோடு கொழும்பு நெருங்குமா? கொழும்பில் காற்றுவாங்க காலிமுகத்திடல். அதுவும் நமக்கு இப்போ சாத்தியமற்ற நிலை! காசுகொடுத்துத்தான் காற்று வாங்கவேண்டும். பாதையில் சென்றால் பல அசெளகரியங்கள்! மழைபெய்தால் அரைக்குமேல் வரும் வெள்ளம்; சகதிகள் இது எல்லாம் கொழும்பு நரகத்தின் காலதரிசனங்கள்!

மாஸ்ரரின் உற்ற நண்பன் தம்பியையா சுகமில்லாமல் இருக்கிறார் எனக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்க மனம் எண்ணியது.

தம்பியையா ஒரு கணக்குமாஸ்ரர். பல மாணவர்களை பத்தாம் ஆண்டு பரீட்சைக்கு சித்தியடையவைத்த திறமை அவருக்குண்டு. கணக்கில் கஷ்டப்பட்டு சித்தியடைந்த பலர் பட்டதாரியாகி இன்று கணக்கும் ஒரு பாடமாகப் படிப்பிக்கிறார்கள். பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து தனது வாத்திச் சம்பளத்தில் பெரிய குடும்பத்தையே கொண்டிழுத்தவர். மாணவர்களிடம் பணம் பறிக்கும் எண்ணம் அவரிடம் இருந்ததில்லை. நல்ல மாணவர்களை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களுள் அவரும் ஒருவர்!

தம்பியையா மாஸ்ரரின் வீட்டு வாசலுக்கே சிவசம்பு மாஸ்ரர் காலடி பதித்துவிட்டார்! ஆத்ம நண்பன், ஒன்றாக கற்பித்தவர்கள் அல்லவா? தம்பியையா மாஸ்ரர் படுத்திருக்கிறார். கண்கள் கற்பூரநிறத்தில் படர்ந்து வட்டமாக தெரிகின்றன. "மாஸ்ரர்!" என்ற சிவசம்பரின் குரல் தம்பியையா மாஸ்ரருக்குப் புரிகிறது. மெல்லிய குரலில் "எப்ப... வந்தனீங்கள்?" என்கிறார் தம்பியையா. இருவரும் கதைகளைப் பரிமாறுகின்றனர்.

"எனக்கு கண்ணும் தெரியாது. அதிகம் பேசவும் முடியாது. நோய்வாய்ப்பட்டுப் போனன். என்ரை சரஸ்வதியும் என்னைப் பிரிந்து ஒருவருஷமாச்சுது. எனி என்ன வயசும் போட்டுது. இன்றோ நாளையோ என்றுதான் இருக்கிறன்..." என்று மெதுவாக தம்பியையா மாஸ்ரர் சொல்கிறார்.

"இளையமகள் ரீச்சர் கட்டிவிட்டாவே?" -சிவசம்பர்!

"ஓம் இப்ப ஒருமாதம்தான் வரும். மாப்பிள்ளை வெளிநாடு. அவரை வழியனுப்ப போய்விட்டா! நாளைக்கு வாறாவாம்!"

"அவ வந்தா என்றால் கவலை இல்லை." -தம்பியையா மாஸ்ரர்.

சிவசம்பு மாஸ்ரர் தம்பியையா மாஸ்ரரிடம் இருந்து பிரிய முதல் "ஆறுதலாகப் பிறகு வருகிறேன்!" எனக்கூறிச் செல்கிறார்.

வீட்டிற்கு சென்றவரை மகனும், மருமகளும் மத்தியானச் சாப்பாட்டிற்கு அழைக்கின்றனர். எல்லோரும் ஒன்றாக இருந்து உணவு உட்கொள்ளுகின்றனர். நல்ல சுவையான சாப்பாடு.

"ஐயா கொழும்போ, இதோ பிடிச்சிருக்கு?" என்ற மகனின் கேள்விக்கு:

"கொழும்பிலை எண்டால் எல்லா வசதிகளும் இருக்கு. இங்க எல்லாம் விலை! ராசன் இங்குதான் எல்லாம் சுவை. தண்ணீர் சுவையானது. அப்ப சாப்பாடும் ருசிதானே! பனம் பண்டங்கள் எல்லாம் உடம்புக்குப் பலம்தானே! இங்குள்ள பாண்கூட வலு விசேஷம். மாத்தறையான் வந்து படிச்சுக் கொண்டு போக வேண்டும்! அந்தமாதிரிப் பாண். உப்பிடியெண்டால் பாண் கொழும்பில் கிடவாது." என்கிறார் சிவசம்பர்.

"ஒரு நாளைக்கு கூழ் காச்சுவம்!" மருமகள் கூறுகிறாள்.

"அப்பப்பா எங்களுக்கு தேவாரம் பண்ணோடு சொல்லித் தாங்கோ. போன வருஷம் நாங்கள்தான் முதலாவதாக வந்தனாங்கள்!" என்ற பேரப்பிள்ளைகளுக்கு தான் பண்ணிசை சொல்லித் தருவதாகக் கூறுகிறார். சிவசம்பர் கோவில்களில் தேவாரம் பாடினால் மக்கள் உருகி விடுவர். அவரைப்



போலத்தான் பேரப்பிள்ளைகளும் நன்றாகப் பாடுவார்கள்!

கொழும்பால் வந்து ஐந்து நாட்களாச்சு! இனசனங்களின்ரை சந்திப்பு பெரும் திருப்தியாக இருந்தது. வசதிவாய்ப்புடன் வாழ்பவர்களும்; மிகவும் சாதாரண நிலையில் வாழ்பவர்களும் சந்தோஷமாகவே வாழ்கின்றனர். ஒருநாள் உணவுக்கு கஷ்டங்கள் இருந்தாலும்-அன்றையத் தேவைக்கு உழைத்து சீவியத்தை போக்காட்டுகிறார்கள்! சொந்த வீடு, சொந்த உழைப்பு-மகிழ்ச்சி சிறிதாவது இருக்காதா?

இரவு நேரம் எட்டுமணி கடந்திருக்கும், சிவசம்பரின் வீட்டில் கேற்றில் யாரோ தட்டும் சத்தம் கேட்கிறது. நாயும் குரைக்கிறது. சிவசம்பரின் மகன் நாயைக் கலைத்துவிட்டு யார் தம்பி என்று விசாரித்தார்! தம்பியையா மாஸ்ரர் இறந்துவிட்டார் என்ற செய்தியை தாங்கள் சொல்லவந்ததாகக் கூறிச் சென்றுவிட்டனர்.

இந்தச் செய்தி காதில் விழுந்த சிவசம்பர் அரவம் தீண்டியவர் போலானார். ஒரு வயது; ஒரே சேவை, உயர்ந்த நட்பு. இவற்றை விட தம்பியையா மாஸ்ரர் கடைசியாகச் சந்தித்தபோது சொன்ன வசனம் மனதில் இழையோடுகிறது. 'இன்றோ நாளையோ' என்பதுதான்! "நாளைக்குப் போவம்!" என்றவர்! படுக்கையில் சரிந்துவிட்டார்!

அடுத்த நாள், தம்பியையா மாஸ்ரரின் இறுதிச் சடங்கில் சிவசம்பர் கலந்து கொள்கிறார். நீட்டு வாங்கில் அதில் வெள்ளை நஷனல், வெள்ளை வேட்டி சால்வை போர்த்தி திருநீற்றுப் பூச்சுடன் தம்பியையா மாஸ்ரர் என்பவரின் பிரேதம் மரத்துப் போய்க் கிடக்கிறது. அவரது மக்கள் முகம் சோர்ந்து மூலையில் தூங்கிக்கொண்டிருக்கின்றனர். இளைய மகள் அழுகிறாள்!

"ஐயா வனஜா நல்லா இருக்கிறாள், என்று அம்மாட்டை சொல்லணை...." அது அவளின் தற்கால ஒப்பாரி. ஒப்பாரி சொல்வதற்கு பெண்கள் இல்லை. அவர்கள் எல்லோரும் பழசுகளாகி பாடையில் சென்றுவிட்டார்கள்! இருப்பவர்களும் உயிரைக் கையில் பிடித்துக் கொட்டனுடன் உலாவுகிறார்கள்.

பிரேத வண்டில் வாசலில் வந்து நிற்கிறது. தம்பியையாவின் பூதவுடலை மயானத்திற்கு எடுத்துச் செல்வதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. கட்டிலைச் சுற்றி வர கற்பூர தீபம் எரிந்துகொண்டிருக்கிறது. தலைமாட்டில் சாம்பிராணி புகைந்துகொண்டிருக்கிறது. தம்பியையாவின் உடம்பின்மேல் பூமாலை வளர்த்தப்படுகிறது.

அவருக்கு பாடசாலை அளித்த பிரியாவிடை நிகழ்வில் அவர் மாலையுடன் தோன்றியது சிவசம்பு மாஸ்ரரின் நினைவில் வந்து போகிறது.

இன்று அவரது பேரப்பிள்ளைகள் பூக்கள் கோர்த்து மாலைபோட்டுள்ளனர்.

இதுவும் அவருக்கு ஒரு பிரியாவிடை தான்!

சுற்றிவரப் பேரப்பிள்ளைகள் தீப்பந்தமுடன் நிற்கின்றனர்! மருமகன் பண்ணிசைச் செல்வன் பரமநாதன் தேவாரத்தை ஆரம்

வதிரி-சி-ரவீந்திரன்

பிக்க தொடர்ந்து ஒவ்வொரு பேரப்பிள்ளைகளும் சுருதி பிசகாது தேவாரம், திருவாசகம் பாடி ஒரு இருபது நிமிடத்திற்கு மேல் பக்தியுடன் மனதையும் உருக்கிவிட்டனர். இந்த நிகழ்வை சிவசம்பு மாஸ்ரர் கவனித்துக்கொண்டுதான் இருந்தார்!

பிரேதம் வண்டிலில் வைக்கப்பட்டு ஊர்வலம் நகர்கிறது. சிவசம்பு மாஸ்ரரும் மெதுவாக தனது வீட்டிற்கு நகர்கிறார்.

ஒரு நண்பனின் இழப்பு சிவசம்பரையும் வாட்டி விட்டது. அடுத்தநாள் காலையில் எழுந்தவருக்கு காரியங்கள் ஆற்றுவது மிகவும் கஷ்டமாக இருந்தது. என்றாலும் வாழ வேண்டும் என்ற அவா அவரை உற்சாக மூட்டியது.

"ஐயா அக்கா கோல் தந்தவ! நீங்கள் எப்ப வாறியளாம்! நீங்கள் இல்லாமல் வீடு களையிழந்துவிட்டதாம்!" மகன் சொல்கிறான்.

"தம்பி நான் வரவில்லை என்று ஃபோன் பண்ணு. நான் செத்தால் இந்த மண்ணிலை தான் சாவன்!" என்றவர் மேலும் சொல்கிறார்;

"எனக்கு கொழும்புக்குப் போகமுடியாது. அங்கு நோய் நொடி வந்தால் பாஷை பிரச்சனை. செத்தால் மலர்ச்சாலைகட்கு செலவு! செத்தால் 'எம்பாம்' பண்ணி சுய உருவத்தையே மாற்றிப்போடுவாங்கள்! வீட்டில் பிரேதம் வைக்க ஏலாது. இடம் போதாது! அதுக்குமொரு செலவு! தேவாரம் பாட கூலிக்கு ஆட்கள்! அவர்கள் படு பிழையாக புதிய ராகமொன்றை கண்டுபிடித்து தேவாரங்களைப் பாடுவார்கள். அதிலும் அங்கை என்ரை பேரப்பொடியளுக்கு தேவாரமே தெரியாது. அவர்கள் படிப்பது இன்ரநஷனல் ஸ்கூல். இங்கு எமது சமுதாய சடங்குகள் ஒழுங்காக நடக்கும். அதிலை மோட்சமும் கிடைத்துவிடும்! நான் செத்தால் சொந்த மண்ணில்தான் சாவன்!" என்ற சிவசம்பர் பேரப்பிள்ளைகளை தேவாரம், திருவாசகம் சொல்லித் தருவதற்காய் அழைக்கிறார். ▣

# ஏணி

எல்லோருக்கும் தாங்கள் எதிர்பார்ப்பது எல்லாம் இலகுவாகக் கிடைத்துவிடுவதில்லை. ஆனால் சிவாவிற்கு அவன் எதிர்பார்த்தது கிடைத்தது.

சுவிசுக்கு வந்து சேர்ந்ததும் உடன் வேலையொன்று கிடைக்க வேண்டுமென்று அவன் எண்ணியிருந்தான்.

அவனுடைய எண்ணம் மூன்று மாதகால அகதிகள் முகாம் வாழ்க்கை முடிந்து வெளியில் வந்ததும் நிறைவேறியிருந்தது.

இதையிட்டு அவன் பெரிதாகச் சந்தோஷமடைந்து கொண்டிருக்கவில்லை. அவனுடைய குறியெல்லாம் விரைவாக உழைக்க வேண்டும், நிறைவாகப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்காகவே இருந்தது.

பக்கத்து வீட்டுக் 'கிளார்க்'கரிடம் வட்டிக்குச் சுளையாகப் பெற்ற இலட்சங்களை எப்போது அடைக்கலாமென்ற ஆவலே நிறைந்திருந்தது. அதுபோக கூடப்பிறந்த ஒரு அக்கா, இரு தங்கைகள் இவர்களை ஒழுங்காகக் கரை சேர்க்க வேண்டும் என்னும் குடும்பப் பொறுப்பு மிகுந்திருந்தது.

இதனால் வேலை கிடைத்த உடனேயே போய் இணைந்து கொண்டான் சிவா. வேலை கொடுத்த 'ரெஸ்டோறண்டு'க்கு மேலேயே தங்க றூமும் கொடுத்திருந்தார்கள். இது அவனுக்குப் பல வழிகளிலும் இலகுவாகவும் வசதியாகவும் போயிற்று. இதனால் நேரங் காலம் பாராமல் மாடாய் உழைத்தான். அந்த உழைப்பின் பலனாக வந்த ஒருவருட காலத்திற்குள் வட்டிக்குப் பெற்ற அத்தனை கடன்களையும் திருப்பியனுப்பியிருந்தான்.

அது மட்டுமல்ல மூத்த அக்காவிற்கு நிறையச் சீதனத்துடன் கல்யாணமும் பேசச் சொல்லி தாய்க்கு எழுதியிருந்தான்.

பணம் கொழிக்கும் சுவிஸ் நாட்டில் அவன் பகலிரவு பாராமல் பாடுபட்டதால் அவனுடைய வீட்டில் வசதி வாய்ப்புக்களும் பெருகிக்கொண்டு வந்தது.

மூத்த சகோதரிக்குத் திருமணம் முடிந்து அவள் கொழும்பில் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

சிவாவினுடைய ஊர்ச் சிநேகிதன் ஒருவன் ஜெர்மனி நாட்டிலே இருந்தான். அவனுடன் ஒருநாள் தொடர்பு கொண்டபோது அவனைச் சிவாவிற்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

அவனை தனது தங்கையொருத்திக்குத் திருமணம்பேசி முற்றாக்கினான். சீட்டுக் கட்டிய பணத்தைப் பெற்று சீதனமாகக் கொடுத்து அந்தத் தங்கையை ஜெர்மனிக்கு அனுப்பிவைத்தான். காலங்களும் அவனுடன் ஒத்துழைத்து விரைவாகவே கழிந்து கொண்டிருந்தன.

இறுதியாகக் கடைக்குட்டித் தங்கை 'அட்வான்ஸ்லெவல்' படித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஒரு டொக்டர் அல்லது என்ஜினியரைத்தான் செய்து கொடுக்க வேண்டுமென்று தாய் ஆசையாய் கடிதமெழுதியிருந்தாள்.

"அம்மா உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள், நான் பணம் அனுப்புகிறேன்!" என்று சிவா தாய்க்குப் பதில் எழுதினான்.

ஒன்றைப் பெறுவதற்கு இன்னுமொன்றை இழந்தே தீரவேண்டுமென்பது

வெளிநாட்டில்
உள்ள நம்மவர்கள்
பணம் காய்ச்சி மரங்களா?



விதிபோல் அமைந்துவிட்டதொன்று. சிவாவும் தன்னுடைய குடும்ப உயர்வுக்காக பல விருப்பு வெறுப்புக்களை இழந்துதானிருக்கின்றான்.

அவன் தன்னுடைய கடைசித் தங்கையின் காரியங்களையும் நிறைவேற்றியிருந்தபோது ஏழு வருடகாலங்கள் கழிந்திருந்தன. இந்த ஏழு வருட காலத்திற்கும் ஏழுமாதங்களாவது தனக்குப் பிடித்த சாப்பாடு சாப்பிட்டிருக்கின்றானா? என்றால் அது கூடக் கிடையாது.

காலையில் எட்டுமணிக்கு வேலைக்கு கிளம்பிப் போவான். பின் இரண்டரை போல் அறைக்குத் திரும்பி, மறுபடியும் மாலை ஐந்து மணிக்குப்போனால் வேலை முடிய இரவு பன்னிரெண்டு மணியாகிவிடும்.

இப்படியே தொடர்ந்து-கிழமையில் ஆறு நாட்கள் அலுக்காமல் வேலை செய்ய வேண்டும். கொஞ்சம் அலுப்புக்காட்டினால் கூட முதலாளி வேறொருவரை வேலைக்கு எடுத்து விடுவானோ என்ற பயம் வேறு நெஞ்சுக்குள் தோன்றிக்கொண்டேயிருக்கும்.

இரவு பன்னிரெண்டு மணிக்கு வேலை முடிந்து திரும்பும்போது சிவா இரண்டு மூன்று பியர் போத்தல்களுடன்தான் றூமிற்குத் திரும்புவான். றூமில் வந்து முகம் கைகால்களைக் கழுவிவிட்டு கொண்டு வந்த அந்த பியர் போத்தல்களை முடித்து,

களுவாஞ்சிக்குடி யோகன்

அவுஸ்திரேலியா

இருந்து தனக்குத் தானே புலம்பிவிட்டுத்தான் நித்திரைக்குப் போவான். இது ஒரு சுழற்சிமுறைபோல தொடர்ந்துகொண்டு போனதால் வாழ்க்கையில் அவனுக்கொரு சலிப்பு ஏற்படத் தொடங்கியது.

அவனுக்குச் சலிப்பு ஏற்படத் தொடங்கிய நேரந்தான் நாட்டில் அவனுடைய தாயார் மரணித்துப்போன செய்தியும் கிடைத்தது. சிவா துடிதுடித்துப் போனான்.

விருப்பு வெறுப்புக்களையும், உணர்ச்சிகளையும் மனக்கூண்டுக்குள்ளே பொத்தி வைத்து அடக்கி அடக்கி வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தான்.

இந்த வாழ்க்கை ஓட்டத்திற்கு அவனுக்குக் குடி ஒன்றே பிரதான தேவைப் பொருளாக அமைந்தது.

அது கட்டுக்கடங்காமல்போய் ஒரு நிலையில் அந்தக்குடியில்லாவிட்டால் உயிர் வாழ முடியாது என்ற நிலை உருவாயிற்று.

குடித்துவிட்டு புலம்பிக்கொண்டு நித்திரைக்குப் போகும் சிவா குடியாமலேயே புலம்ப ஆரம்பித்தான்.

தன்னுடைய எதிர்காலம் தனக்கே விளங்காத நிலையில் சுவிஸிலுள்ள மனநலமற்றோர் வைத்தியசாலையொன்றில் சிவா சிகிச்சை பெற்று வருகின்றான்.

நீண்ட நாட்களுக்குப் பின் அந்த இடத்திற்கு ஒரு நண்பனிடம் சென்றபோது அவன் சிவாவைப்பற்றிச் சொன்னான். சிவாவைச் சென்று பார்த்தபோது எனக்கும் எதிர்காலத்தைப் பற்றிய பயம் இலேசாகக் கிளம்ப ஆரம்பித்தது. ●



படிப்பகம்

www.padippakam.com

# மனிதனாயிருந்தால் புருஷன்

இலக்கிய நயம்

தருவது ரசிகன்



அமைச்சர் நந்திவர்மனுக்கு
அறுபது வயது பருவம்!
மீசை நரைத்தாலும்
ஆசை நரைக்காத மனிதர்!

பதினாறு வயதில்
பருவக்குமரி வேண்டும்
என்று அடம்பிடித்தவருக்கு
வடம்பிடிக்கத் தெரியவில்லை!

தேர்போல வந்தவள்
தேம்பியழுதாள்!

வடம்பிடிக்கத் தெரியாதவருக்கு
தேர் எதற்கு?

வாள் வீசத் தெரியாதவருக்கு
போர் எதற்கு?

பருகத் தெரியாதவருக்கு
பதனீர் எதற்கு?

வாசிக்கத் தெரியாதவருக்கு
நூல் எதற்கு?

மீட்டத் தெரியாதவருக்கு
வீணை எதற்கு?

ஆடத் தெரியாதவருக்கு
அரங்கம் எதற்கு?

'நல்லதோர் வீணை செய்தே-அதை
நலம்கெட புழுதியில்
எறிவதுண்டோ?'

எறிந்துவிட்டார்களே
புழுதியிலும் அல்ல,
சகதியில்
எறிந்துவிட்டனரே!

அவள் கண்ணீருக்கு
தலையணையாலும்
அணைபோட்ட முடியவில்லை!

குப்புறக் கிடந்து
குலுங்கிக் கொண்டிருந்தவளை
அமைச்சரின் கரம்
உலுக்கியது!

கண்ணீரைக் கண்டதும்
அவர் கண்கள் விரிந்தன!

கண்களில் இருந்து
ஓடிய கண்ணீர்
அவள் நெஞ்சகத்தை
நனைத்திருந்தது!

கிழ அமைச்சர்
புலமை காட்டினார்.

"விழிகளில் அருவி
புறப்பட்டதோ?-அது
மலைகளின் வழியாய்
பயணித்ததோ?

மலைகளின் அழகு
ஜொலிக்கிறது
மனது கிடந்து
குதிக்கிறது!

மூச்சுவிடும்போது
முயல்கள் என்பேன்,
முன்நிமிர்ந்து முறைக்கையிலே
மலைகள் என்பேன்!"

கண்ணீரைக்கூட
காமத்தோடு நோக்கும்
கிழ அமைச்சரின்
வக்கிரம் வெறுப்பூட்டியது!

பக்கத்தில் அமர்ந்து
'வெட்கமா?' என்றார்.

'துக்கம்' என்று
சொல்லத்தான் நினைத்தாள்
விழுங்கிவிட்டாள்!

"இந்த மாளிகை
உனக்குப் பிடிக்கிறதா?"
என்றார்: எங்கெல்லாமோ
தொட்டு தொட்டு பார்த்தார்.

வீணையை தொட
மட்டும்தான் இயலும்!
மீட்ட முடியாது
அவரால்!

தங்கக் கூண்டில்
அழகிய கிளி!

சிறகுகளை வெட்டிவிட்டு
சிங்காரித்து என்ன பயன்?

சுதந்திரத்தை பறித்துவிட்டு
சோறு ஊட்டி என்ன?

அடக்குமுறை மத்தியிலே
அன்பொழுக பேசி என்ன?

கழுத்தை நெரித்தபடி
கனிவாக புன்னகைத்து என்ன?

அவள் மேனி
துடித்தது!
நா கோபத்தில்
வெடித்தது!

"ஏன் வந்தீர்?
முடவன்
கொம்புத் தேனுக்கு
ஆசைப்படலாமா?"

தடித்த வார்த்தைதான்.
கிழ அமைச்சர்
காயப்பட்டுப் போனார்?

கோபத்தை மறைத்தபடி
பொய் இனிப்போடு
பேசினார்:

"கண்ணே! கலையழகே!
கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருஷன்
என்பதை மறக்கலாமா?
கிழவனாயிருந்தாலும்
நான் உன் புருஷனடி!"

"கல்லும் புல்லும்கூட
உபயோகப்படுமே!"
என்றாள் குத்தலாக!

ஓங்கி அறைந்தான்
கிழ அமைச்சர்.

இரண்டாம் முறையும்
ஓங்கியபோது
தடுத்தாள் கை உயர்த்தி!

"நிறுத்து!
கல்லானாலும் புருஷன்
என்று சொன்னவன்
கையாலாகாதவனாயிருப்பான்!
அதனால்தானடா
தனக்குப் பொருத்தமான
பழிமொழி புனைந்தான்!

மனிதனாக இருந்தால்தான்
நீ எனக்கு புருஷன்!
மனுஷியாக இருந்தால்தான்
நான் உனக்கு மனைவி!"

கிழ அமைச்சர்
உறைந்து போனான்!

முதிராத இளமேனியில்
முகம் பார்க்க வந்தவர்
சந்தோசம் உதிர்ந்து போனார்!

சந்தன மேனியின்
சுந்தர அழகை
கண்களால் பருக வந்தவர்
காயப்பட்டு நின்றார்!

சின்ன இடை தொட்டு
பின்னல் என தழுவி
கன்னம் தனை கிள்ளி
இன்பம் காணவந்தவர்
துன்பம் படர நின்றார்!

தவறுதான் என்பது
தெரிந்தது அவருக்கு!

தோலை உரித்துவிட்டு
கனியை சுவைக்காமல்
வீசியெறிவதால்
கனிக்கும் பயனில்லை!
கனியாலும் பயனில்லை!

இந்தக் கனியை
சுவைக்கும் வயதும்
எனக்கில்லை!

தினமும்
தோலையுரித்துவிட்டு
தூங்கிப் போகிறேன்!
உரிக்கப்பட்ட கனி
உண்ணப்படாமல் தவித்திருக்கும்!

தலைகுனிந்தபடி
வெளியேறினார்!

குற்றம் அவர் மனதை
குடைந்தது!
சோகம் அவர் மனதை
அடைத்தது!

'அவாவினால்
மிருகமானேன்!

அவா ஒழிந்தால்
மனிதனாவேன்!

கொடிது கொடிது
தனக்கிலா அவா
கொடிதிலும் கொடிது!'

திருவள்ளுவரும்
அதைத்தான் சொன்னார்:

"அவா இல்லார்க் கில்லாகுந் துன்பம் -அஃ துண்டேல்
தவா அது மேன்மேல் வரும்"

அதிகாரம்: 37, குறள்: 36

## சிந்தியா பதில்கள்

* மீண்டும் பொக்ஸ் உடன்பாடு கிளறப்படுகிறதே ஏன்?

சி. ரவிக்குமார், மட்டக்களப்பு.

இருதரப்புக்குமே தெரியும், பொக்ஸுடன் சேர்ந்து தாம் ஆடியது நாடகம் என்று! தமக்குத் தேவையானபோது அவரவர் கிளறிக்கொள்வர். மறுதரப்புக்கு மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலை!

* சிந்தியா முரளிதரனின் கலக்கல் பற்றி கூறும்?

எல். சீதாராமன், கண்டி.

பிரிட்டிஷ்காரர்களிடம் கண்டி தோற்றது அன்று! பிரிட்டிஷ்காரர்களை அவர்கள் மண்ணிலேயே தோற்கடிக்க அந்த கண்டி தந்த புதல்வனே காரணமாக இருந்தது சுச்சிதம்! அவர் ஒரு தமிழ் பேசும் குடிமகன் என்பது மேலதிக சந்தோசம்!

* சிந்தியா! நீங்கள் நாத்திகத்தை ஆதரிக்கிறீர்களா?

செல்வி எஸ். கல்யாணி, கருவாஞ்சிக்குடி.

அண்மையிலேதான் சத்யராஜின் அருமையான பேட்டி ஒன்று படித்தேன். சத்யராஜ் கூறுவதைக் கேளுங்கள்:

"உலகத்தில் உள்ள அத்தனைபேரும் நாத்திகன்தான். இப்போ உங்களுக்கு ஒரு வியாதி வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒரு வயித்து வலியோ, தலை வலியோ- இந்த வியாதியை உங்களுக்குக் கொடுத்தது யாரு?"

எல்லாம் அவன் செயல் என்றால் அந்த வியாதியைக் கொடுத்ததும் ஆண்டவன்தான். ஆண்டவன் கொடுத்தைப் போற்றிப் பாதுகாக்க வேண்டுமல்லவா?

ஆனால் நீங்கள் கடவுளை மதிக்காமல் டாக்டரிடம் போகிறீர்கள். அப்பவே நீங்க ஒரு நாத்திகன் ஆயிடறீங்க.

அந்த டாக்டர் என்ன பண்றாரு, கடவுள் கொடுத்த வியாதிக்கு நாம மருந்து கொடுப்பது தப்பாச்சே என்று யோசிக்கிறது இல்லே.

'கடவுளா நான் படித்த எம்.பி.பி.எஸ்ஸா பார்க்கலாம் ஒரு கை!' என்று மருந்துச் சீட்டு எழுதிக்கொடுக்கிறார். இந்த இடத்தில அவரும் நாத்திகன் ஆயிடறார்... சோ, உலகத்திலே ஆத்திகர்களே கிடையாது...!'



ஹுஸைன்

* 'என் ஆச ராசாவே' சிவாஜி எப்படி?

தி.ரத்னா, கொழும்பு-12.

'ஓல்ட் இஸ் கோல்ட்!'

* சிந்தியா! கடவுள் எப்படி இருப்பார்?

செ. கணேசன், திருமலை.

மகாபாரதத்தில் ஒரு சம்பவம்:

பகவான் எப்படி இருப்பார்-ஆணாகவா, பெண்ணாகவா? என்று சர்ச்சை.

ஓவியர் ஒருவரை அழைத்தனர். "நீ கிருஷ்ண பகவானைப் பார்த்து ஓவியம் வரை. அதில் அவர் உண்மையான உருவத்தைக் காட்டிவிடுவார். நாம் தெரிந்து கொள்ளலாம்!" என்று பொறுப்பை ஒப்படைத்தனர்.

ஓவியரும் மறைந்திருந்து கிருஷ்ணரின் உருவத்தை வரைந்தார். ஒரு குறிப்பிட்ட நாளில் எல்லோரும் சூழ்ந்து பார்த்தபோது, அது ஒரே குழப்பமாக இருந்தது. காரணம், அந்த ஓவியத்தில் கிருஷ்ணரின் உருவத்திற்குப் பதிலாக தெளிவில்லாத கோடுகளும், கிறுக்கல்களும் இருந்தன.

பின்னர் கிருஷ்ணரே வந்தார். "கடவுள் உருவத்தை நீங்கள் பார்க்க வேண்டுமா?" என்று கேட்டார்.

எல்லோரும் ஆர்வமாக, "ஆமாம்!" என்றனர்.

ஒவ்வொருவர் கையிலும் ஒரு கண்ணாடியைக் கொடுத்தார். "பாருங்கள்!" என்றார். பார்த்தனர்.

அதில் அவர்கள் உருவமே தெரிந்தது. "நீங்கள் எப்படி கடவுளைப் பார்க்க நினைக்கிறீர்களோ, அப்படியிருப்பார் கடவுள்!" என்றார் கிருஷ்ணர்.

* 'உயிரே' படம் பார்த்தீர்களா? மணியா?

பி. நயானந்தன், கொழும்பு-09.

மணிரத்னம் தானும் குழம்பி, எம்மையும் குழப்பி இருக்கிறார்! முடிவை தெளிவாகக் கூறமுடியாமல் ஊசலாடியுள்ளார்!

* வாத்தியாருக்கு மரியாதை கொடுக்காத மாணாக்கர்கள்தான் அதிகமோ?

சி. ஜெயராஜ், யாழ்ப்பாணம்.

சேச்சே...! மாணவர்கள் குறும்புக்காரர்கள். கெட்டவர்களல்ல. உதாரணம் இதோ:

"என் கணக்கு வாத்தியார் காட்டிய வழியில்தான் நான் காலம் கழிக்கிறேன்!"

"அப்படியா?"

"ஆமாம்! பக்கத்திலே கடன் வாங்கிக் கழிக்கச் சொல்வார்!"

* அழகைப் புகழ்வது தவறா?

ஆர். சிவராமன், சிலாபம்.

நடிகை மாதுரி டிக்ஷித்தின் பரம இரசிகரான ஓவியர் ஹுஸைனிடம், "உங்களுக்கு மாதுரி மயக்கம் ஏன்?" என்று கேட்டனர்.

"மக்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்ல உரிமையுண்டு. ரோல்ஸ்ரொய்ஸ் கார்தான் உலகில் மிகச் சிறந்த கார். அதை நேசிப்பதற்கு யாருக்கும் உரிமை உண்டு. அதைப்போல மாதுரி டிக்ஷித்தை நேசிக்கவும் எனக்கு உரிமை உண்டு. ஏனெனில் அவர்தான் சூப்பர் அழகி!" என்று புகழ்ந்து தள்ளியுள்ளார். மாதுரியே வெட்கப்படுகிறார் பாருங்கள்!



மாதுரி

* ஐ.தே.கட்சியின் மாநாடு கண்துடைப்பு என்று ஆனந்தசங்கரி கூறியுள்ளாரே?

வி. சுந்தரலிங்கம், வவுனியா.

ஆட்சியில் இல்லாத கண்துடைப்பு மட்டும்தான் இவர்கள் கண்ணில் தெரிகிறதாக்கும்!

* பிரிக்க முடியாத உறவுக்கு உதாரணம் கூறுக சிந்தியா?

செல்வி சி. உஷா, மன்னார்.

ஜயசிக்குறுய்யும் தணிக்கையும்!

* ஒரு குட்டி ஜோக் கூறுங்கள்?

த. செல்வநாதன், மஸ்கெலியா.

குட்டி ஜோக்கா, குட்டியான ஜோக்கா?

"டாக்டர் ஒப்பரேஷனை நினைத்தால் பயமா இருக்கிறது டாக்டர்!"

"பயப்படாதீர்கள் நான் இருக்கிறேன்!"

"நீங்கள் இருப்பீர்கள். நான் இருப்பேனா டாக்டர்?"

## ஸ்போர்ட்ஸ்

# கொமன்வெல்த் போட்டிகள்

## அணிகள் 16 - பிரிவுகள் 04

மலேஷியாவின் தலைநகர் கோலாலம்பூரில் இம்மாதம் 11ம் திகதி கொமன்வெல்த் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகின்றன. சர்வதேச கிரிக்கெட் சபை, கொமன்வெல்த் கிரிக்கெட் போட்டிகளுக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்தை வழங்கவில்லை. இதனால் பல நாடுகள் இப்போட்டிகளில் பங்குபற்ற தமது 2ம் தர அணிகளையே அனுப்புகின்றன.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூஸிலாந்து, ஸிம்பாப்வே, தென்னாபிரிக்கா உட்பட மொத்தம் 16 நாடுகள் இப்போட்டியில் கலந்து கொள்கின்றன. 16 அணிகளும் ஏ.பி.சி.டி என 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் 4 அணிகள் இடம்பெறுகின்றன.

'ஏ'பிரிவில் இலங்கை, ஸிம்பாப்வே போன்ற பலம் வாய்ந்த அணிகளுடன் மலேஷியா, ஜமெய்க்கா அணிகளும் இடம் பெற்றுள்ளன. இருப்பினும் இலங்கை அணியின் முன்னணி வீரர்களான அர்ஜுன, அரவிந்த, ஜெயசூரிய, களுவித்தாரண, அத்தபத்து, முரளீதரன் போன்றோர் இடம் பெறவில்லை. இலங்கை அணிக்கு ஹஷான் திலகரட்ன தலைமை தாங்குகிறார். ஸிம்பாப்வே சார்பாக முதல்தர அணியே விளையாடுகிறது.

'பி' பிரிவில் இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய பெரிய அணிகளுடன் கனடா, அண்டிகுவா போன்ற அணிகளும் இடம் பெற்றுள்ளன. கொமன்வெல்த் போட்டியில் அவுஸ்திரேலியாவின் முதல் தர அணியே கலந்து கொள்கிறது.

இதே நாட்களில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் சஹாரா கோப்பைப் போட்டியில் கலந்து கொள்ள இருப்பதால் இந்திய அணி கொமன்வெல்த் போட்டிகளுக்கு அஜய் ஜடேஜா தலைமையில் விளையாடுகிறது. இவ்வணியில் டெண்டுல்கர், கும்ப்ளே, ரொபின் சிங், ககன் கோடா, ரோகன் கவாஸ்கர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

'சி'பிரிவில் தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், வட அயர்லாந்து, பார்படோஸ் ஆகிய அணிகள் உள்ளன. இப்பிரிவில் தென்னாபிரிக்கா பலம் வாய்ந்த அணியாக இருப்பினும் முக்கிய வீரர்களான ஹன்ஸிகுரோஞ்ச், அலன் டொனால்ட், கேரி கேர்ஸ்டன், ஜொன்டி ரோட்ஸ், டரில் கல்லினன் போன்றோர் இடம்பெறவில்லை. தென்னாபிரிக்க அணிக்கு ஷோன் பொல்லொக் தலைமை தாங்குகிறார்.

'டி'பிரிவில் நியூஸிலாந்து, பாகிஸ்தான், ஸ்கொட்லாந்து, கென்யா ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன. இப்பிரிவில் உள்ள நியூஸிலாந்து, பாகிஸ்தான் அணிகள் சற்றுப் பலமான அணிகள் என்றாலும் சஹாரா போட்டிகளில் பாகிஸ்தான் கலந்து கொள்வதால் சலீம் இலாஹி தலைமையில் 2ம் தர அணியே கொமன்வெல்த்தில் விளையாடுகிறது. நியூஸிலாந்து சார்பாக முதல்தர அணியே விளையாடுகிறது.

## அக்ரம் நிறுத்தம்

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான 3வது சஹாரா கோப்பைப் போட்டிகள் இம்மாதம் 12ம் திகதி கனடாவின் டொரண்டோ நகரில் ஆரம்பமாகிறது. 5 ஒருநாள் சர்வதேச போட்டிகள் இம்மாதம் 12,13,16,19,20ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் பாகிஸ்தான் அணிக்கு அமீர் சொஹைல் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். சுமார் ஒரு வருட காலம் அணியில் இல்லாமல் இருந்த சலீம் மாலிக் மறுபடி அணியில் இடம் பிடித்துள்ளார். இதே வேளை பாகிஸ்தான் அணியில் இருந்து வாஸிம் அக்ரமும், சக்லெய்ன் முஷ்டாக்கும் நீக்கப்பட்டுள்ளனர்.



இந்திய அணிக்கு அஸாருதீன் தலைமை தாங்குகிறார். காயம் காரணமாக சிறிது காலம் விளையாடாமல் இருந்த ஸ்ரீநாத் மறுபடி அணியில் இணைந்துள்ளார். இவருடன் சித்து, ட்ராவிட் இருவரும் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

* சிந்தியா! வானொலி நிகழ்ச்சியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் சுரேஸ், மக்களை பிரார்த்தனை என்று கூப்பிட்டால்தான் வருவார்கள்? என்று கூறியுள்ளாரே?

எம். நித்தியஸ்ரீ, கொழும்பு-09.

மக்களை ஏமாற்றித்தான் தீரவேண்டும், உண்மையைச் சொன்னால் உருப்படமுடியாது என்கிறாரா? அவர் உண்மையைத் தானே கூறியிருக்கிறார்! ஏதோ இதிலாவது செய்வதை சொல்லியிருக்கிறாரே என்று பாராட்டுங்கள்!

* தமிழ்ச் செல்வனின் பேட்டி தொடர்பாக உமது அபிப்பிராயம் என்ன?

ஜெ. ராஜேந்திரம், கொழும்பு-06.

தாயகப் பாதுகாப்பு, சுயாட்சி அதிகாரமுள்ள தீர்வு, இராணுவ அழுத்தமில்லாத சூழலில் பேச்சு என்ற மூன்றைத்தான் புலிகள் மாற்றமின்றி கூறிவருகின்றனர்! அரசுதான் அடிக்கடி மாறி மாறிக் கூறிக்கொண்டிருக்கிறது.



'ரிக்ஷாக்காரன்' படத்தில் எம்.ஜி.ஆர் - மஞ்சுளா

* அன்றைய மஞ்சுளா? இன்றைய ப்ரீதாவா அழகு?

பி. எஸ், கொழும்பு-06.

என்னதான் இருந்தாலும் எம்.ஜி.ஆர்.-மஞ்சுளா ஜோடிப் பொருத்தமும், அந்த காதல் சுவையும் கடைந்தாலும் இனி வராது!



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 26

ஆண்டவர், மனித சமுதாயம் என்றென்றும் கடைப்பிடித் தொழுக வேண்டிய நெறிமுறைகளை மோசேக்கு வகுத்துக் கொடுத்தார். ஆண்டவரால் வகுக்கப்பட்ட கட்டளைகளை மீறுபவர்கள் எவ்வாறு தண்டிக்கப்படுவார்கள் என்ற விவரங்களையும் விளக்கமாகக் கூறினார். கர்த்தரால் தொகுத்தளிக்கப்பட்ட நெறிமுறைகளனைத்தையும் மோசே எழுதி வைத்தார். இஸ்ரயேல் மக்கள் அனைவருக்கும் மோசே அந்நெறிகளை வாசித்துக் காட்டியதுடன் பல விளக்கவுரைகளையும் நிகழ்த்தினார்.

## யோசுவாவின் வழி நடத்தல்

தன் உயிர் பிரிவதற்குமுன் இத்தனை கருமங்களையும் மோசே செய்து முடித்தார். இஸ்ரயேலர்களை வழி நடத்துவதற்காக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அம்மேதை பூரணமான வாழ்வை மேற்கொண்டு-அத்திருப்தியுடன்-கர்த்தரின் பாதங்களிலேயே உயிர்விட்டார். ஆண்டவரே மோசேயின் சடலத்தை நல்லடக்கம் செய்தார்.

வேதாகமத்தில்-மோசே அடக்கம் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட இடம் பின்வந்த அகழ்வாராய்ச்சியாளர்கள் பலரால் ஆராயப்பட்டும், அந்த இடம் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. புனிதரான மோசேயை ஆண்டவர் எவ்வாறு தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டார் என்பது மனிதர்களாகிய எமக்கெல்லாம் விடுபடமுடியாத புதிராக-புதுமையாகவே இருக்கிறது.

மோசேக்கு வாக்களித்தபடி, நூனின் மகனும் இதுவரை மோசேயின் உதவியாளருமாகவிருந்த யோசுவாவுடன் ஆண்டவர் நேரடியாகவே பேசினார்.

### நாட்டின் எல்லைகள்

"யோசுவா! இஸ்ரயேல் மக்களுக்கு நான் கொடுத்த வாக்குக்கேற்ப கானான் தேசம் இதோ உன் கண் எதிரே பரந்து கிடக்கிறது. இம்மக்களைச் செம்மையாக வழிநடத்தும் பொறுப்பு உன்னுடையது. நீர் காலடி எடுத்து வைக்கும் பூமி அனைத்தும் இம்மக்களுக்கே உரிமையாகும். இந்தப் பாலை நிலத்திலிருந்து லெபனோன் வரையிலும், யூப்பிரத்தீசு மாநதியிலிருந்து கதிரவன் மறையும் மேற்குக் கடல் வரையிலுமுள்ள இப்பரந்த பிரதேசம்தான் இஸ்ரயேல் மக்களுக்குரிய நாடு.

ஏற்கனவே வகுத்துக்கொடுக்கப்பட்ட முறைப்படி இம்மக்களுக்குரிய காணிகளைப் பகிர்ந்துகொடு. எந்தவிதமான தயக்கமோ அச்சமோ இன்றி துணிந்து முன்னேறு! உன்னை எதிர்க்கும் சக்தி எவருக்குமில்லை. உமது பணிகளெல்லாம் நிச்சயம் வெற்றிபெறும். நாம் எப்போதும் உன்னுடனேயே இருப்போம். எச்சந்தர்ப்பத்திலும் உன்னைக் கைநெகிழ விடமாட்டோம்!

எப்போதும் திருச்சட்ட நூலை உன் கண்காணிப்பிலேயே வைத்துக்கொள். சட்டங்களிலிருந்து எள்ளளவும் பிசகி விடாதே!"

கர்த்தர் கூறிய வார்த்தைகளால் தெம்படைந்த யோசுவா தன் பணியைத் தொடர ஆயத்தமானார். மக்களில் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த தலைவர்களை அழைத்து ஆண்டவரின் விருப்பத்தை விளக்கமாகக் கூறினார். மக்களும் கர்த்தரின் கட்டளைகளை அனுசரித்து நடப்பதாக வாக்களித்தனர்.

அடுத்த நாள் அதிகாலையில் யோசுவா, உடன்படிக்கைப் பேழையைச் சுமந்துசெல்லும் லேவியக் குருக்களிடமும் பன்னிரண்டு குழுக்களின் தலைவர்களிடமும் கர்த்தரின் விருப்பத்தைக் கூறினார்.

"லேவியக் குருக்கள் பேழையைத் தாங்கிய வண்ணம் முன் செல்வார்கள். அவர்களைத் தொடர்ந்து மக்கள் இரண்டாயிரம் அடி இடைவெளிவிட்டுத் தொடர வேண்டும். சித்திமிலிருந்து புறப்பட்டு உடன்படிக்கைப்பேழை யோர்தான் நதிவரை செல்லவேண்டும். மூன்று நாட்கள் அங்கு தங்குவோம். அப்போது ஆண்டவர் பல புதுமைகளைச் செய்து காட்டுவார். மூன்றாவது நாளன்று அனைவரும் தங்களைத் தூய்மைப் படுத்திக்கொள்ள வேண்டும்!"

யோசுவா இவ்வாறு கூறி லேவியக்குருக்களை பேழையுடன் புறப்படுமாறு சொன்னார். பேழை நகர்ந்தது. மக்களும் புறப்பட்டனர். யோர்தான் நதி நுங்கும் நுரையுமாகக் கரை புரண்டோடியது. 'இந்தப் பெருநதியை எவ்வாறு கடக்கப்போகிறோம்?' என்று மக்களில் சிலர் அஞ்சினர். லேவியர்களின் கால்கள் நதி நீரில்பட்டதும் வேகமாக ஓடிவந்த நீரின் வேகம் தடைப்பட்டது. அதே இடத்தில் நீர் வற்றி காய்ந்த தரையாகக் காட்சி அளித்தது. வெகுதூரத்துக்கப்பால் தடைப்பட்ட நீர் பெருமதில்போல் காட்சி அளித்தது.

இப்புதுமையைக் கண்ட மக்களனைவரும் பெருமகிழ்ச்சியடைந்து ஆண்டவரைப் பிரார்த்தித்தனர். நாற்பது ஆண்டுகளுக்கு முன் இஸ்ரயேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வந்தபோது, செங்கடல் பிரிந்து வழிவிட்டது. இக்கதையினை தங்கள் முன்னோர்கள் தங்கள் வழிமரபினருக்குக் கூறியிருந்தனர். அந்த அதிசயத்தை நேரடியாகக் கண்டவர்கள் அம்மக்கள் மத்தியில் மிகச் சிலரே அப்போது இருந்தனர். கதையாக மட்டுமே கேள்விப்பட்டிருந்த அந்த அற்புதத்தை இப்போது தங்கள் கண்முன்னே கண்ட புதியவர்கள் திகைத்தனர்.



இராஜகுமாரன்

### நினைவுக் கற்கள்

தரையின்மீது நடந்து அக்கரையை அடையும்வரை பேழையைத் தாங்கியபடி லேவிக் குருக்கள் அங்கேயே நின்றனர். மக்களனைவரும் யோர்தானைக் கடந்து செல்லும்போது பன்னிரண்டு குலத்தலைவர்கள் ஒவ்வொருவரும் உடன்படிக்கைப் பேழையுடன் நிற்கும் லேவியக்குருக்களின் காலடியிலிருந்து ஒவ்வொரு கல்லைப் பொறுக்கி எடுத்தனர். இது ஆண்டவரின் ஆணையிலொன்று என்பதனை யோசுவா ஏற்கனவே அவர்களுக்குக் கூறியிருந்தார்.

மக்களனைவரும் யோர்தானைக் கடந்ததும் பேழையைக்காவிய குருக்களை யோர்தான் நதிப்படுகையிலிருந்து வெளியேறுமாறு யோசுவா கூறினார். அவர்கள் வெளியேறியதும், அதுவரை தடைப்பட்டிருந்த நதி நீர் பெரும் இடியோசை போன்று பலத்த ஒலியெழுப்பிக்கொண்டு பிரவகித்து ஓடத் தொடங்கியது. இக்காட்சியைக் கண்ட அனைவரும் திகைத்து நின்றனர்.

யோர்தான் கரையிலிருந்து புறப்பட்ட மக்கள் எரிக்கோவின் கிழக்கேயிருந்த கில்காலில் தங்கினர். யோர்தானிலிருந்து குலத்தலைவர்கள் எடுத்து வந்த கற்கள் பன்னிரண்டையும் யோசுவா கில்காலில் தரையில் பதித்தார். இங்கு இஸ்ரயேல் மக்கள் பாஸ்கா விழாவைக் கொண்டாடினர். அடுத்த நாளன்று இவர்களுக்கு, வெகுகாலம் கழித்து நிலத்தில் விளைந்த தானியத்தில் உணவு தயாரித்து உண்ணும் சந்தர்ப்பம் கிட்டியது. இதன்பின்னர் இவர்களுக்காக ஒவ்வொரு நாளும் ஆண்டவரால் அருளப்பட்டு வந்த மன்னா கிடைக்கவில்லை.

### அற்புதத்தால் ஏற்பட்ட அச்சம்

இஸ்ரயேல் மக்கள் கடந்து செல்வதற்காக யோர்தான் பிரிந்து வழிவிட்ட சம்பவம் அப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களனைவருக்கும் தெரிந்துவிட்டது. யோர்தானின் மேற்குப் பகுதியில் வாழ்ந்த எமோரிய நாட்டினரும் கடற்கரை யோரமாக வாழ்ந்த கானானியரும் கேள்விப்பட்டனர். அந்த நாடுகளின் மன்னர்களும் ஆண்டவரின் அருஞ்செயலினால் நடந்த அற்புதத்தை அறிந்ததும் அச்சங்கொண்டனர்.

எரிகோ நகர் சுற்று மதிலால் அரண் செய்யப்பட்டிருந்தது. இஸ்ரயேல் மக்கள் சமுதாயம் எரிகோ நகரின் அருகிலேயே முகாமிட்டிருந்தது. தங்களுக்கு இம்மக்களால் எத்தகைய துன்பம் ஏற்படுமோ என்ற அச்சம் எரிகோ நகரவாசிகளுக்கு ஏற்பட்டது. தங்கள் நகருக்கு அண்மையில் மக்கள் பெருங்கூட்டமாக வந்திருந்தமையே அவர்களின் அச்சத்துக்கான காரணம். தங்கள் நகருக்கு அண்மையில் மக்கள் பெருங் கூட்டமாக வந்திருந்தமையே அவர்களின் அச்சத்துக்கான காரணம். நகரின் நுழை வாயில்களை மூடிவிட்டு மக்கள் உள்ளேயே இருந்துகொண்டனர்.

எரிகோவைக் கைப்பற்றும் முறையினை யோசுவாவிடம் ஆண்டவர் விவரமாக விளக்கியிருந்தார். அதன்படி இஸ்ரயேல் வீரர்களுக்கு யோசுவா கட்டளையிட்டார். எரிகோ நகரை வீரர்கள் காலையில் ஒரு தடவை சுற்றிவர வேண்டும். லேவியக் குருக்கள் உடன்படிக்கைப் பேழையை ஏந்திய வண்ணம் செல்ல வேண்டும். வீரர்கள் முன்னும் பின்னுமாக அணி வகுத்துச் செல்லவேண்டும். லேவியர்கள் ஏழு எக்காளங்களை முழங்க வேண்டும். இவ்வாறு ஏழு நாட்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும்.

ஆண்டவரின் ஆணைப்படி எரிகோ நகரின் வெளிப்புறத்தில் எக்காள முழக்கத்துடன் படையினரின் அணிவகுப்பு நடைபெற்றது. ஏழாம் நாளன்று அதிகாலையில் உடன்படிக்கைப் பேழையை லேவியக் குருக்கள் சுமந்து சென்றனர். வீரர்களும் அணிவகுத்துச் சென்றனர். குறிப்பிட்ட வேளை வந்ததும் யோசுவா சைகை காட்டினார். எக்காளங்கள் முழங்கின. அதேவேளையில் மக்களனைவரும் இணைந்து ஆரவரித்து பேரொலி எழுப்பினர். பெரிய இடி முழக்கம் தொடர்வது போன்று எழுந்த இந்தப் பேரொலியால் எரிகோ நகரின் சுற்று மதில் சிதறித் தரைமட்டமானது.

எரிக்கோ நகரைக் கைப்பற்றுவதற்கு முன்னர் அந்நகரை உளவு பார்த்துவர இஸ்ரயேலர்களில் இருவரை யோசுவா அனுப்பி வைத்திருந்தார். அவ்விருவரும் அந்நகருக்குள் வந்திருப்பதை எரிகோ மன்னன் எவ்வாறோ அறிந்து கொண்டான். அவர்களைப் பிடித்துவர வீரர்களை அனுப்பிவைத்தான். வீடுவீடாகச் சென்று அவர்கள் தேடினார்கள். ஆனால் அவ்விருவரும் பிடிபடவில்லை.

இராகாபு என்றொரு பெண்மணி எரிகோ நகரில் இருந்தாள். இஸ்ரயேலர்களுக்கு ஆண்டவர் செய்த பேருதவிகளையும், அவர் புரிந்த அருஞ்செயல்களையும் இராகாபு அறிந்திருந்தாள். இஸ்ரயேல் உளவாளிகள் இருவரும் அவளுடைய வீட்டிலேயே ஒளிந்திருந்தனர். ஆனால் அவர்களைத் தேடிவந்த வீரர்களிடம் அவர்களை இராகாபு காட்டிக் கொடுக்கவில்லை. வீரர்கள் போன பின்னர் அவ்விருவரையும் இராகாபு பத்திரமாக அனுப்பி வைத்தாள்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 24 விடை:** பன்னிரண்டு குலங்கள்

**பரிசு பெறுவோர்:**

1. **ஜே.எஸ். யசோதினி**, கோயில் வீதி, மூதூர்-03.
2. **என். தயாராஜா**, 93/47, தென்னக்கும்பர, கண்டி.
3. **என். புனிதா**, ஜோசேப் ஸ்ரோர்ஸ், தாண்டியடி, கோமாரி.
4. **ஆர்.வி. காந்தன்**, 17/4, இக்கொல்ல மாவத்தை, மாத்தளை.
5. **ச.ஜெ. றயிதா**, 7, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

**திருமறை 26 வினா:-** உடன்படிக்கைப் பேழையை சுமந்து செல்பவர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?

செப்டெம்பர் 19க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**திருமறை 26—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## பயோடேட்டா



பெயர் : செம்மணி புதைகுழிகள்
தொழில் : உண்மைகளை மறைத்தல்
நண்பர்கள் : புதைத்தவர்கள்
எதிரிகள் : தோண்டுமாறு கேட்பவர்கள்!
மோசமான எதிரி : ராஜபக்ஷ
ஒரே சந்தோசம் : தோண்டாமல் இழுத்தடிப்பு!
எரிச்சல் : மன்னிப்புச் சபை அறிக்கைகள்.
வெறுப்பது : சர்வதேச நிபுணர்களை!
எதிர்ப்பது : நீதியான விசாரணையை!
விரும்புவது : இரகசியங்களை புதைக்கக்கூடிய விசாரணைகளை!
விரைவில் எதிர்பார்ப்பது : மாரிமழையை!
சாதனை : சுடுகாட்டை இடுகாடாக மாற்றியது!
சோதனை : நீதிமன்றத்தில் வாக்குமூலம்.
இலட்சியம் : விரிவாகிக் கொண்டிருப்பது!

## பேச்சாளர் பேரம்பலம்

"மாநகர முதல்வரும், மற்றும்பல உறுப்பினர்களும் கொழும்பிலேயே நீண்டநாள்களை கழிப்பதன் காரணமாக, மாநகர சபை என்பதை மாநகரும் சபை என்று பெயர் மாற்றவேண்டும் என்று சக உறுப்பினர்கள் சிலர் கேட்பது முறையல்ல, நீதியல்ல, தர்மமுமல்ல, இன்னும் சொல்லப்போனால் காந்திய வழியுமல்ல!"



## இது பொதிப்பாட்டு

என்ன பாட்டுப் பாட?
என்ன தாளம் போட?
பொதியைச் சொல்லி சொல்லி
கதியை மாற்ற வேண்டும்!

என்ன பாட்டுப்பாட?
என்ன தாளம் போட?
பொதியை காட்டி காட்டி
விதியை மாற்ற வேண்டும்-தமிழர்
விதியை மாற்ற வேண்டும்!

பாரு பாரு நல்லாப்பாரு
பொதி பாரு, பொதியைப் பாரு
உலகம் பிறந்த நாள் முதலாய்
உருவாகி வந்த பொதியிது!

உலகம் பார்த்து வியக்க
உருவாக்கித் தந்த பொதியிது!

கலகம் செய்ய வேண்டாம்
உலகம் ரொம்ப சிறிசு
அதுதான் பொதியும் ரொம்ப சிறிசு!

போனால் கிடைக்காது
பச்சைக் கட்சி கூட்டத்துக்கு
போனால் கிடைக்காது
ஓடிவா! ஒடுங்கி வா!
பொதி! பொதி! பொதி!

## இது எதிர்ப் பாட்டு

நான் ஆணையிட்டால்
அது நடந்துவிட்டால்
இந்த தமிழர்கள்
வேதனைப்படமாட்டார்!

உந்தப் பொதியும் வேண்டாம்
இந்த அரசும் வேண்டாம்
புது ஆட்சியை நாளை
அமைப்பேன்!

ஒரு தேர்தல் வரும்
ஒரு வெற்றிவரும்
தீர்வை நானே தருவேன்
(நான் ஆணை)

இங்கு தமிழர்கள் வருந்தவும்
சிறையினில் வாடவும்
நானா பார்த்திருப்பேன்?
ஒரு தேர்தல் வரும்
ஒரு வெற்றி வரும்
எனக்கே வாக்கினை தருவீர்
தீர்வினை உமக்கு தருவேன்!

ஒரு பொக்கு வந்தார்
பின்னர் வாஜ்பேய் வந்தார்
இன்று பிரேஸர் வந்தார்
பொதியினை இவர்கள் மறைத்தார்.
நாளை தேர்தல் வரும்
எனக்கு பதவி வரும்
உங்கள் எல்லோர்
கணக்கையும் முடிப்பேன்!
(நான் ஆணை)

## தமிழ் பஜனைக் கட்சி



சரணம், சரணம்
அம்மா சரணம்
அம்மாவிடம் கேட்டுப்பாருங்கள்
அவர் இல்லையென்று
சொல்லுவதில்லை!

.:பக்ஸ் அடித்து
கேட்டுப்பாருங்கள்
அவர் பரிசீலிக்காமல்
விடுவதும் இல்லை!

அறிக்கைவிட்டு
கேட்டுப் பாருங்கள்
அவர் மறுப்பறிக்கை
விடுவதும் இல்லை.

சரணம், சரணம்
அம்மா சரணம்!

ஐயாவிடம் போகாதீர்கள்
அதிகாரம் இப்போது
அவரிடம் இல்லை!

அம்மா போய்-நாளை
ஐயா வந்தால்
சரணம் சரணம்
ஐயா சரணம்!

கரணம் கரணம்
குத்துக் கரணம்!

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105. காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

436331


# சீமையிலே தேரோட்டம்







ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

323657


➡ லண்டன் ஈஸ்ட்ஹாம் (EAST HAM) பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீமுருகன் ஆலய பத்து நாள் திருவிழாக்களில் ஒன்பதாம் நாளான 16.08.98 அன்று ஈஸ்ட்ஹாம் பகுதிகளின் பிரதான வீதிகளில் ஸ்ரீமுருகப் பெருமான் தேர் உலா வரும் காட்சி.

முழு ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் சைவ பக்தர்கள் லண்டன் மாநகர் வந்து ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். பூஜானுஷ்ட்டானங்களை திருமிகு கைலாசநாதக் குருக்கள் நிறைவேற்றி வைத்தார்கள்.

படமும் தகவலும்: ஹரிராஅனஸ்-லண்டன்.

## இதம்

⬇ இசைத்துறையில் இன்று பிரதான இடத்தைப் பிடித்திருப்பது வயலின். முதன் முதலில் வயலினை வடிவமைத்தவர் அன்ரோனியோ ஸ்ட்ராடிவரின் என்பவர். இத்தாலி நாட்டிலுள்ள சிரெமோனா என்ற இடத்தில் 1644ம் ஆண்டளவில் பிறந்தார். 84 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். இக்காலத்தில் ஸ்ட்ராடிவரின் 635 வயலின்களை வடிவமைத்துள்ளார். பல்வேறு வகையான மொத்தம் 1,100 வாத்தியக் கருவிகளையும் இவர் உருவாக்கியுள்ளார்.

மேலைநாட்டு வாத்தியமாக வயலின் அமைந்திருந்த போதிலும் இன்று கீழைத்தேய மிகப் பழமைவாய்ந்த கர்நாடக இசைக்கும் வயலின் இன்று பிரதானமான இசைக் கருவியாக விளங்கி வருகிறது.

வெவ்வேறு சுருதிகளை வெளிப்படுத்தும் நான்கு தந்திகளுடன் இணைந்த வயலின் எத்தகைய மெட்டையும் இலகுவாக வெளிப்படுத்தக் கூடியது. அதிக பாரமில்லாத- அளவில் சிறிதான இக் கருவியை எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம். பொதுவாக வயலினின் பிரவேசம் இசைத்துறையில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தியதெனலாம். □



## பூமராங்

⬇ நவீன ஆயுதங்களிலும் இல்லாத ஒன்று இந்த கற்கால ஆயுதத்தில் இருக்கிறது அது என்ன? படியுங்கள் புரியும். அவுஸ்திரேலியப் பழங்குடி மக்களிடம் பாவனையிலுள்ள ஆயுதம் 'பூமரங்'. மரத்தாலான வளைந்த கருவி இது. இதனை இதற்குரிய முறையில் வெட்டி எடுத்தால் மிகச்சிறப்பான முறையில் இயங்கக் கூடியது. ஒரு பக்கமாகக் கையில் பிடித்த வண்ணம் சுழற்றி எறிந்தால் குறிதவறாமல் சென்று எதிரியின் தலையை சீவிவிட்டு அதே கதியில் எறிந்தவரின் கைகளில் மீண்டும் வந்து சேர்ந்துவிடும். அதுதான் பூமராங்கின் அதி விசேஷம்.





## வெற்றி யாருக்கு?

⬅ இந்த மோதலின் பின்னர் சுவையான ஆச்சரியமான கதை இருக்கிறது.

அழகான பெண்ணை அடைவதற்காக ஆணழகர்கள் போட்டி போடுவார்கள். போட்டிகள் பலதரப்பட்டவையாக இருக்கும். பழங்காலத்தில் மல்யுத்தம், வாட்போர், சிலம்பம் போன்ற பல வீர விளையாட்டுக்களில் வெற்றிபெறும் ஒருவனுக்கே தனது அழகிய மகளைத் தாரைவார்த்துக் கொடுப்பாராம் தந்தை. இப்பொழுது மனிதர்களிடத்தில் அத்தகைய போட்டிகள் மறைந்துவிட்டன. ஆனால் சில மிருகங்கள் பறவைகள் போன்ற பிராணிகளிடம் இன்றும் காதல் போட்டிகள் இடம்பெறவே செய்கின்றன.

சாரைப்பாம்புகள் இரண்டு இப்படத்தில் சண்டைபோடுகின்றன. இவற்றில் எந்தப்பாம்பு வெற்றி பெறுகிறதோ அதுதான் பெண் பாம்புடன் இணை சேரமுடியும். இப்பாம்புகளிடம் இன்றுவரை மாறாத பண்பாக இது நிலைத்து நிற்கிறது.

## நவீனம்



⬅ உலகமே உள்ளங்கையில் அடங்கும் காலம் இது. படத்தில் இருப்பது மிகப் பிந்திய தயாரிப்பான கையடக்க குறிப்புப் புத்தகம். இதன் பெயர்: ஜியோ புக் என்பி-80சி. பிறதர் நிறுவனம் தயாரித்துள்ளது. விலை 599 அமெரிக்க டொலர்கள். நம்நாட்டு மதிப்பில் ஆக, 40 ஆயிரம் ரூபாய்கள்.

கடுகு சிறிது காரம் பெரிது சங்கதிதான் இதுவும்.

சிறிதாக இருந்தாலும் ஏராளமான உபயோகம். மினிக் கம்பியூட்டர் என்றும் இதனை அழைக்கலாம். பிரின்டருடன் இணைத்து தேவையானதை பிரின்ட் செய்யலாம். இண்டர்நெட்டுடனும் இணைக்கலாம்.

பெருவாரியான தகவல்களை பத்திரப்படுத்தி வைக்கலாம். காதலனுக்கு அல்லது காதலிக்கு கடிதம் எழுதி இரகசியமாக வைத்திருக்கலாம் போன்ற உபயோகங்களும் உண்டு. உலகம் இதன் வடிவில் சட்டைப் பையில். ○

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**28.08.1998**

### செல்வி சுதர்ஷிகா சுதாகர்

⁛ பிரான்ஸில் வசிக்கும் திருநெல்வேலியைச் சேர்ந்த சுதாகர்-நந்தினி தம்பதியினரின் செல்வப் புதல்வி **சுதர்ஷிகா** தனது முதலாவது பிறந்தநாளை 28.08.98 அன்று No. 73 Rue des Rosiers எனும் தனது இல்லத்தில் வெகு சிறப்பாக கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா திருநெல்வேலியில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, கொழும்பில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, டோகா செல்வம் மாமா, சிரிஜா அத்தை, சுவிஸில் வசிக்கும் தயா மாமா, கில்டா அத்தை, மல்லாவியில் வசிக்கும் ராசன் பெரியப்பா, கௌரி பெரியம்மா, அன்ரா மார்களான கிருஸ்ணா, ஷாலினி, விஜி, தீபன் மாமா, லக்கியா மச்சாள், கண்ணன் மச்சான், நிஷானி அக்கா, நிருஷன் அண்ணா, நிவேக்கா அக்கா ⁛ பிரான்ஸில் வசிக்கும் சுதன் சித்தப்பா, மாமன்மார்களான தயா, சாந்தன், சுரேஸ், இத்தாலியில் வசிக்கும் கண்ணன் சித்தப்பா, சுரேந்திரன் மாமா குடும்பத்தினர், கனடாவில் வசிக்கும் சந்திரன் சித்தப்பா, ரவி சித்தப்பா குடும்பத்தினர், கொழும்பில் வசிக்கும் மாமன்மார்களான கேதீஸ், விஜய், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தாத்தா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நல்லூர்க்கந்தனின் அருள்பெற்று, பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*தகவல் எ.நாகராசா (அம்மப்பா) கொழும்பு-13.*

## சிங்கார சிங்கை

➡ தென்கிழக்காசியாவிலேயே மிக உன்னதமான இடத்தைப் பெற்று பல சிறப்பம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள சின்னஞ்சிறிய நாடு சிங்கப்பூர். மலேசிய தீபகற்பத்தின் தெற்கு முனையில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு பெரிய தீவையும் 50 சிறு தீவுகளையும் கொண்ட இத்தேசம் ஆக 618 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடையது. மக்கள் தொகை ஆக 29 இலட்சம்தான்.

சீனர்கள் 78 விழுக்காடும், மலாய்க்காரர்கள் 14 விழுக்காடும், இந்தோ-பாகிஸ்தானியர் 7 விழுக்காடும் பிற மக்கள் ஒரு விழுக்காடுமாக இருக்கும் இந்நாட்டில் இந்தோ-பாகிஸ்தானியர் என்ற பிரிவில் தமிழ் பேசுவோர் ஒரு குறிப்பிட்ட தொகையினரே உள்ளனர். இருப்பினும் ஆங்கிலம், சீனம், மலாய் ஆகியவற்றுடன் தமிழ்மொழியும் அந்நாட்டின் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு இன-மொழி பிணக்குகள் மிகமிகக்குறைவே.

நவீன வசதிகளனைத்தையும் கொண்ட சிங்கப்பூரில் இயற்கை வளங்கள் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம். இருப்பினும் பொருளாதார நிலையில் மிக உச்சக்கட்டத்தை எட்டிப் பிடித்துள்ளது. இதற்கு மிக வேகமாக வளர்ந்து வரும் நன்கு திட்டமிடப்பட்ட நகர அபிவிருத்திகளே காரணம். ஓர்ச்சாட் சாலை என்ற மத்திய வர்த்தக மையம்தான் படத்தில் காட்டப்பட்டுள்ளது. கட்டடங்களையும் கலா ரசனையுடனும் வசதிகள் நிறைந்த வகையிலும் திட்டமிட்டு அமைத்துள்ளனர்.

